Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

श्री कुन्दमूलपुर स्तोत्र नवरत्न मालिका

திருப்பெருந்துறைத் துதி நவ மணிகள்

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமை!

தமிழ்ப் பொழிப்பும்
தத்துவ விளக்கங்களும்

திருவையாறு வே. இரமணன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தந்தது உன் தன்னை; கொண்டது என் தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री कुन्दमूलपुर स्तोत्र नवरत्न मालिका

तत्त्वपञ्चरत्न मन्त्रराजस्तव सहिता

திருப்பெருந்துறைத் துதி நவமணிகள்

தத்துவபஞ்சரத்தினம் மற்றும் மந்திர ராஜத்துடன்

(வடமொழிமூலம் - ஆதிகைலாஸ மாகாத்மியம்)

தமிழில் பொழிப்புரை மற்றும்
விளக்கக் குறிப்புரைகள்

திருவையாறு வே. இரமணன்

13.07.2005

திருப்பெருந்துறை பார்த்திவ ஆனி உத்தர
உபதேசத் திருநாள் வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1000 பிரதிகள்,
முதல் பதிப்பு ஜூலை 2005.

© உரிமை : திருவையாறு வே. இரமணன்

Copies can be had from
V. Ramanan
16-C, Ladmal Gardens,
Chakravarthy Street Extension,
East Tambaram, Chennai - 600 059.
Phone : 044-22898276 or @ 0471-2726708

K. பாலசுப்பிரமணிய நம்பியார்
பூஜகர்
நம்பியார் ஸ்தானிக ஸமாஜம்
மேற்கு மட விளாகம்,
ஆவுடையார் கோயில் - 614 618
தொலைபேசி : 04371 - 233723; 09443952259

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்சிற்றம்பலம்

குருநாதர் துதி

திருவாத வூர்வந்து திருச்சிற்றம் பலம்போந்து
கருவாதை யாந்தீரக் கறைக்கண்டன் கழன்மலரார்
தருவேத வாசகத்தேன் தமிழுமிழும் அறுபதமாம்
குருநாதன் இருபதமே ஒரு பதமாம் குறுகிடவே.

அன்பி லாத என்னை அன்ப னுக்குவாய்,
வன்பு லாலின் வேகம் போக மாற்றுவாய்;
தென்மு கத்த தெய்வந் தேடி யுண்டதோர்
பொன்மு கத்த வண்டே! பூ விரோதமே!

பொழிப்புரை

திருவாதவூரில் தோன்றித் தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் புகுந்து ஒளித்த 'குருநாதன்' என்னும் வண்டு, எங்கள் பிறவி நோய்க்கு மருந்தாகச் சிவபிரான் திருவடிமலரில் ததும்பும் வேதமொழியான ஞானத்தேனைத் தன் வாய்மொழியாகத் தமிழில் உமிழ்ந்து சென்றது. குருநாதனின் திருவடி இணையே தன்னை அடைந்தார்க்கு ஒப்பற்ற சிவபதமாக விளங்கித் தோன்றும்.

உலகியலோடு முரண்பட்டு, தென்னன் பெருந்துறையான் என்னும் கருணைமுகங் கொண்ட தெய்வமலர், ஞானமுகங் கொண்ட வண்டாகிய உன்னை வழிமறித்து உண்டுவிட்டது! சிவபிரான் திருவடிக்குச் சற்றும் உண்மை அன்பிலாத என்னைத் தூய அன்பனுக்கி, (அப் பெருமானை உள்ளத்தே உணர்தற்குத் தடையாக உள்ள) இந்திரிய வேகம் முடை நாறுகின்ற காய மாயத்தையும் குருநாதனுகிய நீயே கழித்தருள வேண்டும்.

(தென்முகம் = கருணையுள்ளம்; பொன்முகம் = ஞான வேட்கை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதினம்

23ஆவது குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்

அவர்களின் சீரிய பேரருள் துணை கொண்டு

இந்நூல் வெளியிடப்படுகிறது.

நிவேதனம்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

என் ஆசிரியப் பெருந்தகை

வேதாகமச் செம்மல்

அமரர் இரா. சுப்பிரமணிய சாத்திரியார்

(புதுவைப் பிரெஞ்சு - இந்திய கலைக்கழக முன்னாள் புலவர்)

அவர்களின் திருவடித் தாமரைகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

26வது குருமகாசந்நிதானம்

தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை - 609 001

ஆசியுரை

காண்டனன் காண்டனன் காரிகை யாள்தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத்தூர் எம் அடிகட்கு ஆள்
பூண்டனன் பூண்டனன் பொய் அன்று;
சொல்லுவன் கேண்மின்கள்,
மீண்டனன் மீண்டனன் வேதவித்து அல்லா தவர்கட்கே!

- ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள்

திருமுறைகள் வேத விழுப்பொருளை விளக்குவன. 'வேதத்தின் பயனாம் சைவம்' என்பதனைச் சித்தரிக்கும் தேவாரத் திருமுறைகள், வேதம் - ஆகமம் - புராணம் - இதிகாசம் வழிப்படுத்தும் செய்திகளை வழிமொழிவனவாகும். மாட்டிற்கு, முன்தோன்றிய வால், கால்கள் முதலிய உறுப்புகளை விடப் பின்தோன்றிய கொம்புகட்கு வலிமை மிகுதியாயிருப்பதைப் போலத் திருமுறைகள் ஆற்றல் பெற்று விளங்குவதைப் பதிகப் பெருவழியில் பயணித்த பாங்கே, தமிழர்கட்கு மட்டுமன்றி மற்றவர்க்கும் வலிமை கூட்டுவிக்கிறது. ***தோத்திரம் ஆற்றல் மிக்கது.***

சமயாசாரியர்களில் எட்டாந் திருமுறையை அருளிச்செய்த மாணிக்கவாசகப் பெருமானின் அருளனுபவம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் வழிந்த தலம் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலாகும். இத்தலம் பற்றிய ***"திருப்பெருந்துறைத் துதி நவமணிகள்"***

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் நூலைத் தமிழில் பொழிப்புரை மற்றும் விளக்கவுரையுடன் அன்பர் திரு. வே. இரமணன் தமிழுலகிற்கு வழங்கியிருப்பது போற்றத்தக்கது.

'வடமொழி வல்லவர் வாதவூரர்' என்பதற்கு இந்நூல் சான்றாக உள்ளது. இச்செய்தியை ஆசிரியர் உழைத்து ஆராய்ந்து வெளிப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. இதுவே அறிஞர் செயல்.

'மறைக ளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
'இறைவன்' என்றடி சேர்வார் எம்மையும் ஆள் உடையாரே'

என்று சுந்தரர் அருளிச்செய்தபடி, இத்தோத்திர நூலில் பொழிப்புரை விளக்கக் குறிப்புகள் பெரும்பான்மைத் திருமுறைகளிலிருந்தே மேற்கோள் காட்டி ஒப்பிட்டுக் காட்டியிருப்பதும் ஆசிரியரின் இருமொழித் திறனும் போற்றத் தக்கனவாக உள்ளன. சமய அறிஞர் உலகின் சிந்தனையத் தூண்டும் வகையில், மாணிக்கவாசகரின் உபதேச முறை குறித்து நூல் ஆசிரியர் பலவகை வாதங்களையும் முடிபுகளையும் முன்வைத்துள்ளார்.

வேதாகம வழிநின்று தமிழை ஆராய்பவர்கள் குறைந்துவரும் இந்நாளில், திரு.வே. இரமணன் இதுபோன்ற பணிகளில் மேலுஞ் சிறந்து பொலிந்து விளங்கிட ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவருள் முன்னின்று வாழ்விப்பதாக!

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்நூலின் சிறப்புச் செய்திகள்

- ஆதிகைலாய மான்மியத்திலிருந்து ஆன்மநாதரைக் குறித்த ஆறு துதிகள் ==== 3
- யோகாம்பிகையைப் போற்றும் மூன்று துதிகள் === 27
- ஆன்மநாத தத்துவம் === 41
- ஆன்மநாதரின் 128 திருப்பெயர்கள் = இரு மொழிகளில் (அன்றாட அருச்சனைக் குரியன) === 48
- சிறப்புத் திருப்பெயர்களுக்குத் திருவாசகத்தால் விளக்கம் === 66
- திருவாதவூரடிகளின் உபதேச முறை தெளிவு === 66
- பழைய திருப்பெருந்துறை யாது? = தெளிவு ===108
- நூல் நெடுகிலும் திருவாசகம் காட்டும் திருப்பெருந்துறைப் புராணச் செய்திகள்; திருக்கோயில் மரபு விளக்கங்கள்

இவை அனைத்தும் முதன் முறையாக அச்சேறுகின்றன. படித்து முடித்தால் மீண்டும் படிக்கத் தூண்டும் பனுவல்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாருரு வாய பிறப்பற வேண்டும்;
பத்திமையும் பெறவேண்டும்;
சீருரு வாய சிவபெரு மானே!
செங்கமல மலர்போல
ஆருரு வாய என் ஆரமுதே!
உன் அடியவர் தொகை நடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூன்முகம்

எங்குருநாதராகிய திருவாசக ஆசிரியரைப் பரமகுரு நாதராகிய ஆன்மநாதப் பெருமான் பார்த்தும், பரிசித்தும், திருவடி சூட்டியும், மணி மொழி பேசியும் ஆட்கொண்டு பேரின்பப் பெருவெள்ளத்துள் அழுத்திப் பிறப்பறுத்த திருத்தலம் திருப் பெருந்துறையாகும்.

"பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து"

என்பது திருவாசகம். 'பெருந்துறை' என்று பிதற்றிக் கொண்டிருந்தாலே பிறப்பு அறும்!

பல ஆண்டுகளுக்கு முன்பாகத் திருப்பெருந்துறையைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். தில்லை மூவாயிரம், திருவீழிமிழலை ஐநூறு என்பதைப் போல இறைபணிக்கெனத் திருப்பெருந்துறையில் முந்நூறு அந்தணர்கள் தொன்று தொட்டு உண்டு. இவர்களை நம்பிமார் என்பார்கள். இவர்களுள் ஒருவராகிய பிரமஸ்ரீ K. பாலசுப்ரமணிய நம்பியார் அவர்களை அப்போது சந்தித்தேன். இவர் ஆன்மநாதரின் திருவடிகளில் அகலாத பற்று கொண்டவர்; அடியார்களை அன்போடு வரவேற்று ஆவன செய்பவர்; ஆன்மநாதரின் தியான சுலோகத்தையும், ஆன்மநாத பஞ்சகத் திலிருந்து சில பாடல்களையும் ஆன்மநாதப் பெருமான் சந்நிதியில் இவர் அன்று எனக்குக் கூறக்கேட்டு மெய் மறந்தேன். இப்பாடல்களை நான் எழுதிக் கொள்ள விரும்பிய போது நம்பியார் அவர்கள், 'ஹரிகதாபாஸ்கர' A.H. ஸீதாராம பாகவதர் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி நட்பு கொள்ளச் செய்தார்கள். இவர்கள் புகழ்பெற்ற ஆவுடையார்கோயில் ஹரிஹர பாகவதர் என்பாரின் புதல்வர் ஆவார். பிரமஸ்ரீ ஸீதாராம பாகவதர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆவுடையார் கோயில் திருத்தலவாசி ஆவார். ஆனி மற்றும் மார்கழி உற்சவங்களில் முறையே எட்டாந் திருநாள் மற்றும் பத்தாந் திருநாள் மாலை மணிவாசகப் பெருமான், ஆன்ம நாதர் முன்னிலையில் திருவாசகம் விண்ணப்பிக்கும் திருவிழா நடக்கும். அவ்வமயம், பாகவதர் அவர்கள் முன்னதாகத் திருவாதவூரரின் திருச்சரிதத்தைக் கூறி அதைத் தொடர்ந்து திருவாசகப் பதிகங்களில் ஒவ்வொரு பாடல் இசைக்கத் தீபாராதனை நடைபெறும். இந்திருப்பணியை இக் குடும்பத்தார் பரம்பரையாகச் செய்து வருகின்றனர்.

'ஆதிகைலாஸ மாகாத்மியம்' என்ற பெயரில் வடமொழியில் உள்ள திருப்பெருந்துறைத் தலபுராணத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்றை எனக்குப் பாகவதர் காட்டினார். இது கிரந்த எழுத்தில், மூலச் சுவடியிலிருந்து, இவர்தம் தந்தையார் காலத்தில் அன்பர் ஒருவரால் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டதாகும். இந்நூலுக்குப் பாகவதரிடம் வேறு நகல் இன்மையாலும், எனக்கு அப்போது கிரந்த எழுத்துப் பயிற்சி இல்லை என்பதாலும், புராணத்திலிருந்து முக்கியமான தோத்திரங்களை எனக்குப் படித்துக் காட்டுமாறு கேட்டுக் கொண்டு, அவற்றை நாகர எழுத்தில் எழுதிக் கொண்டேன். என்னுடைய நித்திய பூசையில் ஆன்ம நாதர் திருமுன் விண்ணப்பிக்கும் எண்ணத்துடன் இத்துதி மணிகளை எழுதிக் கொண்டேன். நான் அறிந்த நம்பிமார் சிலரிடம் இவற்றின் நகல்களை அளித்து, இல்லத்திலோ, கோயிலிலோ இத்துதிகளை அன்றாடம் பாராயணம் செய்யுமாறு வேண்டிக் கொண்டேன்.

தற்போது திருப்பெருந்துறைத் திருக்கோயிலில் குடமுழுக்கிற்கான திருப்பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன. விரைவில் குடமுழுக்கு நிகழ உள்ளது. அதற்கு முன்னோடியாகத் தமிழில் பொழிப்புரையுடன் இத் தோத்திர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிகளை அச்சிட்டு, ஆர்வமுள்ள அடியார்களுக்குப் பயன்படுமாறு செய்வது இறைவன் உவப்பிற்கு உரிய செயல் என்று பிரமஸ்ரீ K. பாலசுப்ரமணிய நம்பியார் எனக்குக் கட்டளை இட்டனர். திருப்பெருந்துறையின் வடமொழித் தல புராணம் இதுகாறும் அச்சேறியதாக அறியக் கூடவில்லை. (மகாலிங்க நம்பியாரின் குமாரர் ஆத்மநாத நம்பியார் என்பவர் வடமொழிப் புராணத்தின் சாரத்தைத் தமிழில் சிறு நூலாக 1925 ஆம் ஆண்டிலும், அதனை விரித்து மணிப்பிரவாள உரைநடையாக 1933 (ஜனமித்திரன் பிரஸ், புதுக் கோட்டை) ஆம் ஆண்டிலும் மீண்டும் 1941 ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார். இப்பெரியார்வசம் வடமொழி மூலச் சுவடி இருந்துள்ளது.) ஆகவே அதன் சாரமாகிய இத்துதிமணிகளை அவசியம் உடன் அச்சேற்ற வேண்டும் என்ற அவா எனக்கு முன்னரே இருந்தது. இச்சிறுநூலின் சிறப்பு அமிசம், மணிவாசகப் பெருமான் ஆன்மநாதர் மீதும், யோகாம்பிகை மீதும் வடமொழியில் பாடியதாகக் காணும் துதிமணிகளாம். இவை திருவாசகம் போலவே, வடமொழியிலும் மாணிக்க மொழிகளாய் அமைந்திருத்தலைப் படிப்போர் உணர்வர்.

நூல் அமைப்பு

முதலில் ஸ்ரீ ஆன்மநாதரின் தியானமும், ஸ்ரீ யோகாம்பிகையின் பிரபாவமும் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து ஒன்பது துதிகள் நவமணிகளாக ஒளிர்கின்றன. இவற்றில் முன் ஆறும் அப்பனையும், அம்மையைப் பின் மூன்றும் அலங்கரிக்கின்றன. அடுத்து, காரணப் பிரமமாக அருவத்திருமேனியுடன் விளங்கும் ஆன்மநாதரின் தத்துவத்தை விளக்கும் ஐந்து பாடல்கள் அணிசெய்கின்றன. இறுதியில் ஆன்மநாதரின் அன்றாடப் பூசையில் இடம் பெறும் 'மந்திரராஜம்' எனப்படும் 128

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர்கள் சுலோக வடிவிலும், நாமாவளியாகவும் தரப்பட்டுள்ளன. இத் திருப்பெயர்கள் பிரணவத்துடன் கூடிய திரு ஐந் தெழுத்துக்களால் அமைந்திருப்பது இவற்றின் சிறப்பாகும். இத்திருப்பெயர்கள் ஆன்மநாதரை அருச்சித்தற்காக ஆதியில் பிரமனால் காணப்பட்டவை. ஆன்மநாதருக்கே உரியவை. இவற்றில் ஆன்நாதரைச் சிறப்பாகக் குறிக்கும் சில பெயர்களுக்குத் திருவாசக அடிப்படையில் உரைவிளக்கக் குறிப்புகளும் தரப்பெற்று நூல் நிறைவுறுகிறது.

இவையனைத்தும் வடமொழிக் காந்த மகாபுராணத்தின் சனத்குமார சங்கிதையில் உள்ள சிவரகசிய-உத்தரகண்டத்தில் அமைந்த ஆதிகைலாஸ மாகாத்மியத்தில் காணப்படுபவை ஆகும்.

இவ்வடமொழிப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பாகத் திகழ்வதே பழைய திருப்பெருந்துறைப் புராணமாகும். இதனை இயற்றியவர் திருவாவாடுதுறை ஆதினைத்தைச் சார்ந்த துறவியாகத் திகழ்ந்த சுந்தரலிங்க முனிவர் ஆவார். இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையத்தாரால் 1976ஆம் ஆண்டு (வெளியீடு எண் 158) வெளியிடப்பட்டுள்ளது.

புதிய திருப்பெருந்துறைப் புராணம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு 1892 ஆம் ஆண்டிலேயே பெரும் பேராசிரியர் உ.வே. சாமிநாதய்யரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு புராணங்களும் முக்கியமான புராணச் செய்திகள் சிலவற்றில் தம்முள் மாறுபடுகின்றன. புதிய புராணம், காந்த புராணத்து உருத்திர சங்கிதையை மூலநூலாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் பழைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெருந்துறைப் புராணத்தின் வடமொழி மூலமாகிய ஆதி கைலாஸ மான்மியத்தின் சுவடியே இன்று நமக்குக் கிட்டும் நிலையில் உள்ளது. புதிய புராணத்தின் செய்திச் சுருக்கத்தை அறிய விரும்புவோர் திருவாவடுதுறை ஆதின வெளியீடான 'திருப்பெருந்துறைத் தலவரலாறு' (1991) என்னும் நூலைப் பார்க்கவும். நம்முடைய நூற் செய்திகள் வடமொழிச் சுவடியையும் பழைய புராணத்தையும் அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ளன.

துதி நவமணிகளின் சிறப்பு

திருப்பெருந்துறையின் பதினாறு பெயர்களில் திரிமூர்த்திபுரம் என்பது ஒன்று.

ஏனைய பெயர்கள், அனாதி மூர்த்தத்தலம், ஆதிகைலாயம், பூலோக கைலாயம், தென்கயிலாயம், குருந்தவனம் (குந்தமூலபுரம்), சிவபுரம், உபதேசபுரம், சதுர்வேதபுரம், பவித்திரமாணிக்கபுரம், ஞானபுரம், தேசவனம் (ஜோதிவனம்), பராசக்திபுரம், யோகபீடபுரம், யோகவனம், பெருந்துறை என்பனவாம்.

இவை தவிர, சன்னவனம், சிவயோகவனம், சிவக்கேத்திரம், பிரமதேசம், மாயாபுரம் ஆகிய பெயர்களும் வடமொழிப் புராணத்தில் காணப்படுகின்றன.

'ஆதி கயிலை, தென்கயிலை, அனாதி மூர்த்தம், பூகயிலை,
சோதி வனம், சீர் ஞானபுரம், யோக பீடம், யோகவனம்,
தீது தீர்திரி மூர்த்தி, பராசத்தி, பவித்திர மணி, நாலாம்
வேத, சிவ, உப தேசபுரம், குருந்த வனமாம் பெருந்துறையே!'

என்ற பாடலால் 16 பெயர்களையும் தொகுக்கலாம்!

காரியக் கடவுளராகிய மும்மூர்த்திகளும் காரணப் பிரமமாகிய ஆன்மநாதரை வழிபட்டதலம் திருப்பெருந்துறையாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. ஒரு சிருட்டியின் தொடக்கத்தில் திருமாலின் உந்திக் கமலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பிரமன் தன் தனிமையைக் கண்டு மிகவும் அஞ்சி நான்கு திசைகளிலும் திரிந்தான். தென் திசையில் மின்னல் கூட்டத்தை ஒத்த ஒரு பேரொளியைக் கண்டு அதனை அவன் நெருங்கவும் அது மறைந்தது. உடனே ஆற்றவொண்ணுமல் பிரமன் அழ ஆரம்பித்தான். மிகுந்த இரக்கத்தோடு ஆன்மநாதர் குருவடிவில் சகளராகக் காட்சி தந்து பிரமனைத் தடவிக் கொடுத்துத் தேற்றினார். பிரமனின் அச்சத்திற்கும் ஐயங்களுக்கும் விடையாகத் தன்னையும் அவனையும் பற்றி ஆன்மநாதர் அறிவித்தார். தான் ஆன்மா என்றும் தனக்கு உறைவிடம் மகாகயிலாயம் என்றும் பிரமனுகிய அவன் ஆன்மபூ என்றும் அவன் உறைவிடம் சத்திய உலகம் என்றும் அவனது தொழில் சிருட்டி என்றும் விளக்கினார். பிரமனைக் கொண்டு உலகங்களைச் சிருட்டித்துவரும் ஆன்மநாதர் இப்பிரம்னுக்கும் சிருட்டித் தொழிலைக் கற்பிக்க எண்ணினார்.

ஆன்மநாதர் தன் நெற்றிக் கண்ணுல் விழித்துப் பூமியைப் பிளந்து பாதாள கங்கையை மேலே வரச் செய்தார். தீயால் உண்டாகிய இத்தீர்த்தம் அக்கினி தீர்த்தம் எனப்படும். இந் நீரைக் கொண்டு பிரமனை அபிடேகித்து அவனுக்குச் சாதகாதிகளைச் செய்து, பிரம மந்திரத்தை உபதேசித்தார். இதனால் திருப்பெருந்துறையாகிய ஆதி கயிலாயம் பிரமதேசம் எனவும் பெயர்பெறும். இங்ஙனம் தீக்கை பெற்ற பிரமனுக்கு உள்ளத்தில் நான்கு வேதங்களும் புலனாகும் வண்ணம் இத்தலத்தில் அவற்றைத் தோன்றச் செய்தார். இக்காரணம் பற்றிச் சதுர்வேதபுரம் என்றும் பெயர்பெறும். உணர்த்தப் பட்ட வேதங்களைக் கொண்டு உலகைப் படைக்குமாறு பிரமனுக்கு ஆன்மநாதர் கட்டளை இட்டார். இதற்காகப் பிரமன் கடுந்தவஞ் செய்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரமனின் தவத்தின் பயனாக இறைவன் மீண்டும் காட்சி தந்து பிரமனுக்கு எண்மடங்கு ஆயுளும், சத்திய உலகமும், கலைமகள் முதலிய தேவியரையும் அளித்து மறைந்தான். இவற்றில் பற்றில்லாமல், இறைவனின் காட்சி ஒன்றையே வேண்டிப் பிரமன் ஈசனைத் துதித்தான். பிரமனுக்காக இறைவன் குருந்தமர வடிவில் தோன்றித் தன்னை இவ்வடிவில் பூசித்து வருமாறு ஆகாய வாணியாற் கூறினான்.

இந்திரநீலம், கோமேதகம், கனகம் ஆகிய நிறங்களில் மும்மூர்த்திகளே மூன்று பெருங்கிளைகளாகவும், ஆகமங்கள் சிறு கிளைகளாகவும், மிருதிகள் நிழலாகவும், ***ஓங்காரம் பாதாளத்தைக் கடந்து செல்லும் வேராகவும்,*** நான்மறைகள் கட்புலனாகும் வேராகவும், அறங்கள் இலைகளாகவும், ஞானம் மலராகவும், யோகாம்பிகை அதன் மணமாகவும், ஆன்மநாத சிவம் அதன் மதுவாகவும் முத்திக்கனி பழுத்து அதனை உண்ணவரும் ஞானிகளாகிற பறவைக் கூட்டங்களுடன் நெருங்கி முழுவதும் ஆன்மநாதவடிவாக இக்குருந்தமரம் திகழ்ந்தது.

முன்னதாக இறைவனின் பெருங்கருணையை வியந்து பிரமன் வேத பாதங்களால் ஆன்நாதரைத் துதித்தான். அத்துதியே நவமணி மாலையின் முதல் மணியாகும். பின்னரும் குருந்தீசனை ஓர் அட்டகத்தால் பிரமன் துதித்துள்ளான்.

சத்திய உலகத்திலிருந்து அன்றாடம் வந்து குருந்தவடிவில் ஆன்மநாதரைப் பூசித்துச் சென்ற பிரமன் உண்டாக்கிய தீர்த்தம் பிரமதீர்த்தம் என்றும் வைதிக தீர்த்தம் என்றும் அழைக்கப்படும். இது அக்கினிதீர்த்தத்திற்கு மேற்கே உள்ளது. இதற்கருகில் உள்ள கொன்றைமரத்தடியில் பிரமன் தன் ஆயுளில் ஓராண்டு த்வமிருந்ததாகப் புதிய புராணம் கூறும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்குளம் தற்காலத்தில் முதன்மையப்பர் சந்நிதிக் குளம் என்று அழைக்கப்படுகிறது.

2. தன் உந்திக் கமலத்தில் தோன்றிய பல பிரமர்களில் ஒருவன் இங்ஙனம் சீவன் முத்தனுகத் திகழக் கண்டு வியப்புற்ற திருமால், அவனை உசாவித் திருப்பெருந்துறைக்கு ஆற்றுப் படுத்தப்பட்டுக் குருந்தமூலத்திற்கு வடதிசையில் அரசமரத்தின் கீழ் விஷ்ணு (நாராயண) தீர்த்தக் கரையில்வெகுகாலம் கடுந்த தவம் இருந்து ஆன்மநாதரைத் தரிசித்து, மகிழ்ந்து, கூத்தாடித் துதித்ததே இரண்டாவது மணி ஆகும். திருமாலுக்கும் தேசிக வடிவில் தோன்றிய ஆன்மநாதர் பிரணவ பஞ்சாக்கரம் எனப்படும் ஆறெழுத்தை உபதேசித்து, காத்தல் தொழிலையும் வல்லமை கொண்ட மாயையையும் வைகுந்த வாழ்வையும் திருமகளையும் அளித்தார். தான் தவம் செய்த இடத்தில் திருமகளோடு திருமால் எழுந்தருளியுள்ளார்.

3 - 4 சர்வசங்கார காலத்தில் அரிபிரமர்களை ஒடுக்குகின்ற காலாக்னிருத்திரர், நூற்றெட்டு உருத்திரர்கள் புடைசூழத் திருப்பெருந்துறையில் குருந்த வனத்திற்குக் கிழக்கே உள்ள மகிழவனத்தில் ஆன்மநாதரின் திருவடிகளை நெஞ்சில் பதித்துத் தவமியற்றினார். சில நாள்களில் ஆன்மநாதரின் அற்புதத் காட்சியைக் கண்டு ஆடிப்பாடித் துதித்தார். அத்துதியே மூன்றாம் மணியாக உள்ளது. ஆன்மநாதர் உருத்திரமூர்த்திக்கு இரகசிய பஞ்சாக்கரத்தை உபதேசித்து, ஈசானிய திக்கிலிருந்து கொண்டு தன் அடியார்களுக்கு நிரம்ப அருளும் திறத்தையும் அனைத்தையும் ஒடுக்கும் தொழிலையும் அருளினார். காலாக்னிருத்திரரின் வேண்டுகோளின்படி இறைவன் இவ்விடத்தில் கயிலாயநாத இலிங்கமாக எழுந்தருளினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னால் தோன்றலாகும் 1008 இலிங்கங்களுக்கும் முதன்மையான இவ் ஆதிகயிலாய நாத இலிங்கத்தைச் 'சின்மய இலிங்காட்டகம்' கொண்டு உருத்திர தேவர் துதிசெய்தார். இத்துதியே நான்காம் மணியாக கோக்கப்பட்டுள்ளது. தாம் தவமியற்றிய இடத்தில் உருத்திரர் உண்டாக்கியிருந்த தீர்த்தத்தையும் அவர் வேண்டுகோளின்படிப் பவப்பிணியைப் போக்கும் சிவ (கங்கைத்) தீர்த்தமாக ஆன்மநாதர் அருள் செய்தார். ஆதி கயிலாயநாத இலிங்கத்தை உள்ளன்போடு ஒரு முறை தரிசித்தாலும் முத்திப்பேறு வாய்க்கவும் அருள்புரிந்தார்.

5. தக்கன் செய்த சிவநிந்தையைத் தாங்கொணாது, தன் உடலைத் துறந்த தாட்சாயணி, இமவானுக்கு மகளாகத் தோன்றித் திருப்பெருந்துறையை எய்தி, அங்கு யோகபீடத்தில் எழுந்தருளியுள்ள காரணக்கருணை நாயகியாகிய ஆன்மநாதரின் அருட்பெருஞ்சக்தியோடு இணைந்து தவமியற்றிக் கயிலையில் ஈசனை மணந்தாள். அப்பெருமாட்டி தவமியற்றுமுன் ஆன்ம நாதரைத் துதித்ததே ஐந்தாவது மணியாக அழகு செய்கிறது.

6. தனக்குத் திருப்பெருந்துறையுறை கோயிலையும், செந்தழல் புரைதிரு மேனியையும், அந்தணன் ஆவதையும் காட்டி ஆட்கொள்ள உள்ள ஆன்மநாதரைத் திருப்பெருந்துறைக்கு வந்த உடன் வாதவூரடிகள் போற்றித் துதித்தது ஆறாவது மணியாக விளங்குகிறது. இத்துதியில் திருவாசகச் சொற்றொடர்கள் ஆங்காங்கு மிளிர்வதைப் பொழிப்புரையூடு விளக்குகின்றோம்.

7. சிவயோக நாயகியை இந்திரன் துதித்தது ஏழாவது மணியாகும். இதில் உள்ள ஐந்து பாடல்களும் வழிஎதுகை என்ற ஓசை நயத்துடனும் சிறந்த பொருள் நலத்துடனும் ஒளிர்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. மணிவாசகப் பெருமானை ஆன்மநாதர் குருமூர்த்தியாகக் குருந்தடியில் எழுந்தருளி ஆட்கொண்ட தருணத்தில், அவரைச் சுற்றியிருந்த சீடர் குழாத்தில் இரௌக்ஷாயணர் என்ற இருடி முக்கியமானவர் ஆவார். இவர்வழி வந்த கோத்திரக் காரர்கள் தில்லை மூவாயிரத்திலும், திருப்பெருந்துறை முந்நூற்றிலும் உண்டு. கிருதயுகத்தில் அன்றாடம் சத்தியஉலகிலிருந்து திருப்பெருந்துறைக்கு வந்து ஆன்மாநாதரைப் பூசித்துச் சென்ற பிரமன், திரேதாயுகத்தில் ஆன்மநாதர் திருமுன்னர் ஒருவேள்வி இயற்றினான். அவ்வேள்வித் தீயிலிருந்து ஏழு வயதுச் சிறுவனாக இரௌக்ஷாயணர் தோன்றினார். தீயிலிருந்து தோன்றியதால் இவருக்கு அக்னிவேசர் என்ற பெயரும் உண்டு. இவருக்குப் பிரமன், காயத்திரி, நான்கு மறைகள், ஆறு அங்கங்கள், மந்திரராஜம், குரு பஞ்சாக்கரம் ஆகியவற்றை உபதேசித்து, நாடோறும் ஆன்மநாதரைப் பூசித்து வர நியமித்தான். சிலகாலஞ் சென்றபின் அக்னிவேசருக்குத் துணை செய்வதற்காக மற்றொரு வேள்வியைப் பிரமன் இயற்றி, பதினொரு ஆகுதிகள் செய்து, வத்ஸர், குத்ஸர், அங்கிரஸ், கர்கர், முத்கர், அத்ரி, ஹரிதர், பிருகு, பரத்வாஜர், கபிலர், கண்வர் என்ற பதினொருவரையும் படைத்து ஆன்மநாதரின் ஆராதனத்தில் ஈடுபடுத்தினான். இப் பதினொருவருக்கும் இரௌக்ஷாயணர் குருவாய் விளங்கி இவர்களுக்காக ஆக்னிவைச்யம் என்ற சூத்திரத்தைப் படைத்தளித்தார். கலியுகத்தில் பிரமனின் ஆணைப்படி இவ்வனைவரும் இல்லறம் புக்கனர். அத்ரிபுத்ரியான கலாவதியை மணந்த இரளக்ஷாயணர், சிவஸ்வாமி, ரோமசர் ஆகிய புதல்வர்களைப் பெற்றார். ஏனையோரின் வழித்தோன்றல்களுமாக முந்நூறு அந்தணர் குடும்பங்கள் ஆன்மநாதரின் பூசைக்காக உண்டாயின. இவர்களில் சிலருக்குத் தன் கோத்திரத்தையும் அனைவர்க்கும் தன் சூத்திரத்தையும் அளித்தவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரௌக்ஷாயணர் ஆவார். இப்பெருமான் யோகாம்பிகையைத் துதித்த அட்டகம் எட்டாவது இரத்தினமாக இணைக்கப்பட்டுள்ளது.

9. இறுதியில், ஒன்பதாவது மணியாக ஒளிர்வது, வாதவூரடிகள் சிவபுரநாயகியைப் போற்றிய அட்டகமாகும். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியை, இணையற்ற அணி நலன்களுடன் அமைந்த பாடல்களால் அடிகள் துதித்துள்ளார். சிறுபெண்ணைப் போல் துள்ளிக் குதிக்கும் செய்யுள் நடையும், வழி எதுகை இன்பமும், பண்ணமைந்த சொற்சுவையும், மென்மையும், காம்பீர்யமும் ஒருங்கிணைந்து இப்பாடல்களில் உலவக் காண்கிறோம்.

தத்துவபஞ்சகமும் மந்திர ராஜமும்

இறைவன் அருவமாக, அநுதிமூர்த்தமாக அருள் பாலிக்க எழுந்தருளி இருப்பது திருப்பெருந்துறை என்ற திருத்தலம் ஒன்றே. '*அருவாய்* மறையில் அந்தணனாய் ஆண்டுகொண்ட திருவான தேவற்கே' (10.14)

'உரு நாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒரு *நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லான்*' (11.1)

'திருவார் பெருந்துறை மேயபிரான் என் பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்' (11.2)

'சோதியாய்த் தோன்றும் உருவமே! *அருவாம்*
ஒருவனே! சொல்லுதற்கு அரிய
ஆதியே!.....திருப்பெருந்துறையுறை சிவனே' (22.9)

'போதலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருள்' (43.1)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற திருவாசகங்களால், மணிவாசகர், தன்னை ஆட்கொண்ட திருப்பெருந்துறையான் அருவலிங்கன் என்று அறிவிக்கிறார்! சிவம், சக்தி, நாதம், பிந்து, சதாசிவம், மகேசம், உருத்திரம், விஷ்ணு, பிரமம் ஆகிய நவந்தரு பேதங்களின் பெயரில் நவதீர்த்தங்களும், முந்நூற்றுவரின் நில உரிமையைக் காக்குந் திருவிளையாட்டாக இறைவனால் வரவழைக்கப்பட்ட 66 கோடி தீர்த்தங்களும் இங்கு இருப்பதால் இத்தலம் பெருந்துறை என்னப்பட்டது. இது ஆறு ஆதாரங்களுக்கும் அப்பாற்பட்ட ஷோடசாந்தத் தலமாகும். இங்கு ஆறு சபைகள் உண்டு.

இங்குக் குருந்த மரத்தடியில் மகாயோக பீடத்தில் அருவமாகக் குருவடிவில் எழுந்தருளியுள்ள பெருமானின் உண்மையை விளக்குவது - வியாச முனிவர் அருளிச் செய்த தத்துவ பஞ்ச ரத்தினம் ஆகும். இது ஆத்மேச பஞ்சகம் என்றும் அழைக்கப்படும்.

ஆதியில் ஆன்மநாதரின் திருவருளால் சீவன் முத்தராகவும் சிவபத்திச் செல்வராகவும் விளங்கிய பிரமதேவனுல், ஆன்மநாதரை வழிபடுவதில் முனைப்புடன் விளங்கிய இரெளக்ஷாயண மகரிஷிக்கு மந்திரராஜம் என்ற 128 திருப்பெயர்களும் உபதேசிக்கப்பட்டன. பின்னால் இவை தொளமிய மகரிஷியால் புரூரவா* என்ற மன்னனுக்கும் உபதேசிக்கப்பட்டன. இவை ஆன்மநாதரின் அன்றாடப் பூசையில் தக்ஷிணாமூர்த்தி ஸஹஸ்ரநாமத்துடன், அஷ்டோத்தரமாகப் பயன் படுத்தப் படுகின்றன.

---

*திருப்பெருந்துறைப் புராணத்தைக் கயிலையில் இறைவன் தேவிக்குக் கூற், உடனிருந்து கேட்ட நந்தி சனற்குமாரற்கும், சனற்குமாரர் நாரதருக்கும் பின்னுளில் நாரதர் இறைவனை மணம்புரியத் தவமியற்ற விரும்பிய உமையம்மைக்கும் உரைத்தனர். இவ் ஆதிகைலாய மான்மியத்தைத் தெளமியர் புரூரவாவிற்கு உரைத்த வண்ணம், பின்னுளில் யாக்கியவல்கியர் மிதிலை மன்னன் ஜனகனுக்கு உணர்த்த, அதே வண்ணம் நைமிசாரணிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்றியுரை

இந்நூலின் வடமொழி மூலத்தை நான் பெற்ற போது, பல பிழைகள் மலிந்திருந்தன. ஒப்பு நோக்கி உணர வேறு படிகளும் இல்லை. புராண மூலத்துடன் பொருந்த வேண்டும் என்ற பொறுப்புடன், ஊகித்து உணர்ந்தும், சிந்தித்துச் செப்பனிட்டும், பிழைகளின்றிச் செம்மையாக இந்நூலைச் செழுமைப் படுத்தியவர் திருச்செந்துறை A. ஸந்தான கோபால சாஸ்திரியார் ஆவார். அன்னாருக்கும், நூற்பகுதிகளைத் தந்துதவிய பாகவதர் அவர்களுக்கும், இந்நற்செயலில் என்னை ஆரம்பத்திலிருந்து ஈடுபடுத்திய நம்பியார் அவர்களுக்கும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

தமிழகத்தின் பழம்பெரும் கோயில்கள் பலவற்றை நன்முறையில் பரிபாலித்தும், சாத்திரத் தோத்திர நூல்களை வெளியிட்டும், பாடசாலைகளை நடாத்தியும் இன்னும் பல்லாற்றானும் சிவசமயத் திருத்தொண்டுகளைச் சீர்பெற இயற்றியும் வரும் தமிழ்ச் சைவத்தின் இரு கண்களாகவும் அருந் தூண்களாகவும் விளங்குவன திருவாவடுதுறை மற்றும் தருமை ஆதீனங்களாகும். (திருப்பெருந்துறைத் திருக்கோயில் துறைசை ஆதீனத்தின் அருளாட்சியிற் பொலிவதாம். இவ்விரு ஆதீன மடங்களையும்

முனிவர்க்குச் சூத முனிவர் அருள்செய்தார். திருப்பெருந்துறைக்கு வழிபாடியற்ற வந்த புரூரவா, முந்நூற்றுவரில் பெரும்பாலோர் வேடர்களால் துரத்தப் பெற்று உத்தரவேதி முதலிய இடங்களில் மறைந்து வாழ்வதை உரோமசர் மூலம் அறிந்து அவர்களுக்கு அபயமளித்து மீண்டும் அனைவரையும் திருப்பெருந்துறையில் குடியமர்த்திச் சாஸனம் எழுதி அளித்தான். (தென்திசை வாயிலாக ஆறு சபைகளுடன் திருக்கோயிலையும் கட்டுவித்தான்.) இச் சாஸனம் பின்னுளில் வத்ஸ பாண்டியன் அவையில் கௌமாரன் என்னும் லுண்டாக்கனுக்கு எதிராக ஆன்மநாத மறையவரால் காட்டவும்பட்டது. புரூரவா (புரூரவஸ் - புரூரவன்) சந்திரவமிசத்து மன்னன் ஆவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலங்கரிக்கும் குருமார்கள் எளியேனையும் பொருளாகக் கருதித் தங்கள் கழிபெருங் கருணையால் இந்நூற் பதிப்பை ஆசீர்வதித்தருளிய கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டிற்கு நான் நன்றி கூறுதல் எங்ஙனம் கூடும்? குருவருளின்றித் திருவருளில்லை; கைவரப் பெறும் திருவருளும் குருவருளன்றி வேறில்லை. எஞ்ஞான்றும் அக் குருவருளையே சிந்தித்து வந்திக்கின்றேன்.

இந்நூலை இரு மொழிகளில் நல்ல முறையில் விரைவாக அச்சிட்டுத் தந்துதவிதய சென்னை, மேற்கு மாம்பலம், அனுத்தமா ஆப்செட் அச்சகத்தாருக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் உரித்தாக்குகிறேன்.

தற்காலத்தில் இந்திமொழிப் பயிற்சி பலருக்கும் இருப்பதால், சரியான உச்சரிப்பைக் கருதி நாகர எழுத்தில் தமிழில் பொழிப்புரை, விளக்கக் குறிப்புரையுடன் நூல் அச்சிடப்பட்டுள்ளது.

இச்சிறுநூலை அன்றாடம் பாராயணம் செய்வோர் ஸ்ரீ சிவயோக நாயகி அம்மை மற்றும் திருவாதவூர் அடிகள் உடனுறை ஸ்ரீ ஆன்மநாதரின் திருவருளில் திளைப்பர் என்பது ஒருதலை.

சிதம்பரம், திருவையாறு வே. இரமணன்.
பார்த்திவ ஆனி மகம்,
10.7.2005.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री आत्मेशध्यानम्

दशशतदलपद्मे सम्स्थमानन्दकन्दम् ।
विधिहरिगिरिशैक्यं विद्युदुद्भासमानम् ॥
प्रणवमयमतर्क्यं सूक्ष्मसूक्ष्मं महान्तम् ।
शिवपुरनिलयं तं चिन्तयाम्यात्मनाथम् ॥

ஸ்ரீ ஆன்மநாதரின் தியான சுலோகம்

ஆயிரமிதழ்த் தாமரையில்* (ஸஹஸ்ராரத்தில் - உச்சியில்) நிலைபெற்றவரும், ஆனந்தக் கிழங்கு போன்றவரும், மும்மூர்த்திகளின் சமஷ்டி வடிவினரும், மின்னலை ஒத்து ஒளிர்பவரும், ***பிரணவமயரும்***, ஏதுக்களுக்கு அப்பாற்பட்டவரும், மிக நுண்ணியரும், பெரியவரும், சிவபுரத்தில் இருப்பவருமான ஆன்மநாதரைச் சிந்திக்கின்றேன்.

*மாமலர் மேய சோதி (திருவாசகம் 43.1)

श्री योगाम्बायाः प्रभावः

आदौ धातृहरीश्वरस्थितिकरी वेदागमोद्धारिणी ।
योगाध्वादिरदाऽद्रिजेऽप्सितकरीऽक्षादेव सम्हारिणी ॥
सन्दिग्धावनिनिश्चयिन्नृपतये वाजीप्रदात्री शिवैः ।
क्रीडन्ती द्विजभक्तिमुक्तिघटिनी ह्यात्मेशलीलागतिः ॥

ஸ்ரீ யோகாம்பிகையின் பிரபாவம்

ஆன்ம நாதரின் 'இலீலை' என்னும் அருட்சத்தி, ஆரம்பத்தில் அரன், அரி, அயன் உள்ளிட்டோரைப் படைத்துக் காக்கின்றாள்; வேத ஆகமங்களை வாழ்விக்கிறாள்; அழிக்கத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தக்கவற்றைச் சங்கல்பத்தாலேயே அழிக்கிறாள்; அடியார்க்கு வேண்டியவற்றை நல்கும் மலைமகளாக இருக்கிறாள்; யோகம் முதலிய வழிகளில் ஈடுபடுத்துகிறாள்; அந்தணராகிய வாதவூரரின் பக்தி முக்திப் பேறுகளுக்குக் காரணமாகி*, மதுரையின் மக்களும் மன்னனும் வியப்பெய்த நரிகளையே பரிகளாக நடத்தி விளையாடுகிறாள்.

*பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை - திருவாசகம் 7.14

முந்நூற்றந்தணர் துதி

இதம்அருள் குருந்துறை இறைக்குளந் நாளினும்
அதிகநற் பணியும்அர்ச் சனையு மேபுரி
முதன்மைகொள் மகிமை *முந்நூற்று வேதியர்*
பதமலர் சிரம்உறப் பணிந்து போற்றுவாம்.

அலகில் அருள் குருந்திறையோடு எண்ணலுறும்
முந்நூற்றந் தணர்கள் வாழ்க!

- பழைய திருப்பெருந்துறைப் புராணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ॐ

श्री शिवाय नम :

श्री आत्मनाथो विजयतेतराम् । श्री आत्मेश्वराय नमः

श्री कुन्दमूलपुर स्तोत्र नवरत्न मालिका

(श्री स्कान्दे महापुराणे सनत्कुमार सम्हितायां शिवरहस्योत्तर खण्डे क्षेत्रप्रसंशायां श्री आदिकैलास माहात्म्यन्तर्गतानि स्तोत्राणि)

प्रथमं रत्नम्

श्री ब्रह्मा उवाच

नित्याय निर्विकल्पाय निर्मलाय महौजसे ।
निराकाराय गुरवे जगतां गुरवे नमः ॥ १ ॥

திருப்பெருந்துறைத் துதி நவமணிகள்

1. ஆன்மநாதரைப் பிரமன் துதித்தது

1. என்றும் உள்ளவரும், வேறுபாடுகள் அற்றவரும், மலக்கலப்பு இல்லாதவரும், பேரொளி வடிவினரும், உருவமற்றவரும், உலகின் குருவுமாகிய உமக்கு வணக்கம்.

नादाय बिन्दुरूपाय कलाकाराय तेजसे ।
सहस्रभुजपादाय सहस्राक्षाय ते नमः ॥ २ ॥

2. நாதம், விந்து, கலைகளின் வடிவே! ஒளியே! எண்ணற்ற தோள்களும், தாள்களும், கண்களும் கொண்ட உன்னைப் போற்றுகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

चिदानन्दाय शुद्धाय महानन्दस्वरूपिणे ।
महादेवादिदेवाय पशूनां पतये नमः ॥ ३ ॥

3. நீர் தூய அறிவானந்த உருவினர்! ஆதிதேவர் ! மகாதேவரும் பசுக்களின் பதியும் ஆகிய உமக்கு வணக்கம்.

अणोरणीयसे तुभ्यं महतश्च महीयसे ।
परात्पराय पुण्याय क्षेत्राणां पतये नमः ॥ ४ ॥

4. நுண்ணிய அனைத்தினும் நீர் நுண்ணியர் ! பருத்த எல்லாவற்றினும் நீரே பரியர் ! உலகைக் கடந்தவர் ! புண்ணிய வடிவினர்! புண்ணியத் தலங்களின் தலைவரும் நீரே! உமக்கு வணக்கம்.

वेदागमविचिन्त्याय वेधसेऽजिनवाससे ।
बहिर्मुखैरदृश्याय दिशाञ्च पतये नमः ॥ ५ ॥

5. வேதாகமங்களால் நன்கு ஆராயப்படுபவரும், அனைத்தையும் விதிப்பவரும், தோலை உடுத்தியவரும், வெளிமுக நாட்டத்தால் காணப்படாதவரும்* திசைகளின் தலைவருமான உமக்கு வணக்கம்.

स्वेच्छासृष्टाखिलाण्डाय कारणत्रयहेतवे ।
भक्तचित्तनिवासाय सेनानां पतये नमः ॥ ६ ॥

6. தன்னிச்சையால் (ஸங்கல்பத்தால்) உலகங்களைப் படைத்தவரும், காரணமும்மைக்குங் காரணரும்,

*வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகன் (திருவாசகம் 8.18) 1.5
விழித்திருந்துள்ளக் கருத்தினை இழந்தேன் (திருவாசகம் 23.1)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்பர்களின் உள்ளத்தில் வசிப்பவரும், சேனைகளின் தலைவருமாகிய உமக்கு வணக்கம்.

चन्द्रखण्डावतंसाय चराचरमयाय ते ।
शाश्वतायाऽऽदिदेवाय वृक्षाणां पतये नमः ॥ ७ ॥

7. பிறைசூடியவரும், நிற்பதும் செல்வதுமான உலகமயமாயிருப்பவரும், நிலையானவரும், முதற்றே வரும், மரங்களின் தலைவருமான உமக்கு வணக்கம்.

त्वदाधारमिदं सर्वं त्वदन्तस्समुपस्थितम् ।
त्वमात्मनाथस्सर्वेषां ! पुष्टानां पतये नमः ॥ ८ ॥

8. இவ் (காணப்படும்) அனைத்திற்கும் நீரே நிலைக்களன். உம்மில் இவை நன்கு நிலை பெற்றுள்ளன. நீரே அனைத் துயிர்களுக்கும் ஆன்மநாதர் ! திருவடி அன்பால் நன்கு வளர்க்கப்பட்டவரின் தலைவராகிய உமக்கு வணக்கம்.

जगन्मात्रे जगद्धात्रे जगद्धर्त्रे सुतेजसे ।
मत्पित्रे जगतां भर्त्रे ह्यन्नानां पतये नमः ॥ ९ ॥

9. உலகின் தாயும், உலகைத் தந்தவரும், தாங்குபவரும் மிகுந்த ஒளிவடிவினரும், எனக்குத் தந்தையும் உலகின் தலைவரும், புசிப்பின் தலைவருமான உமக்கு வணக்கம்.

शरणं भव सर्वेश त्वमेव शरणं मम ! ।
पाहि मां पाहि मां नित्यं पाहि मामात्मनायक ! ॥१०॥

10. ஸர்வேசரே! எனக்கு அடைக்கலம் தாருங்கள்! நீர் மட்டுமே எனக்கு அடைக்கலம் அளிக்க வல்லீர்! ஆன்ம நாயகரே! என்னை என்றும் நீர் காத்து வர வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

द्वितीयं रत्नं – श्री केशवस्तुतिः

श्री विष्णुरुवाच

अणीयाम्समाद्यं महीयाम्समीशं
हृदन्तस्सरोजान्तरस्थं तटस्थम् ।
अनन्तं ह्यचिन्त्यं विचिन्त्यस्वरूपं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ १ ॥

2. ஆன்மநாதரைத் திருமால் துதித்தது

1. குருந்தடியில் என்றுமுள்ள ஆன்மநாதர், அணுவைப்போல் நுண்ணியர்; உலகின் முதலானவர்; மிகப்பெரியவர்; அனைத்தையும் உடையவர்; இதயமலரில் நிலை பெற்றவர்; வெளிப்படையானவர்; முடிவற்றவர்; எண்ண ஒண்ணாதவர்; நினைக்க இனியவர்;

सदानन्दकन्दं चिदानन्दमूलं
महानन्दरूपं महेशं गिरीशम् ।
अगम्यं हि तर्कैः सुगम्यं मुनीन्द्रैः
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ २ ॥

2. உண்மை இன்பக் கிழங்கு போன்றவர்; அறிவின்ப அடியானவர்; பேரின்ப வடிவினர்; பெருவுடையார்; மலைகளின் தலைவர்; தருக்க வாதங்களால் அடையக் கூடாதவர்; புலன்களை அடக்கிய தவமுனிவரால் அடையத் தக்கவர்;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

प्रपञ्चातिरिक्तं प्रपञ्चस्वरूपं
जगत्प्राणरूपं जगत्त्राणधीरम् ।
स्वकुक्षिस्थलोकं जगत्साक्षिणं तं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ३ ॥

3. உலகைக் கடந்தவர்; உலக வடிவினர்; உலகுக்கு உயிரானவர்; உலகை நன்கு காப்பவர்; உலகைத் தனக்குள் ஒடுக்கியவர்; உலகுக்குக் கரி (சாட்சி) ஆனவர்.

निराकार मच्छं निरीहै र्निरीक्ष्यं
निजं निर्मतं निर्मलं धर्मरूपं ।
निराकार मोङ्कारमाद्यं ह्यभेद्यं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ४ ॥

4. வடிவமற்றவர்; தூயவர்; (வேறு) ஆசை அற்றவரால் நன்கு காணத் தக்கவர்; அனைவர்க்கும் உரியவர்; எண்ணங் கடந்தவர்; மலமற்றவர்; அறவடிவினர்; *வடிவமற்ற ஓங்கார வடிவினர்;* முதலானவர்; பேதிக்கப் படாதவர்;

समस्तं समाकृष्य लीनं च काले
विसृज्याथ सर्वं यथावत्सृजन्तम् ।
हृदन्तः प्रविश्याथ सर्वं नटन्तं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ५ ॥

5. உலக உயிர்களைத் தன்னுள் ஒடுக்கி, மீண்டும் முன்பு போலவே படைப்பவர்; படைப்பின் இதயத்துள் புகுந்து நடிப்பவர்; தூண்டி நடத்துபவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

गुणातीत मीडयं गुणानां निदानं
जगन्मूलकन्दं जगद्देशिकं तम् ।
भुजङ्गेशहारं त्रयीसारसारं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ६ ॥

6. குணங்களைக் கடந்தவர்; போற்றத் தக்கவர்; குணங்களின் பிறப்பிடம்; உலகின் முதலாகிய கிழங்கு; உலகின் ஆசான்; சிறந்த பாம்புகளை மாலையாகக் கொண்டவர்; வேதசாரங்களின் சாரமானவர்;

वहन्तं करै र्वन्हिसृग्पुस्तकानि
भुजङ्गं वरं चाभयं दोस्थलैश्च ।
चतुर्भि स्त्रिणेत्रान्वितं दक्षिणास्यं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ७ ॥

7. கரங்களால் அக்கினி, பாம்பு, புத்தகம், வரதம், அபயம், ஆகியவற்றையும், தோள்களால் பாம்புகளையும் தாங்கி முக்கண்ணுடன் தென்முகக் கடவுளாக வீற்றிருப்பவர்.

विशुद्धं प्रसिद्धं त्वसिद्धातिदूरं
विशुद्धान्तरंगे सदा संवसन्तम् ।
नितान्तं नटन्तं कृतान्तं हरं तं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ८ ॥

8. மிகவும் தூயவர்; மிகவும் அடங்கியவர்; (அல்லது, பெரும் பேற்றினர்) அடங்காதவர்களுக்கு (அல்லது, பேறற்றவர்க்கு) மிகவும் தொலைவில் உள்ளவர்; தூய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளத்தில் எப்பொழுதும் நன்கு வசிப்பவர்; மிகவும் நடிப்பவர்; அனைத்தையும் முடிப்பவர். 'அரன்' என்னும் திரு நாமம் உடையவர்

वटस्थं वरिष्ठं दृढस्थं गरिष्ठं
कुलीनं धुरीणं प्रवीणं पुराणम् ।
सुमोदं सुनादं सुवेदैकवादं
सदा कुन्दमूलेश्वरं सन्नमामि ॥ ९ ॥

9. ஆலமர் செல்வர்; மிகவும் உயர்ந்தவர்; மிகவும் வலியவர்; பெரியவர்; சீலர்; வல்லவர்; புகழ்பெற்றவர்; பழைமையானவர்; ஆனந்திப்பவர்; இனிய ஒலி வடிவினர்; மறைமொழி பேசுபவர். குருந்த மூலத் துறையும் இறைவரை நான் எப்போதும் நமஸ்கரிக்கிறேன்.

सदानन्दसम्पूर्णमोदावहन्तं
हरिप्रोक्त मीशस्य रत्नस्तवं यः ।
सकृद्वापि यत्रस्थितोवापि मर्त्यः
पठेद्भक्तितः सच्चिदानन्दभाग् स्यात् ॥ १० ॥

10. உண்மையான இன்ப மிகுதியினால் திருமால் உரைத்த இந்த மணிபோன்ற தோத்திரத்தை, எங்கிருந்தாலும் ஒரு முறையாவது அன்போடு படிக்கும் மனிதன் உண்மை அறிவு ஆனந்த நிலையை எய்த உரியவன் ஆகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री रुद्रेशदशकं नाम तृतीयं रत्नम्

श्री रुद्रेश उवाच

चतुर्वेदपुरीशाय शाश्वतायाऽऽदिमूर्तये ।
आत्मनाथाय जगतां गुरवे ब्रह्मणे नमः ॥ १ ॥

3. ஆன்மநாதரை உருத்திரன் துதித்தது

1. சதுர்வேத புரத்தின் தலைவரும், என்றும் உள்ளவரும், ஆதி மூர்த்தியும், ஆன்மநாதருமான உலகின் ஆசானுக்கு வணக்கம்.

सद्घनानन्दकन्दाय चिदानन्दस्वरूपिणे ।
कुन्दभूरुहवासाय गुरवे ब्रह्मणे नमः ॥ २ ॥

2. உண்மை உறைந்த ஆனந்தக் கிழங்கை ஒத்தவரும், அறிவின்ப வடிவினரும், குருந்த மரத்தடியில் வதிபவரும் ஆகிய உலகின் குருவிற்கு வணக்கம்.

विधातृहरिमुख्यानां विश्वेषां जगतामपि ।
ज्ञानदात्रे सुमहते गुरवे ब्रह्मणे नमः ॥ ३ ॥

3. அரி, அயன் உள்ளிட்ட அனைவர்க்கும் அறிவளிப்பவரும், மிகுந்த ஒளி வடிவாய் இருப்பவரும் ஆன உலக குருவிற்கு வணக்கம்.

अणोरणीयसे तस्मै महतश्च महीयसे ।
तुर्यातीताय शुद्धाय गुरवे ब्रह्मणे नमः ॥ ४ ॥

4. அணுவினும் நுண்ணியரும், பெரியவற்றுக் கெல்லாம் பெரியவரும், துரியாதீதரும், தூயவரும் ஆகிய குரு பிரமத்திற்கு வணக்கம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

स्रष्टुं विधातृरूपाय रक्षितुं विष्णुरूपिणे ।
संहर्तुं कालरूपाय गुरवे ब्रह्मणे नमः ॥ ५ ॥

5. அயனை அதிட்டித்துப் படைப்பவரும், அரியை அதிட்டித்துக் காப்பவரும், காலாக்னிருத்திர வடிவில் அழிப்பவரும் ஆன குரு பிரமத்திற்கு வணக்கம்.

விளக்க உரை :- படைப்போன் படைக்கும் பழையோன்; படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள்; காப்பவை
கரப்போன் கரப்பு; அவை கருதாக்
கருத்துடைக் கடவுள் (திருவாசகம் 3.13-16)

படைத்திடும் பவனே போற்றி பார், துகட் பான்மை தாங்கி !
துடைத்தழி அரனே போற்றி துண்இருட் குணமே தூங்கி !
அடைத்தருள் மிருடா போற்றி அவனி, சத்துவத்தின் ஓங்கி !
நடித்தொளிர் சிவனே போற்றி குணங்குறி நயவா நீங்கி !

(புட்பதந்தரின் சிவமகிமைத்துதி 30)

அயன், பிரமன் என்ற சொற்கள் படைப்பவன் என்ற பொருளைத் தாரா. அரி, விஷ்ணு, மாலவன் என்ற சொற்கள் காப்பவன் என்ற பொருளைத் தாரா. இறைவனுக்கு வேதம் கூறுகின்ற பவன், மிருடன், அரன், சிவன் என்ற பெயர்கள் முறையே அவன் படைத்துக் காத்து அழித்து அருள்புரிவதை உணர்த்துகின்றன. அயன், அரி, உருத்திரன் ஆகிய மூவரையுமே இறைவன் படைத்தும், காத்தும், கரந்தும் அம்மூவரைக் கொண்டும் உலகைப் படைத்தும், காத்தும் கரந்தும் விளையாடுகின்றான். அயனுக்குள் பவனுகவும், அரிக்குள் மிருடனுகவும், உருத்திரனுக்குள் அரனாகவும் இருந்து இயக்குகிறான்.

திருஞானசம்பந்தரின் திருச்சிவபுரத்தேவாரப் பதிகத்தில் (1-21) முதல் மூன்று பாடல்களில் மும்மூர்த்திகளின் உருவில் இறைவனை வழிபடுதற்குப் பயனுக முறையே ஆயுளும், செல்வமும், புகழும் கூறப்பட்டுள்ளன. அடுத்த மூன்று பாடல்களில் முறையே கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின் பயனுக வெற்றி (குறைவில பதம்), விச்சை (எழில் உரு), குலன் நிலனிடை நிகழ்தல் (திருவடிப்பேறு) ஆகியன கூறப்பட்டுள்ளன காண்க. (அகப்புறப் பற்றுக்களை அறுத்து இறைவனுடன் இரண்டறக் கலந்த) பிரம ஞானியின் குலம் (இறையருளால்) உலகில் விளங்கும் என்று மாண்டுக்ய உபநிடதமும் உரைக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

विधिविश्वम्भराभीष्टप्रदाब्जचरणाय ते ।
विश्वातीताय विश्वस्मै गुरवे ब्रह्मणे नमः ॥ ६ ॥

6. அயன், அரி உள்ளிட்டோருக்கு இட்டங்களை வழங்கும் பாத தாமரைகளை உடையவரும், உலகைக் கடந்தவரும், அனைத்தும் ஆனவருமான குருவாகிய பிரமத்திற்கு வணக்கம்.

सहस्रशिरसे तुभ्यं सहस्राक्षिभुजाङ्घ्रये ।
सहस्रागमवेद्याय गुरवे ब्रह्मणे नमः ॥ ७ ॥

7. ஆயிரம் முடிகளும், ஆயிரக் கணக்கில் கண்கள், தோள்கள், தாள்கள் கொண்டவரும், எண்ணற்ற ஆகமங்களால் அறியத் தக்கவரும் ஆன குருபரம் பொருளை வணங்குகிறேன்.

पञ्चाननाय देवाय पञ्चब्रह्मस्वरूपिणे ।
पञ्चाक्षरस्वरूपाय गुरवे ब्रह्मणे नमः ॥ ८ ॥

8. ஐந்து முகங்கள் கொண்டவரும், ஐந்து கடவுள் வடிவினரும், ஐந்தெழுத்து உருவினரும் ஆகிய குருவுக்கு வணக்கம்.

मद्भर्त्रे जगतां पित्रे कारणत्रयहेतवे ।
नमस्तुभ्यं नमस्तुभ्यं नमस्तुभ्यं नमोनमः ॥ ९ ॥

9. என்னைக் காப்பவரும், உலகின் தந்தையும், மும்முதல்களுக்கும் முதலானவரும், ஆகிய உம்மை மீண்டும், மீண்டும் பணிகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

अपराधायुतोपेतं महाकल्मषमानसम् ।
पाहि मां पाहि मां नित्यं पाहि मामात्मनायक ॥१०॥

10. எண்ணற்ற பிழைகள் இழைத்தவனும், மிகவும் குற்றமுள்ள மனத்தினனும் ஆகிய என்னை, ஆன்ம நாதரே! என்றும் காத்து வர வேண்டும்.

रुद्रेशकथितं स्तोत्रं दशकं यः पठेत् पुमान् ।
कालमृत्युमतिक्रम्य स चिरायुः सुखी भवेत् ॥११॥

11. உருத்திரேசனால் உரைக்கப்பட்ட இப்பதிகத்தைப் படிக்கும் மனிதன் மரணபயத்தை வென்று நீண்ட ஆயுளுடன் இன்பமாய் இருப்பான்.

चिन्मयलिङ्गाष्टकं नाम तुरीयं रत्नम्

श्री रुद्रेश उवाच

ब्रह्ममुखामरपूजितलिङ्गम् ।
जिह्मगभूषणभूषितलिङ्गम् ॥
सिह्ममहामदमर्दनलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ १ ॥

4. சின்மய லிங்காஷ்டகம்

(ஆதிகயிலாய நாதரை உருத்திரன் துதித்தது)

1. அயன்முதல் அமரர்களால் பூசிக்கப்பட்டதும், அரவங்களால் அலங்கரிக்கப்படுவதும், நரசிங்கத்தின் பெரிய மதத்தைப் போக்கியதுமான அறிவுமயமான இலிங்கத்தை, மனமே என்றும் போற்று!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कनकधराधरकार्मुकलिङ्गम् ।
सनकमुखादिसुसन्नुतलिङ्गम् ॥
दिनकरकोटिसुदीधितिलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ २ ॥

2. பொன்மலையை வில்லாக்கிக் கொண்டதும், ஸனகர் உள்ளிட்ட முனிவர்களால் நன்கு துதிக்கப்பட்டதும், கோடி சூரியர்களின் ஒளியைக் கொண்டதுமான அறிவுமய இலிங்கத்தை, உள்ளமே எப்பொழுதும் போற்று!

अष्टविभूतिद मिष्टदलिङ्गम् ।
सृष्टजगत्त्रयरक्षकलिङ्गम् ॥
अष्टमहाभयशिक्षकलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ ३ ॥

3. எண்வகைச் செல்வங்களையும் இட்டங்களையும் அளிப்பதும், மூவுலகங்களையும் படைத்துக் காப்பதும், எண்வகை பேரச்சங்களைப் போக்குவதும் ஆன அறிவு வடிவ இலிங்கத்தை நெஞ்சமே இடைவிடாது நினை.

मत्तगजाजिनवेष्टितलिङ्गम् ।
दग्धजगत्कृतपंचकलिङ्गम् ॥
उत्तमपूरुषवत्सललिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ ४ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. மதங்கொண்ட யானையின் தோலை அணிந்ததும், சர்வ சங்கார காலத்தில் படைப்பனைத்தையும் நீறாக்கித் தான் அணியும் 'ஐந்து'* ஆகக் கொண்டதும், உத்தமபுருடராகிய திருமாலைக் கன்றாகக் கொண்டதுமான சின்மயலிங்கத்தைச் சிந்தையே, எப்போதும் வாழ்த்து!

अङ्गभवाङ्गसुभङ्गदलिङ्गम् ।
तुङ्गजटाभरशोभितलिङ्गम् ॥
मङ्गलदायक मद्भुतलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ ५ ॥

5. காமனின் அழகிய உடலை அழித்ததும், உயர்ந்த சடைக்கற்றைகளுடன் ஒளிர்வதும், மேலான நன்மையைச் செய்வதும், மிகவும் அற்புத மான தோற்றங் கொண்டதுமான சின்மய லிங்கத்தைச் சிந்தையே, எப்போதும் வழுத்து!

पङ्कजनेत्रसमर्चितलिङ्गम् ।
शङ्कर मादिम मच्युतलिङ्गम् ॥
सङ्कटदोषनिवर्तकलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ ६ ॥

---

* திருநீறு, பஸ்மம், பஸிதம், பூதி, க்ஷாரம், ரக்ஷை ஆகிய ஐந்து பெயர்களால் வழங்கப்படுவதாலும், திரு நீற்றை அணிபவர் அதனைப் பஞ்ச பிரமமந்திரங்களால் சிரம் முதலிய ஐந்து இடங்களில் உத்தூளிக்கப் பஸ்மஜாபாலம் என்னும் உபநிடதம் விதிப்பதாலும், இங்கு "ஐந்து" என்ற சொல் திரு நீற்றைக் குறிக்கும் என்று கருதுகிறேன் - மொழிப்புரையாளன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. திருமாலின் தாமரையை ஒத்த கண்ணால் அருச்சிக்கப்பட்டதும், முத்தி அளிப்பதும், முதன்மையானதும், அடியவர்களைக் கைவிடாததும், கவலை, குற்றம் ஆகியவற்றைப் போக்குவதுமான அறிவுக்குறியை உள்ளமே! எப்போதும் உரை.

अभ्रसभान्तरनर्तनलिङ्गम् ।
शुभ्रविभूतिविभूषितलिङ्गम् ॥
शुभ्रहृदम्बुजशोभितलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥ ७ ॥

7. பொற்சபையில் நடிப்பதும், வெண்மையான விபூதியால் பூசப்பட்டதும், தூய உள்ளத் தாமரைகளை ஒளிரச் செய்வதும் ஆன சின்மய இலிங்கத்தை மனமே! எல்லா நேரமும் போற்று!

कुन्दवनान्तरमन्दिरलिङ्गम् ।
मन्दहसाननसुन्दरलिङ्गम् ॥
वन्दितभक्तजनावृतलिङ्गम् ।
चित्त सदा भज चिन्मयलिङ्गम् ॥८॥

8. குருந்தவனத்தில் கோயில் கொண்டதும், இனிய புன்னகை முகத்துடன் பொலிவதும், வணங்கும் அடியவர்களால் சூழப் பட்டதும் ஆன அறிவு வடிவ ஆன்மலிங்கத்தை நெஞ்சமே என்றும் நினை.

रुद्रकृताष्टक मद्भुत मेतत् ।
भद्रकरं पठतीह मनुष्यः ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

इष्टफलं समवाप्य यथेष्टं ।
शिष्टजनोत्तम एव हि सः स्यात् ॥९॥

9. உருத்திரனால் செய்யப்பட்டதும் நன்மையைப் புரிவதும் அரியதும் ஆகிய இந்த (சின்மய இலிங்க) அட்டகத்தைப் படிக்கும் மனிதன் வேண்டியவ் வேண்டியாங்கு எய்தி, தூய நடத்தை உள்ளவரில் மேம்பட்டவனாகத் திகழ்வான்.

श्री परमेश्वराष्टकं नाम पञ्चमं रत्नम्

श्री गिरिजा उवाच

पङ्कजासनपद्मलोचनसद्गुरोऽतुलपावन ।
वैभवाश्रितपारिजातक पाहि मां परमेश्वर ॥
कामितार्थदपादपङ्कज कालकाल जगद्गुरो ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ १ ॥

5. ஆன்மநாதரை மலைமகள் துதித்தது

1. தாமரையில் இருப்பவன், தாமரையை ஒத்த கண்ணன் ஆகிய இருவர்க்கும் மெய்யறிவை அளிக்கும் குருவே! தூய்மையில் இணை யற்றவரே! அடைந்தவர்க்குப் பாரிசாதம் போன்றவரே! காலகாலரே! நீர் உலகின் ஆசான்; உம் பாதத் தாமரைகள் வேண்டிய நலன்களைப் பயக்கும்; குருந்தவனத்தில் கோயில் கொண்ட பெருமான்! என் எண்ணத்தை ஈடேற்றுங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कारणत्रयमूल बालशशांकखण्डशिरोमणे ।
कार्मुकीकृतशीतगुम्फधराधरेन्द्र जगन्मणे ॥
लोचनीकृतशीतरश्मि,कृपीटयोनि,नभोमणे ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ २ ॥

2. (உபாதானம், நிமித்தம், சஹகாரி என்ற) மூன்று முதல்களுக்கும் மூலப்பொருளே! இளம்பிறையைச் சிரமணியாகக் கொண்டவரே! குளிர்ந்த சிகரங்களைக் கொண்ட மேருமலையை வில்லாகச் செய்தவரே! உலகின் கண்மணியே! முச்சுடர்களால் விழிப்பவரே! குருந்தவனக் கோவே! என் விருப்பத்தை நல்குவீராக.

कैटभारिशिलीमुखातुल काश्यपीरथ धूर्जटे ।
कल्पितावसकामितार्थप्रदानगौरनदीतटे ॥
व्यालभूषणजालशोभित व्याघ्रचर्मलसत्कटे ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ ३ ॥

3. கைடபன் என்ற அசுரனைக் கொன்ற திருமாலை அம்பாக எய்தவரே! பூமியைத் தேராக நடத்தியவரே! பிஞ்ஞகக் கோலம் பெற்றவரே! விரும்பியதை நல்கும் வெள்ளாற்றின் கரையில் வசிப்பவரே! அரவங்களின் கூட்டத்தால் அலங்கரிக்கப்படுபவரே! புலித்தோலை அரைக்கணிந்தவரே! குருந்தமூலத்தில் கோயில் கொண்ட நீர் என் கொள்கையைத் தந்தருளும்.

वीतिहोत्रसुतीर्थतीरविहार विश्वधुरन्धर ।
वीरवर्य विरिञ्चिसन्नुत वृक्षरूपकलेबर ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

नीतिपेशलमानसाम्बुजनित्यवास महाप्रभो ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ ४ ॥

4. அக்னிதீர்த்தக் கரையில் உலவுபவரே! உலகைத் தாங்குபவரே! வீரரிற் சிறந்தவரே! பிரமனரல் துதிக்கப்பட்டவரே! (குருந்த) மரவடிவான உடலைப் பெற்றவரே! நீதி*உணர்ந்த உள்ளக் கமலத்தில் நித்திய வாசம் புரிபவரே! மகாப்பிரபுவே! யான் வேண்டியதைத் தாரும்!

विध्यदृष्टसुशीर्षशोभित विष्णवदृश्यपदाम्बुज ।
निर्जरद्रुमपुष्पजालसुगन्धितस्वदिगन्तरे ॥
मित्रवन्हिशशीमरुज्जलयज्ज्वखाऽवनिकाकृते ।
कुन्दभूरुहमन्दिरश्वर सन्ददास्व मदीप्सितम् ॥५॥

5. அயனால் அறியப்படாத திருமுடியும், அரியால் காணப்படாத திருவடித் தாமரையும் கொண்டவரே! உம்மைச் சுற்றிலும் தேவருலக மலர்க்குவியல்கள் மணக்கின்றன. பஞ்சபூதங்கள், இருசுடர்கள், இயமானன் ஆகிய எண்வகை உருவினரே! குருந்தமரத்தடியில் கோயில் கொண்ட இறைவரே! என் இட்டத்தை நிறைவேற்றும்!

** நீதியாவன யாவையும் நினைக்கிலேன்; நினைப்பவ ரொடும் கூடேன்; (திருவாசகம் 26.2) கோதில் பரங்கருணை அடியார் குலாவு நீதி (திருவாசகம் 43.1) நீதியிலேன்.......... ஆற்றுவனுக ..... அருளாயே (திருவாசகம் - 44.6)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कालिनीरदनीलकन्धर शूलपाशधराऽद्य माम् ।
पालयाऽखिलवैभवाऽजकपालभृत्करपङ्कज ॥
कालगर्वहराऽन्धकान्तक कृत्तिवासक धूर्जटे ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥६॥

6. கரியமேகம் போன்ற கழுத்தினரே! சூலமும் பாசமும் தாங்கிய நீர் இப்போது என்னை உடன் காக்க வேண்டும்! அனைத்துப் பெருமையும் கொண்டவரே! உம் கமலம் போன்ற கையினால் அயன் கபாலத்தை ஏந்தி உள்ளீர்! காலனின் கர்வத்தைப் போக்கினீர்! அந்தகனை அழித்தீர்! யானையை உரித்துப் போர்த்தினீர்! தாங்க வொண்ணாப் பெருஞ்சடையைத் தாங்குகிறீர்! என் விருப்பம் நிறைவேற அருள்புரியுங்கள்.

कुन्दभूरुहमूलमृत् तव, जन्ममृत्युजराधिहा ।
कोटिजन्मकृताघसम्हृतिदीक्षिता भवभेषजी ॥
तादृगद्भुतकुन्दभूरुहदर्शना दपवर्गकृत् ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ ७ ॥

7. நீர் எழுந்தருளியுள்ள குருந்தமரத்தின் அடிமண், உயிர்களின் பிறப்பு, இறப்பு, மூப்பு, ஆகியவற்றைப் போக்குகிறது. கோடிப் பிறவிகளில் ஈட்டிய பாவக்குவியலை அழிக்க வல்லதாகிறது. பவநோய்க்கும் அதுவே மருந்து. அற்புதமான இத்தகைய குருந்த மரத்தைத் தரிசிப்பதாலேயே வீடுபேறும் எய்துகிறது. குருந்தில்கோயில் கொண்டநீர், நான் குறித்ததைக் கொடுத்தருள வேண்டும்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

नामरूपविहीन निर्गुण निष्कलंक महामह ।
प्राणनाथ परात्पराच्युत कारणत्रयकारण ॥
नादबिन्दुकलास्वरूप सहस्रपत्रनिकेतन ।
कुन्दभूरुहमन्दिरेश्वर सन्ददास्व मदीप्सितम् ॥ ८ ॥

8. ***பெயரும் உருவமும் அற்றவரே!*** குணமற்றவரே! குற்றம் அற்றவரே! பேரொளியே! என் உயிர்க்கு இனியவரே! உலகின் மேலானவரே! அடியவரை நழுவ விடாதவரே! காரணங்களுக்கெல்லாம் காரணரே! நாத, பிந்து, கலை வடிவினரே! ஸஹஸ்ராரத்தில் வதிபவரே! குருந்தவனப் பெருந்தகையே! என்னால் விழையப்பட்டதை விரைந்து நல்குங்கள்.

पर्वतेन्द्रसुताकृतं परमेश्वराष्टकमद्भुतम् ।
पावनं परमार्थदं पर मात्मनायकसन्निधौ ॥
भक्तियुक्तिमनाः पठेद्यदि दुर्लभं परमं पदम् ।
प्राप्य निर्वृतिमेत्य शाश्वत एव तत्र वसेदसौ ॥९॥

9. மலையரசன் மகளால் செய்யப்பட்ட தூய, அற்புதமான இப் பரமேசுவர அட்டகத்தை ஆன்ம நாதர் திருமுன்னர் பக்திமனத்துடன் படிப்பதால் அடைதற்கரிய மேலான பதத்தை அடைந்து அவ்விடம் நிலைத்து இருக்கலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री आत्मनायकस्तवं नाम षष्ठं रत्नम्

श्री वातपुरीश उवाच

मन्दहाससुन्दरारविन्दवक्त्रशोभितम् ।
नन्दनीयभूसुरावतारवन्दितद्विजम् ॥
कुन्दकुड्मजालरम्यदन्तपंक्तिभासितम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ १ ॥

6. ஆன்மநாதரைத் திருவாதவூரர் துதித்தது

1. புன்னகை பூத்த அழகிய முகத் தாமரையால் பொலிபவரும், மறைபயிற்றும் அந்தணர் வடிவில் (முந்நூறு) அந்தணர்களால் கொண்டாடப் பட்டவரும்,* முல்லையரும்புகளை நிகர்த்த பல்வரிசையால் ஒளிர்பவரும், குருந்தடியில் கோயில் கொண்டவருமான பிறைசூடியைச் சரணமடைகிறேன்.

कुण्डलीशकुण्डलं महाण्डकादिताण्डवम् ।
चण्डभानुदीधितिप्रकाण्डकान्तिकुण्डलम् ॥
पुण्डरीकवर्यचर्ममण्डितावलग्नकम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ २ ॥

2. குண்டலீசன் என்ற பாம்பைக் குண்டலமாக அணிந்தவரும், பேரண்டங்களில் அடிபெயர்த்துத் தாண்டவம் போடுபவரும், சுட்டெரிக்கும் சூரியனை ஒத்து ஒளிரும் குழைகளை அணிந்தவரும், சிறந்த

* *மந்திரராஜம் திருப்பெயர் 127 இன் விளக்கம் காண்க (பக்கம்.......112)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செந்தாமரைகள் சேர்ந்து மலர்ந்ததை யொத்த மேனியொளி கொண்டவரும்*, குருந்தமர் செல்வருமாகிய பிறைசூடியைச் சரணம் அடைகிறேன்.

पुण्डरीकपूः समृध्यताण्डवं दयाकरम् ।
खण्डितामरेन्द्रवैरिमण्डलं महाप्रभुम् ॥
खण्डशीतरश्मिफालमण्डलाग्निमण्डलम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥३॥

3. புண்டரீகபுரம் என்னும் தில்லையில் நன்கு நடிப்பவரும், கருணை புரிபவரும், இந்திரனின் எதிரிக் கூட்டத்தை அடக்கியவரும், பெரிய தலைவரும், குளிர்ந்த திங்கள் தவழும் நெற்றியின் நடுவில் தீயால் விழிப்பவரும், குருந்தவனக் கோயிலில் குடிகொண்டவருமான பிறை சூடியைச் சரணமடைகிறேன்.

விளக்க உரை:-

ஆன்மநாதரே தில்லையில் நடிப்பதாக மணிவாசகப் பெருமான் கூறுகிறார்:-

" சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திரு நடஞ்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ (13.18) என்ற திருவாசகப் பாடல் தில்லையில் அருளப்பட்ட பாடலாகும்.

திருப்பெருந்துறைப் புராணமும், இறைவனின் ஆடலைக் காண இங்குத் தவமிருந்த பதஞ்சலி, வியாக்கிரபாதர் உள்ளிட்ட முனிவர்களை இறைவன் இங்குள்ள நடனசபையில் காட்சி தந்து, நடனங்காணத் தில்லைக்குச் செல்லுமாறு பணித்ததாகக் கூறுகிறது. ஆன்ம நாதரின் சக்தியாகிய யோகாம்பிகையும் இங்கு அருவமாகவும் நிர்க்குணமாகவும் உள்ளதால் நடனம் இங்கு இல்லை என்றும் அண்டத்தின் இதயமாகிய தில்லையில் நடனம் நிகழும் என்றும் புராணம் விளக்குகிறது.

** செந்தாமரைக் காடு அனைய மேனித் தனிச்சுடரே! (திருவாசகம் 5.3.7)*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாதவூரடிகளையும் திருவடிக்கலப்பிற்காக இறைவன் தில்லைக்கு வருமாறு பணித்தார். இதனைக் கூறவந்த திருவாத வூரடிகள் புராணம் (கடவுள்மாமுனிவர்) 'ஓசை அடங்கிய இடமாதலால் திருப் பெருந்துறையில் நடனமில்லை; ஒளிவடிவான சுழுமுனையூடு எழும் நாதத்தைக் குறிக்கும் சங்கினைத் தவிர பிற வாத்தியங்கள் இல்லை' என்று இறைவன் விளக்குவதாகக் கூறுகிறது (பாடல் 340)

अक्षयार्थदायकं प्रतिक्षणं क्षमापकम् ।
रक्षितद्विजार्भकं प्रधक्षितारिलक्षकम् ॥
दक्षयागशिक्षकं विचक्षणं सुरक्षकम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ ४ ॥

4. அழியாச் செல்வத்தை அளிப்பவரும், கணந்தோறும் நான் செய்யும் குற்றங்களை உடனுக்குடன் மன்னிப்பவரும்*, மறைச் சிறுவனை (மறலியிடமிருந்து) காத்தவரும், எதிரிக் கூட்டங்களை நசுக்கியவரும், தக்கன் வேள்வியைத் தகர்த்தவரும், அறிவால் மேம்பட்டவரும், நன்கு காப்பவரும், குருந்தவனக் கோமகனுமான பிறைசூடியைச் சரணமடைகிறேன்.

---

* குன்றே அனைய குற்றங்கள் குணமா மென்றே நீ கொண்டால் என்றான் கெட்டது. இரங்கிடாய்! (திருவாசகம் 33.3)

பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை (திருவாசகம் 10.12)
தன்னடியார் குற்றங்கள் நீக்கிக் குணங் கொண்டு கோதாட்டிச் சுற்றிய சுற்றத் தொடர்பறுப்பான் (திருவாசகம் 8.20)

அடியாருள் கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல்பிறவித் தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான் (திருவாசகம் 16.6)

கள்ளமே பேசிக், குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால் மிகைபல செய்தேன் (சுந்தரர் 69.6)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कञ्जजादिदानवारिपुञ्जवन्दितांघ्रिकम् ।
भञ्जिताश्रितापदं तमञ्जसार्थदायकम् ॥
मञ्जुलामृतादियुक्तिवाक्यजालरञ्जकम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ ५ ॥

5. மலரவன் உள்ளிட்ட வானவர் கூட்டத்தினால் வழுத்தப்பட்ட திருவடியை உடைய வனும், தன்னை அண்டிய அடியவர்களின் ஆபத்துக் களைப் போக்கி, வேண்டியவற்றை விரைவில் அளிப்பவனும், அழகிய அமுதம் போன்ற மொழிகளால் இன்பம் ஊட்டுபவனும்*, குருந்தமர் குருவுமான பிறை சூடியைச் சரணமடைகிறேன்.

तुङ्गभंगराजिताऽमराधिपांगमुज्ज्वलत् ।
बालसोमचूडकं भुजंगभूषिताङ्गकम् ॥
सङ्गहीनभक्तशीलपालकं जगद्गुरुम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ ६ ॥

6. (உக்கிரகுமாரனைக் கொண்டு வளையால் எறிந்து) அமரர் தலைவனின் முடியைச் சிதறச் செய்தவனும், இளம்பிறையைச் சூடிப் பாம்புகளை எங்கும் அணிந்தவனும், பற்றறுத்த அடியார்களைப் பாதுகாப்பவனும்**, ஜகத்குருவும், குருந்தடியில் கோயில் கொண்டவனுமான பிறைசூடியைச் சரணம் அடைகிறேன்.

---

*பாணே பேசி என்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதீ? (திருவாசகம் 5.9.4

**அறவே நின்னைச் சார்ந்த அடியார் மற்றொன்று அறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே. (திருவாசகம் 5.9.6)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कालकाल मम्बुजाक्षनेत्रपूजितांघ्रिकम् ।
कालिमार्द्रकन्धरं कपालशूलधारिणम् ॥
मूलकारणं जगत्प्रचालकस्य शङ्करम् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ ७ ॥

7. காலனுக்கும் காலனும், தாமரைக் கண்ணனால் தன் கண்கொண்டு திருவடியில் அருச்சிக்கப்பட்டவனும், கறைக்கண்டனும், கபால சூலங்களை ஏந்தியவனும், உலகை நடத்தும் பிரமன், மால் முதலிய வானவர்களைப் படைத்தவனும், சங்கரனும், குருந்தமர் கோமானுமான பிறை சூடியைச் சரணம் அடைகிறேன்.

कुन्दमूलमृत्तिका मघामयादिमर्दिनीम् ।
सादरं प्रधारकाः प्रभक्षकाश्च ये द्रुतम् ॥
आधिपापवर्जितान्विधायकं जनांश्च तान् ।
कुन्दमूलमन्दिरस्थ मिन्दुचूडमाश्रये ॥ ८ ॥

8. குருந்தடி மண்ணை அன்புடன் தரிப்பவரையும் உட்கொள்பவரையும், நோய், குற்றம், பாவம், துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுவிப்பவனும், குருந்தடியில் கோயில் கொண்டவனுமான பிறை சூடியைச் சரணம் அடைகிறேன்.

आत्मनायकस्तवं महार्थदायकं परम् ।
वातपूःपतीरितं वरिष्ठवाञ्छितप्रदम् ॥
भुक्तिमुक्तिकारणं पठेत्सकृच्छिवाग्रतः ।
यः स एव मुक्तिभाग् शिवाधिकप्रियो भवेत् ॥ ९ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. வாதபுரீசரால் செய்யப்பட்ட இந்த ஆன்மநாயகன் துதி மேலான செல்வத்தை அளிக்கவல்லது; வேண்ட முழுதும் தருவது; இம்மை, அம்மைகளுக்குக் காரணமாவது; இதனை இறைவன் திருமுன்னர் ஒரு முறை ஓதினும், ஓதுபவனை முத்திக்கு உரியவனாகவும், இறைவனுக்கு மிகவும் பிரியனாகவும் செய்கிறது.

श्री पुरन्दरस्तुतिर्नाम सप्तमं रत्नम्

श्री शक्र उवाच

देवीं तामरसेक्षणीं गुणमयीं सर्वाशुभद्राविणीम् ।
भक्तानां दुरितार्तिसंघहरिणीं दैत्यौघसंहारिणीम् ॥
वाणीशादिमुरारिहृद्यभरणीं त्रैलोक्यचूडामणिम् ।
योगाम्बामहमात्मनाथरमणीं ध्यायामि दाक्षायणीम् ॥

7. ஸ்ரீ யோகாம்பிகையை இந்திரன் துதித்தது

1. ஒளிமிக்கவளும், தாமரை போன்றகண்களை உடையவளும், குணமயமானவளும், எல்லாத் தீமைகளையும் போக்குபவளும், அடியவர்களின் துன்பக் கூட்டங்களையும் பாவக் குவியல்களையும் அழிப்பவளும், அசுரர்களை முற்றும் சங்கரிப்பவளும், நான்முகன், மால், முதலிய தேவர்களின் விருப்பத்தை அளிப்பவளும், மூவுலகங்களிலும் சிறந்த மணிபோன்றவளும், ஆன்மநாதருக்குப் பிரியமானவளும், தாட்சாயணியுமான யோகாம் பிகையைத் தியானிக்கிறேன்.

शान्तां पीनपयोधरातिविनतां पाटीरपङ्काङ्कित्ताम् ।
चेटीभूतसमस्तदेववनितां कादम्बमालावृताम् ॥
उद्यद्भानुविराजिता मगसुतां खेचारिसम्सेविताम् ।
योगाम्बामहमात्मनाथवनितां ध्यायामि कुन्दस्थिताम्

2. (அகக் கரணங்களின் அடக்கத்தால் விளைந்த) அமைதி கொண்டவளும், பெருத்த நகில்களால் வளைந்தவளும், செஞ்சாந்தை அணிந்தவளும், அனைத்துத் தெய்வ மகளிரையும் பணிகொள்பவளும், கதம்ப மாலையைத் தரித்தவளும், உதிக்கின்ற கதிரவனைப் போல் சிவந்தவளும், மலைமகளும், விண்ணில் உலவும் சித்தர்களால் சேவிக்கப் படுபவளும், குருந்தடியில் இருப்பவளும், ஆன்மநாதரின் மனையாட்டியுமான யோகாம்பிகையைத் தியானிக்கிறேன்.

बालां बालजनाभिलाषसफला माकर्णनेत्रोत्पलाम् ।
हेलाभूतसुरावनैकचटुलां नीलाम्बुवाहोज्ज्वलाम् ॥
आलोलालकभारशोभिनिटिलां वक्षोजतालीफलाम् ।
योगाम्बामहमात्मनाथमहिलां ध्यायामि तां श्यामलाम्

3. சிறுமி வடிவினளும், சிறுவரைப்போல் திரியும் மெய்ஞானிகளின்* தேவைகளை உதவுபவளும்,

---

* பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்து, இட்ட பிச்சை எல்லாம்
நாய் போல் அயின்று, நரிபோல் உழன்று, நன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே.

- பட்டினத் தடிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காதளவு நீண்ட கண்மலர்களைக் கொண்டவளும், விளையாட்டாகவே விண்ணவரைக் காப்பதில் திறமையானவளும், கரிய மேகம் போன்று ஒளிர்பவளும், முன்நெற்றியில் விளையாடும் கேசத்தால் அழகியவளும், பணைமுலையளும், சியாமளையும், ஆன்மநாதரின் நாயகியுமான யோகாம்பிகையைத் தியானிக்கிறேன்.

गौरीं माधवसोदरीं शुभकरीं सर्वेश्वरीं शाङ्करीम् ।
ह्रींकारीं प्रणतीर्तिभञ्जनकरीं दीनान्नदानेश्वरीम् ॥
नानारत्नसुवर्णकङ्कणधरीं कुन्दालयाधीश्वरीम् ।
योगाम्बामहमात्मराट्सहचरीं ध्यायामि माहेश्वरीम्

4. தூய வெண்மை நிறத்தவளும், திருமாலின் உடன்பிறப்பும், நன்மையைச் செய்பவளும், அனைவர்க்கும் தலைவியும், முத்தி அளிப்பவளும், 'ஹ்ரீம்' என்ற எழுத்தாயிருப்பவளும், வணங்குவோரின் துன்பத்தைப் போக்குபவளும், ஏழைகளுக்கு உணவளிப்பவளும், பலவகை மணிகளிழைத்த் பொன் வளையல்களை அணிந்தவளும், குருந்தவனக் கோயிலில் எழுந்தருளியிருப்பவளும், ஆன்மராஜனுடன் சேர்ந்து உலவும் இராணியும், மாகேசுவரியுமான யோகாம்பிகையைத் தியானிக்கிறேன்.

लीलाकल्पितविस्तृतत्रिभुवनां सन्त्रस्तरम्भावना –
मूरुद्वन्द्वभरात् सुवर्णभवनां क्षीराब्धिमध्यासनाम् ॥
अस्मद्वाञ्छितदानशीलनयनां भक्तौघसम्रक्षणाम् ।
योगाम्बामहमात्मनाथललनां ध्यायामि चन्द्राननाम्

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. மூவுலகங்களையும் விளையாட்டாகவே படைத்துக் காப்பவளும், வாழையஞ்சும் துடைகளைக் கொண்டவளும், பாற்கடலின் நடுவில் பொன்மாளிகையில் இருப்பவளும், எம்மால் விரும்பப்படுவதைக் கண்ணால் அளிப்பவளும், அடியவர்களை நன்கு காப்பவளும், திங்களை ஒத்த முகத்தினளும், ஆன்மநாதனுக்கு இன்பஞ் செய்பவளும் ஆன யோகாம்பிகையைத் தியானிக்கிறேன்.

श्री योगाम्बाष्टकम् नाम अष्टमं रत्नम्

श्री रौक्षायण उवाच

उद्यद्भानुसहस्रकोटिविलसद्देहप्रभोद्भासिताम् ।
मुक्ताहारविभूषिता मगसुतां कौसुम्भवस्त्रान्विताम् ॥
हस्तस्थाक्षसु पुस्तकाभयवरां चन्द्रार्धचूडां शिवाम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम्

8. ஸ்ரீ யோகாம்பிகையை இரௌக்ஷாயணர் துதித்தது

1. உதிக்கின்ற கோடி சூரியர்களைப்போல் ஒளிரும் மேனியளும், முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்டவளும், மலைமகளும், பட்டாடை அணிந்தவளும், கரங்களில் அக்கமாலை, புத்தகம், அபயம், வரதம் ஆகியவற்றைத் தாங்கியவளும், திங்கட் பிறையைச் சூடியவளும், சிவையும், குருந்தவனத்தில் கோயில் கொண்டவளுமான யோகாம்பிகையை நாள்தோறும் தியானிக்கிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

सम्फुल्लत्कमलाननां करधृताम्भोजाभयाभीष्टदाम् ।
पार्श्वस्थद्विरदेन्द्रवत्ससहिता माकर्णपूर्णेक्षणाम् ॥
कुम्भाकारकुचातिभारनमितश्रीमध्यभागां शिवाम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

2. மலர்ந்த தாமரை போன்ற முகத்தினளும், தாமரை மலர், அபயம், வரதம் ஆகியவற்றைக் கைகளால் தாங்கியவளும், கணபதிக் குழந்தையைப் பக்கத்தில் கொண்டவளும், காதளவு நீண்ட கண்களைக் கொண்டவளும், குடம்போன்ற குசங்களால் மெலிந்த இடையினளும், மங்களத்தைச் செய்பவளும், குருந்தவனத்தில் கோயில் கொண்டவளுமான யோகாம்பிகையை நாடோறும் சிந்திக்கிறேன்.

तप्तस्वर्णतनुप्रभां दरहसां कल्हारमध्यस्थिताम् ।
काञ्चीनूपुरकङ्कणाङ्गदलसद्ग्रैवेयहारोज्ज्वलाम् ॥
शुण्डादण्डसमानहस्तचतुरां चन्द्रार्धचूडां शिवाम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

3. உருக்கிய பொன்னைப் போல் ஒளிரும் மேனியளும், மெல்லிய புன்னகை பூப்பவளும், மலர்மிசை இருப்பவளும், மேகலை, நூபுரம், சூடகம், தோள்வளை, பல்வகை மாலை அணிகளால் ஒளிர்பவளும், யானையின் கையை யொத்துச் சீராகக் குறுகும் முன்கைகளைக் கொண்டவளும் திங்கட் பிறையைச் சூடியவளும், மங்கள உருவினளும், குருந்தவனத்தில் கோயில் கொண்டவளுமான யோகாம்பிகையை நாடோறும் தியானிக்கிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

दीप्यत्कोमलसत्प्रवाललतिकां चित्रप्रभाभासुराम् ।
मत्तेभापृथुकुम्भसत्कुचनतां पूर्णेन्दुबिम्बाननाम् ॥
हस्तैश्शूलकपालकार्मुककशान् सम्बिभ्रतीं त्रीक्षणाम्
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

4. இளம்பவளக்கொடி போல் ஒளிர்பவளும், அழகிய ஒளிவட்டத்தோடு கூடியவளும், யானையின் மத்தகம் போன்ற பெரிய நகில்களால் வணங்கியவளும், முழு நிலவை ஒத்த முகத்தினளும், சூலம், கபாலம், வில், பாசம் ஆகியவற்றை ஏந்தியவளும், முக்கண்ணியும், குருந்த வனத்தில் கோயில் கொண்டவளுமான யோகாம்பிகையை அனுதினமும் நினைக்கிறேன்.

रक्ताङ्गीं मृगनाभिबिन्दुविलस द्बालेन्दुफालां पराम् ।
शोणाम्स्ववसनां पयोधरनतां काश्मीरपङ्काञ्चिताम् ॥
हस्तस्थाशुगकार्मकाङ्कुशकशान् सम्बिभ्रतीं श्रीमतीम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

5. சிவந்த மேனியளும், கத்தூரிப் பொட்டும் இளம்பிறையும் திகழும் நெற்றியளும், பரையும், சிவந்த ஆடை அணிந்தவளும், நகில்களின் பொறையால் வளைந்தவளும், குங்குமக் குழம்பைப் பூசியவளும், கரங்களில் அம்பு, வில், அங்குசம், பாசம் ஆகியவற்றை ஏந்தியவளும், திருநிறைந்தவளும், குருந்த வனத்தில்கோயில் கொண்டவளுமான யோகாம்பிகையை ஒவ்வொரு நாளும் உன்னுகின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

नानारत्नसुवर्णभूषणगणै राढ्यां सुकौशेयिनीम् ।
वक्षोजस्तबकातिचञ्चललतागात्रीं त्रिणेत्रां पराम् ॥
हस्तैरिक्षुधनुस्सुमाशुगकशान् सम्बिभ्रतीं शाङ्करीम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

6. பல்வகை மணிகளாலும் பொற்பணிகளாலும் ஒளிர்பவளும், பட்டாடை அணிந்தவளும், முலையரும்புகளால் ஒசிந்தாடும் கொடியைப் போன்ற உருவினளும், முக்கண்ணியும், பராசத்தியும், கரும்புவில், மலரம்புகள், கயிறு ஆகியவற்றைக் கரங்களால் பற்றியவளும், சங்கரியும், குருந்தவனத்தில் கோயில் கொண்டவளும் ஆன யோகாம்பிகையை நாடோறும் எண்ணுகிறேன்.

दुग्धाम्भोनिधिमध्यमे सुरतरो व्यूहावृते मन्दिरे ।
चिन्तारत्नमयेऽब्जसम्भवमुखैस्सम्सेव्यमानेऽमरैः ॥
पञ्चब्रह्ममयेऽतुलेऽतिरुचिरे मञ्चे सुखाध्यासनीम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम् ॥

7. பாற்கடலின் நடுவில், கற்பகம், பாரிஜாதம் முதலிய விண்ணுலக மரங்களால் சூழப்பட்டதும், சிந்தாமணி முதலிய இரத்தினக்கற்களால் இழைக்கப்பட்டதுமான சுவர்ணமாளிகையில், பிரமன், மால், உருத்திரன், ஈசன், சதாசிவன் ஆகிய ஐம்பெருங்கடவுளரால் தாங்கப்படும் அழகிய கட்டிலில் வீற்றிருந்து, நான்முகன் முதலான தேவர்கணங்களால் எப்பொழுதும் வாழ்த்தப் படுபவளும், குருந்தவனக் கோயிலில் அருள் பாலிப்பவளுமான யோகாம்பிகையை என்றும் இறைஞ்சுகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

त्वं माता जनकः शिवो मम गुरु दैवं सुहृत्सद्धनम् ।
सर्वेषामपि जीवनं तनुभृतां सर्वै र्मुनीन्द्रै र्भृशम् ॥
सन्ध्येयं शरणं भवाब्धिपतता मन्ते बहि र्व्यापिनीम् ।
श्रीमत्कुन्दवनालया मनुदिनं ध्यायामि योगाम्बिकाम्॥

8. "நீயே என் தாய், மற்றும் தந்தை; குருவாகிய சிவ பெருமான்; காக்கும் தெய்வம்; உற்ற நண்பன்; உதவும் நிதி; உடலெடுத்த அனைவர்க்கும் உயிர்; எல்லா முனிவ ராலும் நன்கு தியானிக்கப்படும் பொருள்; பவக் கடலில் விழுந்தோர்க்கு அடைக்கலம்; உள்ளும் வெளியும் நிறைந்தவள்" என்று இவ்வாறு குருந்தடியில் கோயில் கொண்ட யோகாம்பிகையை நாள்தோறும் தியானிக்கிறேன்.

मर्त्यो यः पठति स्तवं सुफलदं रौक्षायणर्षीरितम् ।
जिह्वाग्रे निवसे द्धिताय मुदिता ब्राह्मीन्दिरामन्दिरे ॥
शर्वाणी हृदयाम्बुजे नृपतयो दासा महीमण्डले ।
सर्वार्था ननुभूय सर्वमहितं प्रायात् पदं शाङ्करम् ॥ ९ ॥

9. இரௌக்ஷாயணரிஷியால் செய்யப்பட்டதும் நன்கு பயக்கவல்லதுமான இத்துதியைப் பிராம்மி, இலக்குமி, முதலிய தேவியரின் கோயில்களில் படிக்கும் மனிதனின் நாவில் அவன் நன்மையைக் கருதி மகிழ்ந்து வசிப்பதுடன், இதயத் தாமரையிலும் சர்வாணி என்னும் பரதேவதை உறைகிறாள்; உலகின் மன்னர்கள் அவன்வசம் ஆகின்றனர்; இம்மையில் எல்லா நலன்களையும் துய்த்து, இறுதியில், அனைத்தினும் மேம்பட்ட சிவபதத்தை அம்மனிதன் அடைகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्री शिवपुराम्बाष्टकं नाम नवमं रत्नम्

श्री वातपुरीश उवाच

भगवति निरपाये भव्यलावण्यकाये ।
धुननतजनमाये वेदशीर्षादिगेये ॥
शुभगुणसमुदाये मामवाद्याप्रमेये ।
नमदरिसमवाये श्रीमदात्मेशजाये ॥ १ ॥

9 ஸ்ரீ யோகாம்பிகையை வாதவூரடிகள் துதித்தது

1. (வைராக்கியம் முதலிய) ஆறுதிவ்விய குணங்களைக் கொண்டவளே! ஆபத்துகள் அற்றவளே! மங்கள்மான அழகிய மேனியளே! வணங்கும் மக்களின் அறியாமையைப் போக்குபவளே! மறைஉச்சிகளால் பாடப்படுபவளே! நற்குணங்களால் நிறைந்தவளே! பகைவர்கூட்டங்களை வணங்கச் செய்பவளே! பிரமாணங்களால் அறியக் கூடாதவளே! ஆன்மநாதனின் மனையாட்டியே! இப்பொழுதே என்னைக் காத்தருள்க!

कुलधरवरबाले कुन्दवृक्षान्तमूले ।
नुतमुनिवरजाले वन्हिकासारकूले ॥
अरुणरुचिरचेले चित्रकोल्लासिफाले ।
वरवितरणशीले रक्ष मां योगबाले ॥ २ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. மலையரசனின் சிறுமியே! குருந்தமரத்தின் மூலத்தில் இருப்பவளே! முனிவர் கூட்டங்களால்போற்றப் படுபவளே! அக்னிதீர்த்தக் கரையில் விளங்குபவளே! சிவப்பாடை அணிந்தவளே! திலகத்தால்பொலியும் அழகிய் நெற்றியளே! வாரி வழங்குவதில் திறன் கொண்டவளே! **யோகபாலையே!** என்னைக் காக்கவேண்டும்.

விளக்க உரை :-

யோகபாலா என்று வடமொழியில் இங்குக் குறிப்பிடுவதைத் திருவாதவூரடிகள் தென்மொழியில் 'தென்பாலை' என்று அமைத்துள்ளார் :-

'தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்' (38.7) என்ற மணிமொழி காண்க. தென் என்ற அடை இனிமையையும் அழகையும் உரைத்து அவற்றுக்குக் காரணமான யோகத்தை உணர்த்தியது. யோகதட்சிணாமூர்த்தியாகிய ஆன்மநாதரைத் தென்னன் பெருந்துறையான் என்பதும் கருதுக. பாலை = சிவசக்தியாகிய அம்பிகை; எனவே தென்பாலை = யோகாம்பிகை. தென் என்பது வலப்பக்கம், தெற்கு ஆகிய பொருள்களையும் தருவதால் யோகாம்பிகை ஆன்மநாதருக்கு வலப்பக்கத்தில் தெற்கு முகமாய் இருத்தலும் பெறப்பட்டன. 'தென்பாலைத் திருப்பெருந்துறை' என்று அம்பாளைச் சிறப்பிக்கக் காரணமாவது, திருப்பெருந்துறையில் சக்திபிம்பமான பிரணவமே பிரதிக்கப்பட்டுள்ளதாலாம். பிரமத்திற்குப் பிரதிட்டை இல்லை என்பதால் ஆன்நாதர் அப்பிரதிட்டராம். இவ்வுண்மையை

" சொல்வது போல் சிவகருப்பம் சக்தி யாகும்
சிவை எனும் அச் சக்தியும் நற் பிரண வத்தின்
திகழ் கருப்பையாம் அதனல் செப்பும் இந்த
சக்திகருப் பமதாகும் பிரண வத்தைத்
தாபித்தால் சிவம் பிரதிபலிக்கும் கூட "

என்று பழைய புராணம் (1000;1001) பறைசாற்றும்.

मुखरुचिजितसोमे मुग्धचन्द्राभिरामे ।
दुरितभरितभूमे पूरिताशेषकामे ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

रतिनुतिकृतकामे रूपलावण्यसीमे ।
सुमशररिपुवामे भावनास्यात् सदा मे ॥ ३ ॥

3. முகப்பொலிவால் நிலவை வென்றவளே! முழுநிலவைப் போல் விரும்பப் படுபவளே! பாவக்குவியல்களைப் போக்கி, அனைத்து விருப்பங்களையும் அளிப்பவளே! இரதிவேண்ட, மன்மதனை மீட்டவளே! உருவ அழகின் எல்லையே! காமாரியின் இடப்பாகமே! நீ என்றும் என் தியானத்தில் இருக்க வேண்டும்.

गतिविजितमतंगे भक्तलीलानुषंगे ।
कुचमुखजितभृंगे मौलिराजद्द्विजांगे ॥
कलितगिरिशसंगे मुग्धनीलोत्पलांगे ।
स्मरजनिसदपांगे पाहि कारुण्यतुंगे ॥ ४ ॥

4. நடையால் பிடியை வென்றவளே! வித்தாரமாகப் பத்தருடன் விளையாடுபவளே! முலைமுகத்தால் வண்டினை வென்றவளே! திங்கள் விளங்கும் திரு முடியளே! ஈசனின் அணைப்பில் ஆனந்திப்பவளே! மலர்ந்த கருங்குவளை விழியளே! கடைக்கண்ணால் காமனைப் படைப்பவளே! மேலான கருணையளே! காப்பாற்று!

कृतशिवपरितोषां मञ्जुभाषाविशेषाम् ।
मणिरुचिपरिवेषां दिव्यमाधुर्यभाषाम् ॥
निहतविनतदोषां भक्तरक्षाविशेषाम् ।
हृदयदुरितमोषां भावये भीमघोषाम् ॥ ५ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. இறைவனுக்கு இன்பஞ் செய்பவளை, சிறந்த அழகிய மொழிகளைப் பயில்பவளை, மாணிக்கம் போல் ஒளிர்பவளை, திவ்வியமான இன்ப மொழி பேசுபவளை, வணங்கும் அடியாரின் குற்றங்களைப் போக்குபவளை, பக்தர்களைக் காப்பதில் இணையற்றவளை, உள்ளக் குற்றங்களை ஒழிப்பவளை, பெரிய ஓசை எழுப்புபவளை, நினைக்கின்றேன்.

விளக்க உரை :-

ஐந்தெழுத்தும் ஒன்றாகி ஓங்காரமாய், உச்சரிப்பவனின் முயற்சி நின்று தானுய் (அனுகதமாய்) உள்ளத்திலே நீண்ட குழலோசை போல ஒலித்தல் சக்தியின் செய்கையாம்; இதனைக் கடந்து செல்லச் சிவதரிசனமாம்:-

"இடம்படும் உடம்பின் மூலத்து எழுந்தநற் சுழுனை நாடி
உடன்கினர் ஒளியே ஆகி ஒளியில் அஞ்செழுத்தும் ஒன்றாய்
நெடுங் குழ லோசை ஆகி நிலவும்; அவ் ஓசை போய் அங்கு
அடங்கிய இடமே 'என்றும் ஆடும் அம்பலம்' அதாகும்"

(திருவாதவூரடிகள் புராணம் 347)

'ஓசையால் உணர்வார்க்கு உணர்வரியவன் உணர்வுதந்து ஒளியாக்கி' (41.8)

என்ற அடிகள் வாக்கிலும் 'ஓசையால் உணரப் புகுவோர்க்கு, எவ்வகை உயிரின் முயற்சியாலும் உணர்வரிய இறைவன் தன் உணர்வைத் தானே தந்து ஒளியாக்குகிறான்' என்ற பொருளைக் காண்க

உய்ய (மேலே உய்யும் வண்ணம்) என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா! (1.33-34) என்ற அடிகள் வாக்கால், சக்தி கருப்பமாகிய பிரணவமே இறைவனின் சூக்கும உருவம் என அறியலாம். மந்திரராஜம் முதல் 20 திருப்பெயர்களின் உரைவிளக்கம் காண்க.

करसरसिजवीणा मुद्यदादित्यशोणाम् ।
दलितरिपुकृपाणां सिञ्जनीन्यस्तबाणाम् ॥
दुरितविततिशाणा मुद्वहत्पुष्पबाणाम् ।
कलय ! नरसुराणां कामदानप्रवीणाम् ॥ ६ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6 தாமரைக் கரத்தால் வீணையைத் தாங்கியவளை, உதிக்கின்ற ஆதித்தனைப் போல் சிவந்தவளை, பகைவர்களை மெலியச் செய்பவளை, வில்லில் எப்பொழுதும் அம்பைப் பூட்டி இருப்பவளை, பாவக் கோவைகளை அறுப்பவளை, மலரம்புகளை ஏந்தியவளை, மனிதருக்கும் தேவருக்கும் வேண்டிய வரங்களை அளிப்பவளை, நெஞ்சே, நினை!

விளக்க உரை :-

அம்பு பூட்டிய வில் வளைந்திருக்கும். 'உருத்திரருக்காக நானே வில்லை வளைக்கிறேன்' என்று இருக்குவேத தேவீ சூக்தம் பகரும். இறைவனின் திருவருள் உடலாகிய வில்லில் ஓங்காரமாகிய அம்பினைப் பூட்டித் தயாராக வைத்துள்ளது. மும்மல காரியமாகிய முப்புரங்களை எரிக்க, ஊக்கமாகிய (பிரணவ உபாசனை) அக்னிமுகங் கொண்டதும் உள்ளமாகிய திருமால் வடிவினதுமான அம்பு எய்யப்படும்; இறைவனின் புன்னகையாகிய கேழில் பரங்கருணை இம்முயற்சியைச் சாராமல் நின்றும் மலப்பகையை அழிக்கும்.

நங்கைமீர் ! இடைமருதர் இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே ! (அப்பர் 5.15.6)

भुवनततिजनित्रीं बुद्धिनैर्मल्यदात्रीम् ।
सकलशुभभवित्री मागमल्याः सवित्रीम् ॥
शुभगुणसुचरित्रीं नीलजीमूतगात्रीम् ।
सुरमुनिनुतिपात्रीं भावये पद्मनेत्रीम् ॥ ७ ॥

7. உலகவரிசைகளை உண்டாக்குபவளை, அழுக்கற்ற அறிவை அளிப்பவளை, எல்லா நன்மைகளையும் தருபவளை, வேதாகமக் கொடிகளைப் பிறப்பிப்பவளை, நற்குண நடத்தையளை, கார்மேகம் போல் மேனியளை, தெய்வ முனிவர்களால் துதிக்கப்படுபவளை, தாமரைக் கண்ணியை எண்ணுகின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

विषमशरकुलाम्बां विस्तृतोच्चन्नितम्बाम् ।
मुखजितविधुबिंबां विद्रुमाभीष्टबिम्बाम् ॥
नतमुनिनिकुरुम्बां तुङ्गवक्षोजकुम्भाम् ।
श्रय, हृदय ! मदम्बां कुन्दवाटीकदम्बाम् ॥ ८ ॥

8. மன்மதனின் குலதெய்வமும், அகன்றுயர்ந்த அல்குலாளும், வதனத்தால் சந்திரனை வென்றவளும், பவளம் போன்ற உருவினளும், முனிவர் கூட்டங்களால் வணங்கப்படுபவளும், குடம் போன்றுயர்ந்த கொங்கையளும், குருந்தஞ் சோலையில் பூத்த கதம்ப மலர் போன்றவளும் ஆன என் தாயை மனமே, சரணம் புகு!

इति शिवपुरदेव्या अष्टकं शिष्टसंपत् –
प्रदमिदमनुवारं यः पठेद्भक्तियुक्तः ।
सकलभुवनमाता योगमाता तु तस्य
चरणनलिनभक्तिं भुक्तिमाद्यां ददाति ॥ ९ ॥

9. இங்ஙனம் பாடப்பட்ட சிவபுரதேவியின் அட்டகம் நல்லோர் இணக்கத்தை நல்கவல்லது, நாள் தோறும் பக்தியுடன் இதைப் படிப்பவனுக்கு உலகன்னையாகிய யோகமாதா மேலான போகங்களையும் தன் பாதத் தாமரையில் அகலாத அன்பையும் அளிக்கிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्रीमदात्मेश्वरतत्त्वपञ्चरत्नम्

श्री व्यास उवाच

षडाधारोऽर्ध्वसन्निष्ठं षडुत्कर्षस्थलेश्वरम् ।
षट्सभारमणं वन्दे षडध्वाराधनक्षमम् ॥ १ ॥

தத்துவ பஞ்சரத்தினம் என்னும்
ஆன்மநாத பஞ்சகம்

(வியாத முனிவர் அருளியது)

1. (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநுகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும்) ஆறு யோக ஆதாரங்களின் உயர்ந்த சகஸ்ராரத்தில் நிலைபெற்றவரும்; (வனம், புரம்; க்ஷேத்திரம், தீர்த்தம், தேவர் (மூர்த்தி), பத்தர் என்ற) ஆறு வகைச் சிறப்புக்களால் உயர்ந்த திருப்பெருந்துறைக்குத் தலைவரும் (அல்லது) → (பிறக்க முத்தி தரும் ஆரூர், இறக்க முத்திதரும் காசி, தரிசிக்க முத்திதரும் தில்லை, நினைக்க முத்தி தரும் அருணை, மான்மியத்தைக் கேட்க முத்தி தரும் மதுரை, பெயரைக் கூற முத்தி தரும் பெருந்துறை என்னும்) ஆறு உயர்ந்த சிவத்தலங்களின் நாயகரும்; (கனகசபை, நடன சபை, தேவசபை, ஸத்ஸபை, சித்ஸபை, ஆனந்த சபை என்னும்) ஆறு அரங்குகளில் பொருந்திப் பொலிபவரும்; (மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும்) ஆறு அத்துவாக்களினால் (வழிகளால்) வழிபடத்தக்க வருமான ஆன்மநாதரை வந்திக்கிறேன்.

இதன் விளக்கம் →

1. **ஆறு ஆதாரங்கள்** யோக சக்கரங்களாக உடலில் உள்ளன. அண்டத்தில் உள்ளன எல்லாம் பிண்டத்திலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளன என்ற நியதிப்படி இச் சக்கரத் தானங்களில் தெய்வங்கள் உறைகின்றன. எருவாய்க்கும் கருவாய்க்கும் இடையில் உள்ள மூலாதாரத்தில் நாலிதழ்த் தாமரை நடுவில் முக்கோணமாய் குண்டலினீ, சித்த லக்ஷ்மீ இவர்களுடன் கணபதி இருக்கிறார். அதற்கு மேல் உள்ள சுவாதிட்டானத்தில் ஆறிதழ்த் தாமரையில் கலைமகளுடன் பிரமன் உள்ளார்; நாபித் தானத்தில் மணிபூரக சக்கரத்தில் பத்திதழ்த் தாமரையில் இலக்குமியுடன் திருமால் அமர்கிறார்; இதயமாகிய அஞகதத்தில் பன்னிரண்டிதழ்த் தாமரையில் உருத்திராணி யுடன் உருத்திரன் உள்ளார்; கழுத்திடத்தில் உள்ள விசுத்தியில் பதினுறு இதழ்த் தாமரையில் மகேசையுடன் மகேசன் வதிகிறார்; புருவங்களின் இடைப்பகுதியான ஆக்ஞையில் அக்கினிச் சுவாலையுடன் தோன்றும் ஈரிதழ்த் தாமரை ஆசனத்தில் மனோன்மணி சத்தியுடன் சதாசிவன் காட்சி தருகிறார். இவ் ஆறு ஆதாரங்களுக்கு மேல் மனிதரால் அறிய முடியாத இந்து, பிந்து, குளபதம், நாதம், நாதாந்தம், வ்யாபிநீ, ஸமநா, உன்மநீ, துருவம், ஸகஸ்ராரம் என்ற 10 தானங்கள் உள்ளன. இறுதியான ஸகஸ்ராரம், ஷோடசாந்தம் என்றும், ஸஹஸ்ரகமலம் என்றும் பிரமரந்திரம் என்றும் கூறப்படும். இவ்விடமே ஆன்மநாதர் நிர்க்குண நிராகாரனுய் அமரும் இடமாகும். ஆக்ஞைவரை ஆறும் சகளம்; அதன்மேல் ஐந்தும் சகளநிட்களம்; வ்யாபி நீ முதல் ஐந்தும் நிட்களம்; இவை முறையே கீழ்மூலம், நடு மூலம், மேல் மூலம் என்ற மும்மூலங்களாகவும் உரைக்கப்படும்; இவை குணம், குணாகுணம், நிர்க்குணம் என்றும் துரியம், துரியாதீதம், ஸர்வாதீதம் என்றும் இவற்றின் இன்பநிலைகள் ஆனந்தம், பரானந்தம், பிரமானந்தம் என்றும், இவற்றின் அதிபர்கள் கணேசர், நடேசர், ஆன்மேசர் என்றும் இவர்தம் சந்திகள் பின்னை, பின்னுபின்னை, அபின்னை என்றும் அறியத் தகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முத்திறச் சிறப்புடன் பல தலங்கள் விளங்குகின்றன. திருப்பெருந்துறை, வனம், புரம், கேத்திரம், தீர்த்தம், தேவர், பத்தர் என்ற ஆறாலும் சிறப்புறும். குருந்தவனம், சிவயோக வனம், சன்னவனம் என்று வனத்தால் மூவகையாலும்; ஆதிகைலாய புரம், சதுர்வேதபுரம், சிவபுரம், மாயாபுரம் என்று நான்கு புரங்களாகவும்; பெருந்துறை (பிருகத்தீர்த்த க்ஷேத்தரம்), சிவக்ஷேத்ரம், பவித்திரமாணிக்கம் என மூன்று கேத்திரங்களாகவும் அறியப்படும். நவதீர்த்தங்களாலும், மண்ணுக்கடியில் 66 கோடி தீர்த்தங்களாலும், பக்ததீர்த்தம் போன்ற வேறு பல தீர்த்தங்களாலும் பொலிவுறும்;

ஆத்மநாதன், பரமஸ்வாமி, திரிமூர்த்தி தேசிகன், சதுர்வேத புரீசன், சிவயோகவனுதீசன், குந்தவனேசன், சிவக்ஷேத்ர நாதன், சன்ன வனேசுரன், ஜனவன்னுதன், மாயாபுரநாயகன், . விப்ரநாதன், சப்தநாதன், பிருகத்தீர்த்தேஸ்வரன், திரிசதைகத்விஜன், அச்வநாதன், சிவபூ:பதி (சிவபுரநாயகன்), மகாதேவன், திரிஜகத்குரு என்ற 18 பெயர்களும் இத்தலமூர்த்திக்கு இலீலையால் அமைந்த சிறப்புப் பெயர்களாம்.

இரௌக்ஷாயணர் முதல் திருவாதவூரடிகள் வரை, புரூரவாவைப்போல் உத்தம பத்தர்களின் அடைக்கலமாகவும் அபிமானத் தலமாகவும் திருப்பெருந்துறை விளங்கி வருகிறது. தேவர் வரை ஐவகைச் சிறப்புகளின் பெயர்க்காரணங்களைப் பழைய புராணத்தைப் படித்து அறியலாம்.

3. ஆறு சபைகள்:-

திருப்பெருந்துறைத் திருக்கோயிலில் இராஜகோபுரத்துள் நுழைந்தவுடன் மூன்றாம், இரண்டாம் சுற்றுகளுக்கு இடையில் உள்ளது கனக சபை; இங்கு மணிவாசகப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருமானின் புதுக்கோயில் கிழக்கு முகமாக உள்ளது; இரண்டாம் முதலாம் சுற்றுகளுக்கு இடைப்பட்டது நடனசபை; இங்குப் பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் எழுந்தருளி யுள்ளனர்; முதலாஞ் சுற்றுக்கும் ஆன்மநாதரின் கருவறைக் கோயிலுக்கும் இடைப்பட்டது தேவசபை; இங்கு மக்கள் இருந்து ஆன்மநாதரைத் தரிசிப்பர்; ஆன்மநாதரின் கருவறைக் கோயில் மூன்றடுக்காக உள்ளது. தேவசபையை ஒட்டி உள்ளது அமுது படைக்கும் பெரிய படைகல்லுடன் கூடிய ஸத்சபை; அதைத் தாண்டியுள்ளது தீபமேற்றிக் காட்டும் சித்ஸபை; ஸத்ஸபையும் சித்ஸபையும் சேர்ந்ததே அர்த்தமண்டபமாம்; ஆன்மநாதர் யோகபீடத்தில் அருவமாய் எழுந்தருளியுள்ள கருவறையே ஆனந்த சபையாகும்; இதற்கும் பின்னுல், கருவறையைச் சுற்றி முதற்சுற்றில் வலம் வரும் போது யோகாம்பாளுக்குக் கிழக்கிலும், ஆன்மநாதருக்கு வடக்கிலுமாகக் குருந்தமூலம் உள்ளது.

4. ஆறுவழிகள்

கலாத்துவாவினுல் வழிபடச் சிருட்டி பந்தம் விலகும். பஞ்சகலைகளும் தீபங்களாக ஆனந்த சபையில் ஒளிரும்; தத்துவ அத்துவாவினுல் வழிபடத் திதிபந்தம் விலகும். 36 தத்துவச் சுடர்கள் ஸத்ஸபையில் பிரகாசிக்கின்றன; புவன அத்துவாவினுல் போற்றிசெய மரணபந்தம் அறும். 224 புவன தீபங்கள் நடன சபையை அலங்கரிக்கின்றன; வர்ண அத்துவாவினுல் வழிபாடியற்ற மாயை மறையும். சித்ஸபையில் 51 வர்ண தீபங்கள் திகழும்; பதாத்துவாவினுல் பாராட்டப் பதமுத்திகள் கிட்டும். 81 பத தீபங்கள் ஒளிசெய்யும் கனகசபையில் செய்யப்படும் ஜபம், ஓமம் முதலிய சாதனைகள் அதிக பலனைத் தரும்; மந்திர அத்துவாவினுல் வழிபட ஆன்மநாதரின் திருவடிப் பேறே கிட்டும்; ஏகாதச மந்திர தீபங்கள் தேவசபையை எழிலூட்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

श्रीमत्श्रीकुन्दमूलस्थललसितमहायोगपीठे निषण्णः ।
सर्वाधारो महात्माऽप्यनुपमितमहास्वाऽऽदिकैलासवासी
यस्यास्ते कामिनीया नतजनवरदा योगमाता महेशी ।
सोव्यादात्मश्वरो मां शिवपुररमणः सच्चिदानन्दमूर्तिः ॥

2. திருவுடன் பொலியும் குருந்தடியில் மாயோக பீடத்தில் வீற்றிருப்பவரும், எல்லா உலகங்கட்கும் ஆதாரமாக இருந்து கொண்டே, தனக்கென்று ஆதிகைலாசம் (திருப்பெருந்துறை) என்ற ஒப்பற்ற வாசத்தலத்தைக் கொண்டவரும், வணங்கும் மக்களுக்கு வாரி வழங்கவல்லயோகாம்பிகை என்ற காதலியை அருகில் கொண்டவரும், ஸச்சிதானந்த வடிவினரும், சிவ்புர ரமணரும் ஆன ஆன்மேசர் என்னைக் காக்கக் கடவர்!

விளக்க உரை :-

அருள்நாடி வருவோரைத் தப்பாமல் ஆட்கொள்ளவே, இறைவன் குருவடிவாய் விரும்பி அமரும் திருத்தலம்: (இறைவன் கூற்று:-)

" அவ்வியம் இல்லார் தங்கட்கு அருள்தர முன் நாம் மன்னும்
திவ்விய தலமாம் இந்தச் சிறந்துள குருந்த நீழல்
எவ்வுல கெங்கு முள்ளோம் ஆயினும் இங்கு ளோர்கள்
வெவ்வினை அகற்றி ஆள வேண்டி ஈண்டுறைவோம்"

(திருவாதவூரடிகள் புராணம் 339)

'செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்'

(திருவாசகம் 8.11)

यो वेदान्तविचिन्त्यरूपमहिमा, यं याति सर्वं जगत्, ।
येनेदं भुवनं भृतं, विधिमुखाः कुर्वन्ति यस्मै नमः, ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

यस्मात् सम्प्रभवन्ति भूतनिकराः यस्य स्मृति र्मोक्षकृत्
यस्मिन् योगरतिः शिवेति स महानात्मेश्वरः पातु नः ॥

3. வேத உச்சிகளால் ஆராயப் படும் பெருமை கொண்டவர் யார்? படைப்பனைத்தும் இறுதியில் யாரைச் சென்று அடைகிறது? யாரால் உலகங்கள் தாங்கப் படுகின்றன? பிரமன் உள்ளிட்டோர் எவருக்கு வணக்கம் செலுத்துகின்றனர்? எவரிடம் இருந்து பூதம் முதலிய தத்துவங்கள் வெளிக்கிளம்புகின்றன? எவரைக் குறித்த எண்ணத்தால் (எவருடைய திருவருளால்) முத்தி கிட்டுகிறது? சிவ* என்னும் திவ்விய நாமம் எவரிடம் மட்டுமே உண்மையில் பொருந்துகிறது? மகாத்துமா ஆகிய அவ் ஆன்மேசர் நம்மைக் காக்கட்டும்!

तुर्यातीतपदोर्ध्वगं गुणपरं सत्तामयं सर्वगम् ।
सम्वेद्यं श्रुतिशीर्षकै रनुपमं सर्वाधिकं शाश्वतम् ॥
ॐकारान्तरबिन्दुमध्यसदनं ह्रींकारलभ्यं नुमः ।
व्योमाकारशिखाविभाविमुनिसन्दृश्यं चिदात्मेश्वरम् ॥

4. துரியாதீதத்தின் மேலானவரும், குணங்களைக் கடந்தவரும், உண்மையே உருவானவரும், நீக்கமற நிறைந்தவரும், மறைமுடிகளால் அறியத்தக்கவரும்,

---

* சிவன் என்னும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் - அப்பர்

சிவன் அருள் ஆய சிவன் திருநாமம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே! - திருமூலர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்பற்றவரும், அனைத்தினும் உயர்ந்தவரும், நிலையானவரும், ஓங்காரத்தில் உள்ள விந்துவின் இடையில் உறைபவரும், (சிவகருப்பம் சக்தி என்றும் சக்தி கருப்பம் பிரணவம் என்றும் முன்னர்க்கூறப்பட்டதே இது (பக்கம் 36); விந்து = சக்தி; பிரணவ உபாசனை சக்தியை வெளிப்படுத்த, அச் சக்தியில் சிவம் தரிசனமாகும்.) ஹ்ரீங்காரத்தால் அடையக் கூடியவரும், வெளிவடிவான **(உயிரின்) சிகையைப் பாவிக்கும்** முனிவரால் **பார்க்கப் படுபவரும்,** அறிவு வடிவானவருமான ஆன்மேசரை வணங்குகிறோம்.

விளக்க உரை :-

இறைவனின் அட்ட மூர்த்தங்களில் உயர்ந்தது உயிராகும். ஆன்மாவை இலிங்கமாக உடைமையால் இறைவனுக்கு ஆத்மலிங்காய நம; என்று வேதத்தில் அருச்சனை உள்ளது. அணுவினும் நுண்ணிய உயிரின் உருவம் மகாநாராயண உபநிடதத்தில் உரைக்கப்பட்டுள்ளது; இதய வெளியில் இருந்து கொண்டு உடல் முழுமைக்கும் சூடு தரவல்ல அக்கினியாக உயிர் உள்ளது; இந்த அக்கினியின் சிகையாக உயிருக்குள் உள்ள வெளி உரைக்கப்படுகிறது. இது மின்னற்கொடிபோல் ஒளிர்வது. (இதுவே தில்லைப் பொதுவாகும்) -तस्याः शिखाया मध्ये परमात्मा व्यवस्थितः இச்சிகையின் நடுவில் பரமான்மா வீற்றிருக்கிறார் என்று உபநிடதம் உரைக்கிறது. வெளிவடிவான இந்த உயிர்ச்சிகையைக் கண்டு கொண்டே 'சிவோஹம்' என்று பாவிப்பவர், தம்மை இழந்து பரமனிடம் யோகத்தால் ஒன்றுவர்; இதுவே தரிசனம் என்று இப்பாடலில் கூறப்படுகிறது; जीवो रङ्गः । नर्तक आत्मा ॥ 'உயிரே சபை; நடிப்பவன் சிவன்' என்று இறைவன் உபதேசித்த சிவ சூத்திரம் கூறுகிறது.

वेदान्तार्थविचक्षणै रतितरां ब्रह्मेति यः कथ्यते ।
अप्यन्यै र्योगिजनै र्महापुरुष इत्यष्टाङ्गिभि श्चिन्तितः
कैश्चिल्लोकविपत्तिकृत् त्रिनयनःश्रीनीलकण्ठः स्मृतः ।
तं वन्दे परमात्मनाथ मनिशं कुन्दद्रुमाधस्थितम् ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. உபநிடதப் பொருள் வல்லோரால் பிரமம் (பரம்பொருள்) என்று உரைக்கப்படுபவரும்; அட்டாங்கத்தில் வல்ல யோகியரால் மகாபுருடன் (இறைவன்) என்று எண்ணப்படுபவரும், வேறு சிலரால் உலகங்களை ஒடுக்கும் உருத்திரர் என்றும், முக்கண்ணர் என்றும், திருநீலகண்டர் என்றும் பலவகையாக நினைக்கப் படுபவரும் குருந்தமரத்தடியில் உள்ள பரமான்மநாதரே ஆவார். அவரை எப்போதும் வழுத்துகிறேன்.

திருச்சிற்றம்பலம்

श्री मन्त्रराजस्तव :

श्री आदिकैलास माहात्म्ये उत्तरभागे षोडशोध्याये पुरा श्री तीर्थनाथाराधनतत्परेण भक्तवर्येण कमलभुवा श्री आत्मनाथाराधनकांक्षिणे श्री रौक्षायणमहर्षये उपदिष्टक्रम मनुसृत्य अत्यन्तभक्तप्रियभक्ताय पुरूरवसे श्री धौम्यमहर्षिणोक्तमिदं श्री मन्त्रराजस्तवनमिति ॥

अस्य श्री मन्त्रराजस्तवस्य ब्रह्मा ऋषिः, अनुष्टुप्छन्दः,
श्री आत्मनायको देवता ।
ओं बीजं, ह्रीं शक्तिः, क्लीं कीलकं,
श्री आत्मनाथप्रसादार्थे जपे विनियोगः ॥

ह्रां अङ्गुष्ठाभ्यां नमः ।
ह्रीं तर्जनीभ्यां स्वाहा ।
ह्रूं मध्यमाभ्यां वषट् ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

हैं अनामिकाभ्यां हुम् ।

हौं कनिष्ठिकाभ्यां वौषट् ।

हः करतलकरपृष्ठाभ्यां फट् ।

एवं हृदयादि न्यासः। भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः॥

ध्यानम्

तुर्यातीतपदोर्ध्वगं गुणपरं सत्तामयं सर्वगम् ।
सम्वेद्यं श्रुतिशीर्षके रनुपमं सर्वाधिकं शाश्वतम् ॥
ॐकारान्तरबिन्दुमध्यसदनं ह्रींकारलभ्यं नुमः ।
व्योमाकारशिखाविभाविमुनिसन्दृश्यं चिदात्मेश्वरम् ॥
लं पृथिव्यात्मने गन्धं समर्पयामि इत्यादि पञ्चपूजा॥

स्तोत्रम्

ओङ्कारगम्य श्रोङ्कारवाच्य ओङ्कारविग्रहः ।
ओङ्कारशुक्तिकामुक्तामणि श्रोङ्कारवल्लभः ॥ १ ॥
ओङ्कारबिलपञ्चास्य श्रोङ्कारसुषिरोरगः ।
ओङ्कारपञ्जरशुक श्रोङ्कारान्तरवासकः ॥ २ ॥
ओङ्कारनलिनीहंस श्रोङ्कारावालकन्दरः ।
ओङ्कारसुमसौरभ्य श्रोङ्कारशमीहव्यवाट् ॥ ३ ॥
ओङ्कारगोक्षीरसर्पि श्रोङ्काराम्बरभास्करः ।
ओङ्कारदीपसुज्योति श्रोङ्कारद्विजराट्सुधा ॥ ४ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ओङ्कारवेदोपनिष दोङ्कारफलसद्रसः ।
ओङ्कारनवमाणिक्यसौधसन्निष्ठभूपतिः ॥ ५ ॥
नगेन्द्रतनयानाथो नानारूपसमन्वितः ।
नवनीलघनश्यामकन्धरो नागकुण्डलः ॥ ६ ॥
नमज्जनामरतरु र्नटनोत्सुकमानसः ।
नागभुग्वाहजनको नक्षत्रेशशिखामणिः ॥ ७ ॥
नवकर्पूरगौराङ्गो नलिनेक्षणसायकः ।
नादबिन्दुकलातीतो नागचर्मोत्तरीयकः ॥ ८ ॥
नागस्य जनको नम्यो नन्दिकेशसमर्चितः ।
नारायणार्चितो नानानिगमोदितमूर्तिमान् ॥ ९ ॥
नारसिंह्ममहादर्पकदलीवनकुञ्जरः ।
नवन्नवनमल्लोकसंघकारुण्यवार्षिकः ॥ १० ॥
नमद्ब्रह्मादिकोटीरनवरत्नोज्ज्वलांघ्रिकः ।
मायातीतो महामायी मनोवाचामगोचरः ॥ ११ ॥
मञ्जुलाङ्गो महायोगी महामेरुशरासनः
मन्मथध्वंसको मौनी मधुधारातिभाषकः ॥ १२ ॥
महीरथो महादेवो महोक्षवरवाहनः
माधुर्यजाह्ववीवीचीसम्प्लावितजटातटः ॥ १३ ॥
मनोरथफलातीतवरप्रदपदाम्बुजः ।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

महाप्रलयसञ्चारी महाकालो महानटः ॥ १४ ॥
मधुरापुरमध्यस्थविमानान्तरवासकः ।
मार्ताण्डकोटिसदृशो मायापुरनिवासकः ॥ १५ ॥
शिवाकृतिः शिवाकारः शिवानन्दवपुर्धरः ।
शिवाप्रियः शिवाज्ञेयः शिवयोगवनेश्वरः ॥ १६ ॥
शिवाधारः शिवमयः शिवासक्तहृदम्बुजः ।
शिवाङ्गीकृतवामाङ्गः शिवलोकेश्वरः शिवः ॥ १७ ॥
शिवासहायः शिखिदृक्छिखण्डी शिवलोकदः ।
शिवक्षेत्रविलासी च शिखरीन्द्रनिकेतनः ॥ १८ ॥
शिवभक्तहृदम्भोजनिवासी शिवपूः पतिः ।
वाग्मी वरिष्ठो वरदो वाताशविलसत्करः ॥ १९ ॥
वसुप्रदो वासुदेववर्यचक्रायुधप्रदः ।
वरकुन्दद्रुमावासी वटमूलतटाश्रयः ॥ २० ॥
वसुन्धरामराकारो वन्द्यो वात्सल्यवारिधिः ।
वामदेवो वर्यवर्यो वराभयकराम्बुजः ॥ २१ ॥
वसुरेता वरेण्यश्च वासवाद्यमरार्चितः ।
वशीकृताखिलाण्डश्च वाक्प्रदो वरदेशिकः ॥ २२ ॥
यज्ञकृद्यज्ञहृद्यज्ञध्वंसी यज्ञेश्वरो यमी ।
यमाद्यष्टाङ्गसन्दृश्यो यन्ता यज्ञविदुत्तमः ॥ २३ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

यथेच्छासृष्टभुवनो यथार्थजनवत्सलः ।
यथाश्रितजनक्लेशो यज्ञसन्दृश्यविग्रहः ॥ २४ ॥
यमप्रहर्ता यक्षेशसखा यातुगुणान्तकः ।
यज्ञमृग्यो यज्ञसाध्यो यज्ञविश्रान्तिभूरुहः ॥ २५ ॥
यतीशो यतिचित्तारविन्दनर्तविधायकः ॥ २६ ॥
आत्माऽन्तरात्मा परमात्माऽऽदिकैलासनायकः ।
आत्मनाथस्तीर्थनाथः शब्दनाथः सदाशिवः ॥ २७ ॥
अष्टाविम्शोत्तरशतै रेतै र्नामभि रुज्ज्वलम् ।
अखण्डं मन्त्रराजाख्यस्तव मब्जभवोदितम् ॥ २८ ॥
सकृत् पठित्वा मनुजः श्रुत्वा वा सर्वभोगभुक् ।
सर्वाघौघविनिर्मुक्तः स जीवेच्छरदः शतम् ॥ २९ ॥

इति शिवम्

श्री मन्त्रराजनामावलिः

1. ओं ओङ्कारगम्याय नमः
2. ओं ओङ्कारवाच्याय नमः
3. ओं ओङ्कारविग्रहाय नमः
4. ओं ओङ्कारशुक्तिकामुक्तामणये नमः
5. ओं ओङ्कारवल्लभाय नमः
6. ओं ओङ्कारबिलपञ्चास्याय नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. ओं ओङ्कारसुषिरोरगाय नमः
8. ओं ओङ्कारपञ्जरशुकाय नमः
9. ओं ओङ्कारान्तरवासकाय नमः
10. ओं ओङ्कारनलिनीहंसाय नमः
11. ओं ओङ्कारावालकन्दराय नमः
12. ओं ओङ्कारसुमसौरभ्याय नमः
13. ओं ओङ्कारशमीहव्यवाहे नमः
14. ओं ओङ्कारगोक्षीरसर्पिषे नमः
15. ओं ओङ्काराम्बरभास्कराय नमः
16. ओं ओङ्कारदीपसुंज्योतिषे नमः
17. ओं ओङ्कारद्विजंराट्सुधायै नमः
18. ओं ओङ्कारवेदोपनिषदे नमः
19. ओं ओङ्कारफलसद्रसाय नमः
20. ओं ओङ्कारनवमाणिक्यसौधसन्निष्ठभूपतये नमः
21. ओं नगेन्द्रतनयानाथाय नमः
22. ओं नानारूपसमन्विताय नमः
23. ओं नवनीलघनश्यामकन्धराय नमः
24. ओं नागकुण्डलाय नमः
25. ओं नमज्जनामरतरवे नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

26. ओं नटनोत्सुकमानसाय नमः
27. ओं नागभुग्वाहजनकाय नमः
28. ओं नक्षत्रेशशिखामणये नमः
29. ओं नवकर्पूरगौराङ्गाय नमः
30. ओं नलिनेक्षणसायकाय नमः
31. ओं नादबिन्दुकलातीताय नमः
32. ओं नागचर्मोत्तरीयकाय नमः
33. ओं नागस्य जनकाय नमः
34. ओं नम्याय नमः
35. ओं नन्दिकेशसमर्चिताय नमः
36. ओं नारायणार्चिताय नमः
37. ओं नानानिगमोदितमूर्तिमते नमः
38. ओं नारसिह्ममहादर्पकदलीवनकुञ्जराय नमः
39. ओं नवन्नवनमल्लोकसंघकारुण्यवार्षिकाय नमः
40. ओं नमद्ब्रह्मादिकोटीरनवरत्नोज्ज्वलांघ्रिकाय नमः
41. ओं मायातीताय नमः
42. ओं महामायिने नमः
43. ओं मनोवाचामगोचराय नमः
44. ओं मञ्जुलाङ्गाय नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

45. ओं महायोगिने नमः
46. ओं महामेरुशरासनाय नमः
47. ओं मन्मथध्वंसकाय नमः
48. ओं मौनिने नमः
49. ओं मधुधारातिभाषकाय नमः
50. ओं महीरथाय नमः
51. ओं महादेवाय नमः
52. ओं महोक्षवरवाहनाय नमः
53. ओं माधुर्यजाह्नवीवीचीसम्प्लावितजटातटाय नमः
54. ओं मनोरथफलातीतवरप्रदपदाम्बुजाय नमः
55. ओं महाप्रलयसञ्चारिणे नमः
56. ओं महाकालाय नमः
57. ओं महानटाय नमः
58. ओं मधुरापुरमध्यस्थविमानान्तरवासकाय नमः
59. ओं मार्ताण्डाकोटिसदृशाय नमः
60. ओं मायापुरनिवासकाय नमः
61. ओं शिवाकृतये नमः
62. ओं शिवाकाराय नमः
63. ओं शिवानन्दवपुर्धराय नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

64. ओं शिवाप्रियाय नमः
65. ओं शिवाज्ञेयाय नमः
66. ओं शिवयोगवनेश्वराय नमः
67. ओं शिवाधाराय नमः
68. ओं शिवमयाय नमः
69. ओं शिवासक्तहृदम्बुजाय नमः
70. ओं शिवाङ्गीकृतवामाङ्गाय नमः
71. ओं शिवलोकेश्वराय नमः
72. ओं शिवाय नमः
73. ओं शिवासहायाय नमः
74. ओं शिखिदृशे नमः
75. ओं शिखण्डिने नमः
76. ओं शिवलोकदाय नमः
77. ओं शिवक्षेत्रविलासिने नमः
78. ओं शिखरीन्द्रनिकेतनाय नमः
79. ओं शिवभक्तहृदम्भोजनिवासिने नमः
80. ओं शिवपूःपतये नमः
81. ओं वाग्मिने नमः
82. ओं वरिष्ठाय नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

83. ओं वरदाय नमः
84. ओं वाताशविलसत्कराय नमः
85. ओं वसुप्रदाय नमः
86. ओं वासुदेववर्यचक्रायुधप्रदाय नमः
87. ओं वरकुन्दद्रुमावासिने नमः
88. ओं वटमूलतटाश्रयाय नमः
89. ओं वसुन्धरामराकाराय नमः
90. ओं वन्द्याय नमः
91. ओं वात्सल्यवारिधये नमः
92. ओं वामदेवाय नमः
93. ओं वर्यवर्याय नमः
94. ओं वराभयकराम्बुजाय नमः
95. ओं वसुरेतसे नमः
96. ओं वरेण्याय नमः
97. ओं वासवाद्यमरार्चिताय नमः
98. ओं वशीकृताखिलाण्डाय नमः
99. ओं वाक्प्रदाय नमः
100. ओं वरदेशिकाय नमः
101. ओं यज्ञकृते नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

102. ओं यज्ञहृदे नमः
103. ओं यज्ञध्वंसिने नमः
104. ओं यज्ञेश्वराय नमः
105. ओं यमिने नमः
106. ओं यमाद्यष्टाङ्गसन्दृश्याय नमः
107. ओं यन्त्रे नमः
108. ओं यज्ञविदुत्तमाय नमः
109. ओं यथेच्छासृष्टभुवनाय नमः
110. ओं यथार्थजनवत्सलाय नमः
111. ओं यथाश्रितजनक्लेशाय नमः
112. ओं यज्ञसन्दृश्यविग्रहाय नमः
113. ओं यमप्रहर्त्रे नमः
114. ओं यक्षेशसखाय नमः
115. ओं यातुगुणान्तकाय नमः
116. ओं यज्ञमृग्याय नमः
117. ओं यज्ञसाध्याय नमः
118. ओं यज्ञविश्रान्तिभूरुहाय नमः
119. ओं यतीशाय नमः
120. ओं यतिचित्तारविन्दनर्तविधायकाय नमः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

121. ओं आत्मने नमः

122. ओं अन्तरात्मने नमः

123. ओं परमात्मने नमः

124. ओं आदिकैलासनायकाय नमः

125. ओं आत्मनाथाय नमः

126. ओं तीर्थनाथाय नमः

127. ओं शब्दनाथाय नमः

128. ओं सदाशिवाय नमः

नानाविध परिमल पत्रपुष्पाणि समर्पयामि ।

श्री शिवार्पणमस्तु ॥

மந்திர ராஜம்
(திருப்பெயர்களின் பொழிப்பு)

1. ஓங்காரத்தால் அடையத் தக்கவர் (மந்திரத்தை ஜபித்தலாலும்; மந்திரப் பொருளைத் தியானித்தலாலும்)
2. ஓங்காரப் பொருள் ஆனவர் (ஓங்காரம் என்னும் வாசகத்தின் வாச்சியம்)
3. ஓங்கார உருவினர் (ஓங்காரமே அவரது வடிவமாகும்)
4. ஓங்காரச் சிப்பியில் உள்ள முத்து
5. ஓங்காரம் என்ற தலைவிக்குத் தலைவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. ஓங்காரக் குகையில் உள்ள சிங்கம்
7. ஓங்காரப் பொந்தில் உள்ள பாம்பு *
8. ஓங்காரக் கூட்டில் உள்ள கிளி
9. ஓங்காரத்தின் உள்ளே வசிப்பவன்.
10. ஓங்காரத் தாமரையில் அமர்ந்த அன்னம்
11. ஓங்காரப் பாத்திக்குள் உள்ள குழி
12. ஓங்கார மலரின் மணம்
13. ஓங்கார வன்னியில் எழும் தீ
(வன்னி - வேள்வியில் பயன்படும் மரம்)
14. ஓங்காரப் பசுப்பாலில் உள்ள நெய்
15. ஓங்கார விண்ணில் ஒளிரும் சூரியன்
16. ஓங்காரச் சுடரின் நல்லொளி
17. ஓங்காரத் திங்களின் அமுதம்
18. ஓங்கார வேதத்தின் உபநிடதம் (உச்சி)
19. ஓங்காரக் கனியின் சாறு
20. ஓங்கார நவமணி மாளிகையில் கொலுவிருக்கும் மன்னன்
21. மலையரசன் மகளுக்கு தலைவன்
22. பலவகை வடிவோடு கூடியவன்
23. புதிய கார்மேகம் போன்ற கழுத்தினன்
24. பாம்பைக் குழையாகக் கொண்டவன்
25. வணங்கும் மக்களுக்குக் கற்பகமரம்

---

*பாம்பைக் குறிக்க உரகம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது; மார்பால் ஊர்வதால் பாம்பு உரகம் எனப்படும்; உரகம் என்ற சொல் சிலேடையால் நெஞ்சால் நினைப்பதால், தியானிப்பதால் அடையக்கூடிய பொருள் என்ற பொருளையும் தந்து நிற்கிறது. आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम्। ध्याननिर्मथनाभ्यासाद्देवं पश्येन्निगूढवत् ॥

'தன்னை ஓர் அரணியாகவும், பிரணவத்தை மற்றோர் அரணியாகவும் கொண்டு தியானத்தால் முறுகவாங்கிக் கடைவதால், (ஒளிந்திருக்கும் தீயை வெளிக்கொணர்வது போல்) தெய்வத்தைக் காணத்தகும்' என்று உபநிடதம் உரைப்பதும் இதன் விரிவாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

26. ஆடுவதில் மகிழ்பவன்
27. திருமாலைப் பயந்தவன்
28. திங்களைச் சூடி
29. புதிய கற்பூரம் போல வெளுத்த மேனியன்
30. கமலக்கண்ணனை அம்பாகக் கொண்டவன்
31. நாத, பிந்து, கலைகளைக் கடந்தவன்
32. யானைத் தோலைப் போர்த்தியவன்
33. யானைக்குத் தந்தை
34. அனைவராலும் வணங்கப்படுபவன்
35. நந்திகேசரால் நன்கு அருச்சிக்கப் பட்டவன்
36. நாராயணரால் அருச்சிக்கப் பட்டவன்
37. வெவ்வேறு வேதாகமங்களால் உணர்த்தப் படும் உருவினன்
38. நரசிங்கத்தின் மிகுந்த கொழுப்பென்னும் வாழைத்தோட்டத்தைப் பாழாக்கிய யானை.
39. புதுப்புதிதாக ஆட்கொள்ளப்படுவோரின் மீதும் கருணையைப் பொழிபவன்.
40. வணங்கும் பிரமன் முதல் தேவரின் முடி நவமணிகளால் ஒளிரும் பாதத்தை உடையவன்.
41. மாயைக்கு (சிருட்டிக்கு) அப்பாலான்
42. மாமாயைக்கு நாயகன்
43. மனமொழிகளுக்கு எட்டாதவன்
44. அழகிய உறுப்புக்களை உடையவன் (கண்ணுக்கினியான்)
45. பெரிய யோகி
46. மகாமேரு என்னும் வில்லினன்
47. மன்மதனைத் துவைத்தவன்
48. மௌனி
49. தேன் ஒழுக்கை ஒத்த இனிய மொழியினன்
50. பூமித் தேரான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

51. மகாதேவன் (தேவரனைவர்க்கும் பெருந் தெய்வம்)
52. பெரிய எருதினை ஏறுபவன்
53. இனிய கங்கை அலைவீசும் சடையன்
54. நினைத்ததினும் மேலான வரத்தை அருளும் பாத மலரினன்.
55. மகாப் பிரளயத்தில் (தனியாக) உலவுபவன்
56. மகாகாலன் (காலங் கடந்தவன்)
57. மிகவும் நடிப்பவன்
58. மதுரை மாநகரின் நடுவில் (இந்திரன் அமைத்த) விமானத்துள் வசிப்பவன்
59. கோடி சூரியர்கள் போன்றவன்
60. மாயாபுரியில் வசிப்பவன்
61. சிவை வடிவினன்
62. சிவ உருவினன்
63. சிவானந்தமே இவன் உடல்
64. சிவைக்குப் பிரியன்
65. சிவையால் அறியத்தக்கவன்
66. சிவயோகவனத்தின் (திருப்பெருந்துறையின்) தலைவன்
67. சிவமாகிய ஆதாரம்
68. சிவத்தால் நிறைந்து வழிபவன்
69. இதயத்தாமரையில் சிவையைப் பற்றியவன்
70. இடப்பாகத்தில் சிவையை வைத்தவன்
71. சிவனுலகின் தலைவன்
72. சிவன் (இன்ப மங்கள வடிவினன்)
73. சிவையோடு இருப்பவன்
74. தீவிழியான்
75. (கொக்கிறகுக்) கொண்டையன்
76. சிவலோக வாழ்வளிப்பவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

77. சிவத்தலங்களில் சிறப்பாக விளங்குபவன் (சிவக்ஷேத்ரம் என்று கூறப்படும் திருப்பெருந்துறையில் விளங்குபவன்)
78. மலையரசனை இருப்பிடமாகக் கொண்டவன்
79. சிவபக்தர்களின் இதயத் தாமரைகளில் நிலைபெற்றவன்*
80. சிவபுரத்தின் (திருப்பெருந்துறையின்) பதி
81. (வேத) வாக்கிற்கு உரியவன்
82. மேலானவன்; உயர்ந்தவன்
83. வரமளிப்பவன்
84. அரவங்களால் அலங்கரிக்கப்பட்டவன்
85. செல்வங்களை அளிப்பவன்
86. வாசுதேவருக்கு உயர்ந்த சக்கரத்தை** அளித்தவன்
87. பெருமைமிக்க குருந்தடியில் வசிப்பவன்
88. ஆலமர் செல்வன்
89. அந்தணர் வடிவினன்
90. அனைவராலும் வந்திக்கப்படுபவன்
91. தாய் அன்புக்கடல்
92 வாமதேவன் (ஒளிமிக்கவன்)
93. மேலானவர்களில் மேலானவன்
94. வர, அபய கர கமலங்கள் கொண்டவன்
95. செல்வங்களுக்கு மூலப் பொருள்
96. போற்றத் தக்கவன்
97. இந்திரன் முதல் அமரரால் அருச்சிக்கப்பட்டவன்

---

* காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே! (அப்பரடிகள்)

**சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடி?
நலமுடைய நாரணன்தன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இட, ஆழி அருளினன்காண் சாழலோ (திருவாசகம் 12.18)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

98. படைப்பனைத்தையும் தன்பால் ஈர்ப்பவன் (சிவ என்ற சொல்லின் பல பொருள்களில் இதுவும் ஒன்று; வசப்படுத்துவதால் சிவன்)
99. வாக்கை அளிப்பவன்
100. உயர்ந்த ஆசான்
101. வேள்வியைப் படைத்தவன்
102. வேள்வியின் இதயம்
103. (தக்கன்) வேள்வியை அழித்தவன்
104. வேள்வியின் தலைவன்
105. புலன்களை அடக்கியவன்
106. இயமம் முதல்அட்டாங்க யோகத்தால் காணத்தக்கவன்
107. ஓட்டுபவன் (தூண்டுபவன்) / நியமிப்பவன்
108. வேள்வி அறிஞரில் சிறந்தவன்
109. இச்சைப்படி உலகங்களைப் படைப்பவன் (சங்கல்பத்தினால் என்று பொருள்)
110. உயிர்களை உண்மையில் நேசிப்பவன் / மெய்யர்க்கு அன்பன்
111. உயிர்களின் துன்பங்களைத் துடைப்பவன்
112. வேள்வியால் இவன் உருவம் அறியலாகும்
113. இயமனை நன்கு அழித்தவன்
114. இயக்கர் அரசனாகிய குபேரனுக்குத் தோழன்
115. அசுர இயல்புகளை அழிப்பவன்
116. வேள்வியால் தேடப்படுபவன் (வேள்வி = திருமால் = உயிர்) *

'வேள்வியே திருமால்' என்னும் வேதமொழி यज्ञो वै विष्णुः

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

117. வேள்வியால் அடையத் தக்கவன்
(வேள்வி = உயிர் மற்றும் உயிரின் சாதனை)*
118. வேள்வி நிறைவுறும் நிழல்தரு**
119. துறவியர் தலைவன்
120. துறவிகளின் உள்ளத்தாமரைகளைத் துள்ளும்படிச் செய்யும் ஞானசூரியன்
121. ஆன்மா
122. அந்தரான்மா (உயிருக்கு உயிர் - சாட்சிப் பொருள்)
123. பரமான்மா
124. ஆதிகைலாசத்தின் (திருப்பெருந்துறையின்) நாயகன்
125. ஆன்ம நாதன்
126. தீர்த்த நாதன்
127. சப்த நாதன் (சப்தம் = வேதம்)
128. சதாசிவன் (நித்திய மங்கள வடிவினன்)

---

*(தத் விஷ்ணோ: பரமம் பதம் = தற்பதமாகிய சிவபதம் விஷ்ணுவுக்கு மேலானது; விஷ்ணுவால் அடையத் தக்கது என்ற வேதப் பொருள். விஷ்ணோ: என்ற சொல்லை ஐந்தாம் வேற்றுமைப் பொருளிற் கொண்டால் விஷ்ணுவின் மேலான சிவபதம் என்றும்; ஆறாம் வேற்றுமைப் பொருளின் கொண்டால் விஷ்ணுவினுல் அடைதற்குரிய சிவபதம் என்றும் பொருள்படும். தத்பதம் விஷ்ணோ: பரமம் என்றும் விஷ்ணோ: பதம் தத்பரமம் என்றும் முறையே அன்வயம் கொள்ளற் பாலது. (இராமனுடைய வீடு என்பது இராமன் எய்தி இருத்தற்குரிய இல்லமாம்) இரண்டிடத்தும் 'பதம்' என்ற சொல் 'ப்ராப்யம் ஸ்தானம்' அடையத் தக்க இடம் (இலக்கு) என்றே பொருள்படும். உயிர்களால் அடையத் தக்க நிலை, பந்தத்திற்கு அப்பால் உள்ள சிவநிலை என்பது வெளிப்படை. இதனுலேயே உயிர்களை 'அமுதத்தின் புதல்வர்களே, எழுந்திருங்கள் !' என்று உபநிடதம் எழுப்பும். 'அமுதமும் அக்கரமும் அரன்' என்ற மற்றோர் உபநிடதம் விளக்கும் (क्षरं प्रधानं अमृताक्षरं हरः - श्वेताश्वतरोपनिषत्)

** ஈசனை எய்திய பிறகு முயற்சிகள் / முனைப்புகள் இல்லை
"கயன்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயன் மாண்டு, அருவினைச் சுற்றமும் மாண்டு, அவனியின் மேல்
மயன்மாண்டு, மற்றுள்ள வாசகம் மாண்டு, என்னுடைய
செயன் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ?"
(திருவாசகம் 11.11)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மந்திர ராஜத்தில்

ஆன்மநாதரைச் சிறப்பாகக் குறிக்கும் திருப்பெயர்கள்

திருப்பெயர்கள் 1 - 20

முதல் இருபது திருப்பெயர்கள், இறைவனே ஓங்காரத்தின் உட்பொருள் என்ற உண்மையை அழகிய உருவகங்களால் எடுத்தியம்புகின்றன. नमस्ताराय தார வடிவினனுக்கு வணக்கம் என்ற திருஉருத்திரம் இவற்றுக்கு மூலமாகும்; தன்னை எண்ணுவோரைப் பவக் கடலினின்று கைதூக்கிவிடுவதால் ஓங்காரமே தாரம் எனப் படும் என்று அதர்வவேத உபநிடதம் பகர்கிறது. தாரணம் என்ற சொல் கடக்கச் செய்தல் என்ற பொருளைத் தரும்; அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்ற ஐந்தெழுத்து உறுப்புக்களின் சமஷ்டியான *ஓங்காரம் பஞ்சாக்கரத்தின் சூக்கும வடிவமாகும்;* ஐந்தொழிலையும் ஐந்தெழுத்தையும் உணர்த்தும் ஆனந்த நடராசரின் திருமேனியைச் சுற்றி உள்ள திருவாசி ஓங்காரமே என்று 'உண்மை விளக்கம்' உணர்த்துகிறது.

திருப்பெருந்துறையில், ஆன்மநாத குரு, திருவாதவூரருக்கு உபதேசித்ததும் இவ் ஓரெழுத்தே! இவ்வுண்மையை

> 'நோக்கி நுண்ணிய நொடியன சொல் செய்து
> நுகமின்றி விளாக்கைத்துத்
> தூக்கி, முன்செய்த பொய் அறத் துகளறுத்து
> எழுதரு சுடர்ச்சோதி' (திருவாசகம் 26.8)

என்ற திருவாக்கால் அறியலாம். 'நோக்கி' என்றதால் முன்னதாக நயன தீட்சையும், 'நுண்ணிய நொடியன சொல் செய்து' என்பதால் உபதேசிக்கப்பட்ட மந்திரம் நுண்ணிதான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓரெழுத்துமொழி என்பதும், 'நுகமின்றி விளாக் கைத்துத் தூக்கி' என்பதால், செயலால் *தாரம்* என்ற சிறப்புப் பெயர் கொண்ட பிரணவமே அம்மந்திரம் என்பதும் உணரத்தக்கன. மந்திர தீட்சையில், மந்திரத்தைப் பொருளோடு உபதேசிப்பது உயர்ந்தோர் மரபாம். அங்ஙனமே ஆன்மநாத குரு செய்தார் என்பதைத்

'தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே?'

என்ற திருவாசகத்தால் (51.7) தெளிவு பெறலாம். 'மாசில் மணியின் மணிவார்த்தை பேசி' (திருவாசகம் 48.7) என்று வேறிடத்துக் கூறுவதும் இதனை வலியுறுத்தும்; மணி என்பது தீட்டப் பெற்ற பல முகங்களால் ஒளிரும் ஒரு பொருளாக விளங்குவதைப் போல, உபதேசிக்கப்பட்ட மந்திரமும் ஐந்தெழுத் துறுப்பால் அமைந்த ஓரெழுத்தே என்பது உய்த்துணர்த்தப்படும். இவ்விடத்தில் மட்டுமல்லாமல்,

'மன்ன! என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றினுய்!' (23.2) என்ற அடிகள் வாக்கிலும் ஓர் வார்த்தை எனப்பட்டது ஓங்காரமே; ஓங்காரமே ஓரெழுத்தென்றும் ஒரு மொழி என்றும் உரைக்கப்படும்.

"ஓம் எனும் ஓங்காரத் துள்ளே ஒரு மொழி" என்ற திருமூலர் வாக்கால் இங்ஙனம் அறியலாகும். ஐந்துறுப்பான் அமையினும் பிரணவம் ஒரு பதமே என்பது இதன் பொருள்; ஆனால் பஞ்சாக்கரம்,

"சிவன் அருள் ஆன்மா திரோதம் மலமாயை" (திருமந்திரம் 2711) என்ற முறையால் ஒவ்வோரெழுத்தும் ஒவ்வொரு பதமாதலால், ஐந்தெழுத்து என்றும் ஐந்துமொழி என்றும் அறியப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" (7.83:1) என்ற நம்பி ஆரூரர் தேவாரம் இதனை வலியுறுத்தும்.

இனி, உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை மானதமாகவோ, சுத்த மானதமாகவோ கணிக்கும் சாதகருக்கு மூன்றுவித தாரணைகள் கூறப்படும்:- சுரசுத்தமாக மந்திரத்தின் ஒலியை உற்றுநோக்குதல் சப்ததாரணை எனப்படும்; மந்திரத்தின் பொருளை (சாத்திர ரீதியாக) உன்னியிருத்தல் அர்த்ததாரணையாம்; மந்திரத்தால் உணர்த்தப்படும் தெய்வத்தின் உருவைச் சிந்தித்திருத்தல் ரூபதாரணையாம். வாதவூரடிகளுக்கோ பரம்பொருளே மனித உருவில் வந்து தன் சூக்கும வடிவமாகிய பிரணவத்தையே உபதேசித்துத் தன் உருவை எண்ணியிருக்கும் வண்ணம் பணித்து மறைந்தது:-

"இங்கு உனைப்போல் இருந்த நம் குருவடிவை நின் கருத்தில் இருத்துவாய்; பொருள் இது" என்று ஆன்மநாதர் அடிகள் பால் கூறுகிறார். (திருவாதவூரடிகள் புராணம் 122)

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே'

(திருமந்திரம் 139) என்றதற்கியைய எங்குருநாதராகிய வாதவூரடிகள் சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் சிந்தையால் நினைப்பற அங்ஙனம் நினைந்தார் (22.7). அங்ஙனம் முனைப்பின்றி முனைவார் உள்ளத்தே இறைவன் தான் உபதேசித்த மந்திரத்தின் உருவையே தாங்கிக் காட்சி தந்தனன் என்பதை

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! " (1.33-34) என்ற அனுபூதியால் அறிய வேண்டும். திருப்பெருந்துறைப் புராணப்படி ஆன்மநாதர் காலாக்கினி உருத்திரருக்குப் பஞ்சாக்கர மந்திரத்தை உபதேசித்தார். தாம் உபதேசித்த மந்திரத்தின் உருவிலேயே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் சிந்தையுள் எழுந்தருளிநின்றார் என்பதை "ஐந்தெழுத்து உருவினராய குருவுக்கு வணக்கம்" (மூன்றாம் துதி எட்டாம் பாடல் பக்கம் 12) என்று உருத்திரர் போற்றுவதாலேயும் உணரலாம். எனவே உபதேசித்த மந்திரமே உள்ளத்தில் உருவெடுத்து வரும் என்பது ஒருதலை.

"இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள்" (1.2) என்றும்

"படமாக என்னுள்ளே தன்இணைப்போது அவை அளித்து இங்கு இடமாகக் கொண்டிருந்து " (13.14) என்றும்

"மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருக" (38.9) என்றும் தன் தியானத்தைத் தன் செயலாய் உணராமல் குரு வருளாகவே அடிகள் உரைப்பதாலும் ரூபதாரணை செய்யுமாறு அடிகட்கு ஆன்மநாதகுரு உத்தரவிட்டமை உணரப்படும். உருவதாரணையே உடனடிப் பலனளிப்பது என்பதை

'கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயம் கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்த *அப் போதே*
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே'

என்ற திருமந்திரத்தால் (2659) உணரலாம். உருவதாரணை கூடுவதும் கலைவதும் இறைவன் செயலாம். திருவருளால் அது கலையும் போதெல்லாம்,

"இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன்" (30.3) என்றும்

"முத்தா உன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண அத்தா சால ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே!" (25.6) என்றும் இப்போக்கில் பிற இடத்தும் அடிகள் புலம்புதலும் காண்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்ஙனம் மந்திரோபதேசத்தினை ரூபதாரணை செய்துவந்து அடிகட்கு அம்மந்திர வடிவாகவே குருமூர்த்திகள் காட்சி தந்தமை சிவபுராணத்தால் (1.33-34) பெறப்படுவதால் ஆன்மநாதகுரு உபதேசித்ததும் தம் உருவமாய பிரணவ மந்திரமே என்பது உறுதிப்படும்.

தொன்றுதொட்டுச் சிவவேதியரல்லாத ஏனைப் பலவகை வேதியருள்ளும் சிவபாத இருதயர் - பகவதி அம்மையார் தம்பதியைப் போல 'மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையினார்' (பெரிய புராணம் 1920) உண்டு.

சிவநெறியில் வந்த அந்தணர்க்கு உபநயனத்தின் போது காயத்திரியுடன் பஞ்சாக்கரத்தையும் தந்தைமார் உப்தேசிக்கும் மரபு பண்டைய நாளில் இருந்தது. சிறுமியர்க்குத் திருமணத்தில் கணவனுல் பஞ்சாக்கரம் உபதேசிக்கப்படும். (இம்மரபு மிக அருகித் தற்காலத்தில் சில குடும்பங்களில் மட்டும் காணப்படுகிறது).

"செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" (3.22.2)

என்ற தமிழ்மறை காண்க! செம்மை வேதியர் காயத்திரியை விடுத்து ஐந்தெழுத்தை மட்டில் ஓதினர் என்று இதற்குப் பொருள் காணல் கூடாது. ஏனெனில், ' ஸ்நாநம், ஸந்த்யை, ஜபம், ஹோமம், பூசை, விருந்தோம்பல், வைச்வதேவம்' என்ற வரிசையில் அந்தணரின் அன்றாடக் கிரியைகள் மிருதிகளால் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஸந்த்யை என்பது அருக்கியதானமாம்; ஜபம் என்பது காயத்திரி ஜபமாம்; ஹோமம் என்பது அக்கினி காரியம்; பிரமசாரிக்கு ஸமிதாதானமும், இல்லறத்தானுக்கும் வானப்பிரத்தனுக்கும் ஒளபாசன அக்னி ஹோத்ரங்களும், துறவிக்கு ஞானமும் அக்னிகளாகும். 'செந்தழல் ஓம்பிய' என்ற பெயரெச்சத்தில் உள்ள இறந்த காலம், அக்னி காரியத்தின் பிறகு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐந்தெழுத்தைக் கணிக்கக் கூறுகிறது. இங்ஙனம் கணித்தல் பூசைக்கு அங்கமாகவும் ஆகலாம்; பூசையாகவும் ஆகலாம். காயத்திரி ஜபம் அக்னிகாரியத்திற்கு முன்பே ஆகி விடும்.

இம்மரபுப்படி வாதவூரடிகளுக்கு உபநயனத்தின் போதே ஐந்தெழுத்துபதேசம் ஆகி இருந்தது.

"இனி என்னே உய்யுமாறு? என்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய்" (5.3.7)

என்று அடிகள் கூறுவதால் ஆன்மநாதகுருவின் தரிசனத்திற்கு முன்பே அவர் ஐந்தெழுத்தாம் புணையைப் பற்றி இருந்தார் என்று நாம் அறிய வேண்டும். இப்பயிற்சியின் (தவத்தின்) பயனுகவே குருநாதரின் திருவடி தரிசனம் ஆயிற்று; திருவடி நேரில் தரிசிக்கப் பெற்றதாலேயே அது இமைப்பொழுதும் நீங்காது இதயத் துணரப் பட்டது என்ற வரிசையை (காரண-காரியத் தொடர்ச்சியை)

"நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்
வாழ்க!" (1.1-2)

என்ற அனுபூதி மலரின் மணமாக அறிய வேண்டும். அடிகள் பயின்று வந்தது ***நமச்சிவாய*** என்னும் ஐந்தெழுத்தாம். இது இறைவனுக்குத் திருநாமமாகவும் ஆகும்.

"நகார முதலாகும் நந்திதன் நாமமே" (2699) என்ற திருமந்திரம் காண்க. உலகியலிலும் நமச்சிவாயம் என்று பெயரிடுவதையே காண்கின்றனம். ஆளுடைய பிள்ளை யாரும், "நாதன் நாமம் நமச்சிவாயவே" என்பார். அடிகள், "எண்ணிலேன் திரு *நாம அஞ்செழுத்தும்* என் ஏழமை அதனுலே" (26.6) என்று வேறிடத்தும் கூறுவதாலும் அவர் பயின்று வந்த ஐந்தெழுத்தின் உருவம் உணரலாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபதேசிக்கப்பட்ட மந்திரத்தைச் சீடன் வாழ்நாள் முழுவதும் ஓத வேண்டும்.

"உடல் இலங்கும் உயிர் உள்ளளவும் தொழ
உள்ளத் துயர்போமே" (1.3.8)

என்ற தேவாரத்தால் இஃதுணரப்படும். 'எனை நான் என்பதறியேன்; பகல் இரவாவதும் அறியேன்' என்ற சமாதி நிலையில் அம்மந்திரம் தானுக ஒலிக்கும். இவ்வுண்மையை 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற சுந்தரர் திருவாக்கால் உணர்க. நான் மறக்கினும் = (தன்உணர் விழந்த) சமாதி கைகூடினும், உனை நா சொல்லும் உன் பெயராலே என்பது இதன் பொருள். (நம் அடிகள் இந்நிலையைக் "கூத்தனை நாத் தழும்பேற வாழ்த்தி" (9.15) எனக் குறிப்பிடுவார். (கூத்தன் = நமச்சிவாய)

'சொல்லும் நா நமச்சிவாயவே' என்பதில் உள்ள தேற்றேகாரம் பிறவற்றை விலக்கி என்றும் - இன்றும் நம்பி ஆரூரர் சொல்லிக் கொண்டிருப்பது நமச்சிவாயவே என்ற பேருண்மையைப் பயக்கும். இச் சப்த தாரணை உருவதாரணையுடன் கூடியது என்பதைத் 'திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்றும், இதன் பயன் பிறப்பறுத்தல் என்பதைப் 'பிறவாத தன்மை வந் தெய்தினேன்' என்றும் நம்பி ஆரூரர் அருள் செய்கிறார். பெரியபுராணம் காட்டும் சுந்தரர் வரலாற்றின்படி மன்னனால் வளர்க்கப்பட்டும் 'தங்கள் வருமுறை மரபில் வைகி' 'அருமறை முந்நூல் சாத்தி' 'அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக் கேற்பச் சடங்கவி மகளை மணம் புணர இருந்த ஆரூரர் 'இழியாக் குலத்தில்' பிறந்த இப் பெருமையால் தந்தையாராகிய சடையனாரிடமிருந்தன்றிப் பிறரிடமிருந்து நமச்சிவாய மந்திரத்தைப் பெற்றிருக்க வாய்ப்பில்லை. இம் மந்திரப் பயிற்சியினாலேயே இறைவன் தன்னைத் தடுத்தாட் கொண்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போது '**எங்கள் நம்பர்** தங் கோயில் புக்க தென்கொலோ?' என்ற உரிமை உணர்வு உண்டாயிற்று. எனவே சிவவேதியருள்ளும் தந்தை - மகன் என்ற தொடர்ச்சியில் நம்முதலாகிய மந்திரம் உபதேசிக்கப்பட்டு வந்தமை புலனாகும். நமச்சிவாய மந்திரம் பயில்வோர் 'நம்பெருமான் இறைவன்' என்ற அன்புணர்வால் உரிமை கொண்டாடும் இயல்பினர் ஆவர் என்பதை '**நம்பன் நாமம் நமச்சிவாயவே**' (3.49.2) என்ற மறைமொழி உணர்த்தும். 'நந்தலைவன் சிவன்' என்று தன் அடிமையை உணர்ந்து இன்ப அன்பும் ' அத்தனுக்கு ஆளாயினேன்' என்ற இறும் பூதும் ஆன்மா எய்தும்.

இவ் அனைத்தையும் சேர நோக்கினால், தமக்குக் குருநாதனைத் தரிசிப்பித்த மந்திரத்தை 'நமச்சிவாய வாழ்க' என வாழ்த்தியும், குருநாதனுல் பிரணவமும் அதன் பொருளும் உபதேசிக்கப்பட்டபின் திருச்சதகத்தில் 'போற்றி ஓம் நமச் சிவாய' என்று நான்கு முறை இரண்டையும் இணைத்துப் போற்றியும் அடிகள் சென்றுள்ளமையின் பொருள் புலனுகும்.

பஞ்சபிரமமந்திரங்களும் நமச்சிவாய மந்திரமுமே தொன்றுதொட்டு அந்தணரின் சிவபூசையில் பயன்பட்டு வருவன வாகும். "நமச்சிவாய என்று உன் அடி பணியாப் பேயன் " (23.7) என்ற அடிகள் வாக்கால் அடிகள் பூசையில் பயன்படுத்திய மந்திரத்தை உணரலாம். (அன்பின் மிகுதியினுல் தன் அன்பின்மையையும், தகுதியின் மிகுதியால் தன் தகுதியின்மையையும் அடிகள் உணர்ந்துரைத்துச் சென்றமை நம்மை நாம் தருக்கா திருக்க உணர்த்தும் :-

'நான் தனக்கு அன்பின்மை
நானும் தானும் அறிவோம்' (10.13)

'பெறவே வேண்டும் மெய்யன்பு' (32.6)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இப்பிறப்பினில் இணைமலர் கொய்து நான்
இயல்போடு அஞ்செழுத் தோதித்
தப்பிலாது பொற் கழல்களுக்கு இடாது" (41.7)

"எண்ணிலேன் திரு நாம அஞ்செழுத்தும்" (26.6)

"நமச்சிவாய என்று உன் அடிபணியாப் பேயன்" (23.7)

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன்; அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்; புகழ்ந்துரையேன்; புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்; மெழுகேன்; கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்;" (5.2.4)

என்ற இடங்களெல்லாம் தாம் இயற்றிய சரியை, கிரியைகள் போதா என்ற அடிகளின் எண்ணத்தையே வெளிப்படுத்தும் ஆனால் ஆன்மகுருநாதர் அடிகளின் அதி தீவிரப் பக்குவத்தை அங்கீகரித்தமை நம்மைத் தெருட்டும்.)

மற்று, 'நானேயோ தவஞ்செய்தேன், சிவாய நம எனப் பெற்றேன்' என்றதன் தாற்பரியம் யாதோ எனின், ஆராய்வம். நம என்ற பதம் ந மம (என்னது இல்லை) என்ற இரு சொற்கள் புணர்ந்த மந்திரச் சொல். சிவாய என்பது சிவன் பொருட்டு / சிவனுடையது என்ற பொருளது. எனவே சிவாயநம என்ற பதம் 'சிவனுடையதே அன்றி என்னதில்லை ' என்ற பொருளைத் தரும். தமிழில் ஆறாம் வேற்றுமையில் வழங்கும் இப்பொருளை வடமொழியில் நான்காம் வேற்றுமைச் சொல்லான சிவாய என்பது பயக்கும். தமிழில் வள்ளிக்குக் கணவன் முருகன் என்ற நான்காம் வேற்றுமைப் பொருள் வடமொழியில் ஆறாம் வேற்றுமையால் வழங்கும். தனக்குச் சொந்தமான ஒன்றைச் சிவன்பொருட்டு அளித்துவிட்டு அதில் தனக்கு இருந்த உரிமையைத் துறப்பது நோக்கமாய் இருப்பின் 'சிவாய இதம் நமம' என்று இரண்டு வேற்றுமைகளும் பயின்று வரும். ஆனால் 'எல்லாம் உடையவன் சிவனே' என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானத்தால் இதுவரை பாசத்தால் தான் கற்பித்து வைத்திருந்த பொய்யான உரிமையை இயல்பாகக் கைவிடும் உணர்வு நிலையைச் சிவாய நம என்ற மந்திரச் சொல் சுட்டும். (சிவாய என்பது ஆறாம் வேற்றுமைப் பொருளது என்பதற்காக இதனைச் சொன்னோம்)

இனி 'எனப்பெற்றேன்' என்ற சொல்லிணையில் 'என' என்பதன் பொருள் 'என்று / இத்தன்மையதாக' என்பதாகவோ 'என்று கூற' என்பதாகவோ கொள்ளலாம். முதலாவதைக் கொள்ளின், 'பேசப்பட்டேன் உன் அடியாரில்' = 'உன் அடியான் என்றாயினேன்' என்பதைப் போலச் சிவாயநம என்ற தன்மையை / உணர்வை / நிலையை எய்தினேன் என்றாகும். ('அடியேன் அல்லேன் கொல்லோ?' என்று தொடர்ந்து வினவுவது இப்பொருளை வலியுறுத்தும்) இதன்படிச் 'சிவாய நம' எனப் பெற்றதாவது, ஓரெழுத்தை உபதேசித்த ஆன்ம நாதகுருவின் வசம் மணிவாசகர் தம் உடல், உயிர், உடைமைகளை முற்றிலும் ஒப்புவித்த உண்மையாம். இஃதும் ஆட்கொள்ளப்பட்ட அன்றே நிகழ்ந்தது என்பதை

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?" (33.7)

என்ற அடிகள் வாக்கால் நன்கறியலாம் 'சிவாயநம எனப் பெற்றேன்' என்பதையே சிவாய நம என உபதேசிக்கப் பெற்றேன் எனப் பிறர் கொண்டனர்.

ஆனால் அதிதீவிர பக்குவியான அடிகள் ஆன்மநாதகுருவின் தரிசனத்தாலேயே இவ்வுணர்வு நிலையை எய்தினாரே அல்லாமல் நம்மனோரைப் போல் 'சிவாய நம' என உபதேசிக்கப்பட்டு அதனைக் கணித்துக் கிரமமாக உணரும் தரத்தினர் அல்லர் என்ற உண்மையை 'ஆட்கொண்ட போதே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டிலையோ?' என்ற அடிகள் வாக்கால் அறிக. நம் அடிகளின் நிலை, பிரமபுரத்தில் ஞானப்பாலை உண்ட அளவில்

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் எனும்
அறிவும்" (பெரிய புராணம் 1974)

கைவரப்பெற்ற சிவஞான சம்பந்தரின் அனுபூதி நிலையே ஆகும். இரு பெருமக்களுக்கும், ஆட்கொள்ளப் பட்ட அவ்வளவிலேயே சிவாயநம என்ற அனுபூதி உண்டாயிற்று என்றே நாம் உணர வேண்டும். சம்பந்தப் பெருமானுக்கு மந்திரம் ஏதும் உபதேசிக்காத இறைவன், அடிகளுக்குப் பிரணவத்தை அருளினான் என்று நீர் கூறுவது ஏன் என்று வினவின், அங்ஙனம் நாம் கூறுவதும் அடிகளின் வாக்குகளைக் கொண்டே அன்றி, அடிகளைக் குறித்துப் பலவேறு புராணங்கள் அளிக்கும் புறச்சான்றுகளால் இல்லை.

மேலும் "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை" என்பதே உண்மை விடை திருப்பெருந்துறையில் ஆன்மநாதகுரு திரிமூர்த்திகள் முதல் அடிகள் வரை தாம் ஆட்கொண்ட எவருக்கும் மந்திர உபதேசம் மூலம் சிவ சொரூபத்தை உணர்த்தி வந்துள்ளமை தல விசேடமாம். 'என' என்ற சொல்லுக்கு 'என்று கூற' என்ற பொருளைக் கொள்ளினும் 'சிவாய நம எனப் பெற்றேன்' என்ற தொடர் 'அடியார் கூட்டத்தில் யான் சிவாய நம என்று கூறப்பெற்றேன்' என்றே ஆகும். அடியார்கள் ஒருவருக் கொருவர் 'சிவாயநம' என்று கூறிக் கொள்ளும் இயல்பைச் சுந்தரமூர்த்தி நாயனுர் குருகாவூர் செல்லும் வழியில்

"வருவார் அப்பந்தரிடைப் புகுந்து திரு மறையவர்பால்
பெருகார் வஞ் செல இருந்தார் சிவாய நம எனப் பேசி"

என்ற சேக்கிழார் வாக்கால் (3317) அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதனை ஒத்த மரபு எல்லாச் சமயங்களிலும் காணப்படும். "இறைவன் மிகப் பெரியவன்" என்று அரபுமொழியில் இஸ்லாமியர்கள் தங்களிடைச் சந்திப்பின் போது கூறுவதும் "காலங்கடந்தவன் மெய்ப்பொருள் (ஸத் ஸ்ரீ அகால்)" என்று சீக்கியர்கள் வாழ்த்திக் கொள்வதும் போல் சிவனடியார்கள் தம்மிடையே 'எல்லாம் உடையான் ஈசனே' என்ற பொருளில் 'சிவாயநம' என்று கூறிக் கொள்ளும் மரபு உண்டு. 'ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்' என்று இதற்கு வேத அடிப்படை உள்ளது.

"விண்ணினுர் பணிந்தேத்த, வியப்புறும்
மண்ணினுர் மறவாது 'சிவாய' என்று
எண்ணினுர்" (5.51.6) என்ற அப்பரடிகளின் அமுத வாக்கிலும், "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் என்ற நிலையில் அற்பமான பதங்களைத் தம்மவாக எண்ணித் தக்கவைத்துக் கொள்வான் மெய்யன்பின்றிப் பணிகின்ற விண்ணவரைக் கண்டு வியப்புற்று மதிபடைத்த மண்ணினர் 'எல்லாம் உடையான் ஈசனே' என்பதனை மறவாது 'சிவாய' என்று எண்ணினர் " என்ற பொருள் விளைவதால் சிவாய நம என்றதற்கு நாம் கொண்ட பொருள் உறுதிப்படும். சாத்திரத்திலும் இப்பொருள் உண்டு.

வாதனா மலத்தினால் சிவபோதம் தடைப்படநேரிடின், ஆன்ம சுத்தியின் பொருட்டு அஞ்செழுத்தால் இதயத்தில் அருச்சித்தும், நாபியில் ஓமித்தும், புருவ நடுவில் தியானித்தும் இயற்றும் அந்தரியாகம் விதிக்கப்படுகிறது. அவ்வமயம் 'உயிர் சிவனுக்கு உடைமை ஆதலையே' அஞ்செழுத்தின் பொருளாக உணர்ந்து இயற்றுதல் கடன் என்பதை

"அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டு அரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தால்

குண்டலியில் செய்தோமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு"

என்ற உதாரண வெண்பா (சிவஞான போத சூத்திரம் 9 - அதிகரணம் 3) உணர்த்துகிறது. ***நம்முதல் ஓதினும் சிம்முதல் ஓதினும் அஞ்செழுத்தின் பொருள் இதுவே என்பது நாம் முன்னர் விவரித்த சொற்பொருள் அடிப்படையில் வெளிப்படை.*** சிவஞானபோதம் 9ம் சூத்திரத்தில் 'விதி எண்ணும் அஞ்செழுத்தே' என்றிருப்பதைச் சித்தியார் 299ம் பாடலில் 'அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க' என்றே விளக்கியது. உரைகாரர் மாத்திரம் உண்மை விளக்கத்தை மனத்துட் கொண்டு விதிப்படி மாறி உச்சரிக்க என உரைகண்டனர். போதம் மற்றும் சித்தியாரின் மூலங்களில் 'மாறி' என்று இன்மையானும்,

'எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து' (திருவருட் பயன் 90)

(பொருள் : உயிர் சிவபோதத்தை நீங்காதிருக்கவே பஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் எல்லாப் பத்ததிகளும் இயம்பும்) என்று சந்தானாச்சாரியர் 'வழி முறைகள் பல உண்டு' என்று விளக்கியமையானும், விதி என்றதும் விதிப்படி என்றதும் 'குரு உபதேசித்த வண்ணம்' என்ற அளவைத் தாண்டாமலேயே பொருள்படும். இவையனைத்திற்கும் மேலாக அப்பரடிகள்

"மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னில் ஒன்று வல்லாரையும் சாரலே" என்று காலனை

எச்சரிப்பதன் பொருள், மரணபயத்தை வெல்லப் பஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் யாதொரு பத்ததியும் பயன்படும் என்பதே. மரணபயமோ சிவதரிசனத்தாலன்றி வேறு வழியால் வெல்லப் படாதென்பது மார்க்கண்டேயரின் சரிதத்தாலும், 'இச்சிந்தையால் நின் திருவடி அடைந்தேன்' என்ற பொருளில் சுந்தரர் பாடும் 'அந்தணாளன்' என்று தொடங்கும் பாடலாலும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பர் பெருமான் அதிகை வீரட்டான அமுதின் தரிசனத்திற்குமுன் பெருந்தவசியாயிருந்தும் சூலைக்கு உடைந்தமையாலும், திலகவதியாரால் திருநீற்றுத் தீக்கையளிக்கப்பட்டுச் சிவதரிசனங்கைகூடியவராய் 'முத்திதருவது நீறு' என்ற மறைமொழிக்குச் சான்றாயமைந்தபின், சமணர் இயற்றிய மரண அச்சுறுத்தல்களைச் சிறிதும் பொருட் படுத்தாதிருந்த வல்லமையாலும் பெறப்படும். இங்குக் கூறிய அப்பர் திருவாக்கால் பஞ்சாக்கரத்தை ஓதும் பலவழிகளும் சிவ தரிசனத்திற்கு ஏதுவாய் இயமனை விரட்டும் என்பது பெறப்படும்.

ஆகவே 'என' என்றதின் இரண்டாம் பொருளிலும்' சிவாய நம எனப்பெற்றேன்' என்பது ' நின் அடியார் குழுவில் சேர்ந்தேன் = பேசப் பட்டேன் நின் அடியாரில்' என்றே ஆகும். இதுவும் ஆட்கொள்ளப் ப்ட்ட அன்றே நிகழ்ந்ததால் 'சிவாய நம என்ற மந்திரம் உபதேசிக்கப் பட்டேன்' என்பது பொருந்தாது.

'பாவிக்க வேண்டா ஆண்ட பரனருள் பற்றினோர்க்கே' என்று சிவப்பிரகாசம் (86) பகர்வதின் இலக்கியமாகத் திகழ்ந்த அடிகட்கு ஆன்மநாதகுருவின் தரிசனத்தால் *சிவாய நம என்ற* நிலை சித்தித்தது என்பதே உண்மை. இந்நிலையில் அடிகட்கு ஓங்காரம் உபதேசிக்கப் பட்டதை, தனித்த பிரணவம் துறவிகட்கே உபதேசிக்கப்படும் என்ற மரபுவழிப் பொருட்படுத்தலாம். இறைவனின் திருவடிகளைச் சுமந்த அளவில் அடிகள் அகப்புறப்பற்றுக்கள் அனைத்தையும் துறந்தார் என்பது

" இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துளையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்"
(13.1)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற திருவாசகத்தாலும், இங்ஙனம் துறக்கப்பட்டோரில் பெற்றோரும் அடங்குவர் என்பது

"எந்தை எந்தாய் சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்" (13.2) என்ற திருவாசகத்தாலும் புலனுகும். இரண்டாம் பாடலால் அடிகட்கு இறைவனே *துறவளித்தான்* என்பதும் புலப்படும். பின்னரும் குருநாதன் ஆணைப்படியே மந்திரிக் கோலம் பூண்டு மதுரைக்குச் சென்றாரே யல்லாமல், ஆண்டது முதல் யாண்டும்

"ஓடும் கவந்தியுமே உறவென்றிட்டு உள்கசிந்" (40.1) திருந்தார் என்பதும் நாம் போற்றத் தகும். எனவே பெருமான், அடிகளின் தகுதி நோக்கியே துறவியர்க்கு மட்டுமே தரலாகும் தனித்த பிரணவத்தைத் தந்தனர் என்று கொள்ள வேண்டும்.

"இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்துள்" (திருவருட் பயன் 82)

என்றபடிப் பஞ்சாக்கரம் உணர்த்தும் ஐந்தையும் பிரணவமும் உணர்த்துவதோடு, சாத்திரத்துட் கண்டவண்ணம், பஞ்சாக்கரம் இறைவனுக்குத் தூல வடிவாகவும், ஆன்மா சூக்கும வடிவாகவும், சத்தி அதனினும் மேலான அதிசூக்கும வடிவாகவும் இருப்பதாலும், அச் சக்தியை உடன் வெளிப்படுத்துவதாய்ப் பிரணவம் 'சக்திகருப்பம்' எனப் போற்றப் படுவதாலும், அடிகளின் உயர்தகுதி கருதி அது உபதேசிக்கப்பட்டதாம். பிரணவ உபாசனையின் பயனுக ஆன்மா சக்தியுடன் ஒற்றுமைப்பட்டு அதில் தோன்றும் சிவத்தைக் கண்டு இன்புற்றிருக்கு மென்க. *இவ்வுண்மையைக் காட்டும் முகமாகத் திருப்பெருந்துறையில் ஸ்ரீ சிவயோகாம்பிகைக்கும் நம் அடிகளுக்கும் சமகாலத்தில் தீப, நைவேத்திய உபசாரங்கள் நிகழ்கின்றன. இரகசிகமாய் ஆன்மநாதர் எழுந்தருளும் யோக பீடமும் பிரணவ பீடமே என்பதும் அறியலாகும்.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தில்லையில் அடிகள் பொன் மன்றத்தில் புகுந்த போது, திருப் பெருந்துறையில் ஆன்மநாதர், 'நம் குருந்த மூலத்தில் மாணிக்க வாசகன் ஒன்றினன். அவனே இங்கு நமக்குச் சோமாஸ்கந்த மூர்த்தமாம்; அவனுக்கு யாம் நந்திகேசனும் சண்டிகேசனும் ஆம் பதவிகளைத் தந்தனம்' என்று முந்நூற்றந் தணர்களுக்கும் உணர்த்தியதாக வடமொழி (ஆதி கைலாஸ) மான்மியம் உரைக்கிறது. இதற்கேற்பவே உற்சவங்கள் அனைத்தும் நம் அடிகளுக்கே எடுக்கப்படுகின்றன. "தந்தது உன் தன்னை; கொண்டது என் தன்னை" என்ற சுத்தாத்துவித முத்தி நிலையைப் பூரணமாக எய்தி 'அறிவாற் சிவனே' என்று போற்றப் படுபவர் நம் அடிகள். அவர் தகுதி கருதியே மூவருக்கும் அளிக்காத தன் அதிசூக்கும வடிவமான தனித்த பிரணவத்தை அடிகட்கு அளித்துத் தன்னோடு அணைத்தனர் ஆன்மநாதர். 'ஓமெனும் ஓங்காரத் துள்ளே உரு அரு' (திருமந்திரம் 2676) என்பதோடு ஒத்துச் 'சோதியாய்த் தோன்றும் உருவமே! அருவாம் ஒருவனே' (22.9) என்று அடிகள் கண்டு பாடுவதும் ஆன்மநாதகுருவின் வடிவம் ஓங்காரமே என்பதைச் சுட்டும்.

அடிகளின் வரலாற்றைக் கூறுவதில் இரண்டு திருவிளையாடற் புராணங்களும், இரண்டு திருப்பெருந்துறைப் புராணங்களும், திருவாதவூரர் புராணமும், உத்தரகோசமங்கைப் புராணமும் பல இடங்களில் தம்முள் மாறுபடுவதால், உபதேசிக்கப்பட்ட மந்திரஞ் சார்பில் அடிகள் காட்டும் அகச் சான்றுகளையே நாம் ஆராய வேண்டும். வட மொழிப் புராணம் குரு பஞ்சாக்கரம் என்ற 39 எழுத்தாலான மந்திரம் அடிகட்கு அருளப்பட்டதாக உரைக்கும். பரஞ்சோதி முனிவர் சூக்கும பஞ்சாக்கர மென்றும், சுந்தரலிங்க முனிவர் முத்தி பஞ்சாக்கரமென்றும் கூறுவர். தமிழ் நூல்கள் பெரும்பாலும் 'சிவாய நம எனப் பெற்றேன்' என்பதை உபதேசமாகக் கொண்டு உரைக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆனால் இங்ஙனம் உபதேசித்தல் வேறு பத்ததியை (வழிமுறையை)ச் சார்ந்தது என்பதை அவை காணத் தவறின.

ஒரு சிலர், நம்முதலாக ஓதி வந்த அடிகளை மாற்றி உபதேசித்து இறைவன் சிம்முதலாக ஓதச் செய்தான் என்றும் கூறுவர். இது அடிகள் பால் தவறுகற்பிக்கும் - எங்ஙனமெனில் - இறைவனுல் மாற்றி உபதேசிக்கப்பட்டபின்பும் திருவாசகத்தில் ஆறு இடங்களில் அடிகள் நம்முதலாக ஓதியது குரு மொழியை மீறிய அபராதமாக முடியும். (குரு நாதன் ஆட் கொண்ட பிறகே அடிகள் திருவாசகம் பாடினுர் என்பதை எல்லாப் புராணங்களும் ஏற்கும்)

இதற்குச் சமாதானமாக 'அபக்குவிகளும் ஓதி உய்யும் பொருட்டு இங்ஙனம் பாடினார்' என்று கூறுவது சமாதானம் ஆகுமா? குருநாதர் தன்னை மாற்றி நிறுத்திய நிலையின் நீங்கிப் பழைய நிலைக்குச் செல்வது பெருங்குற்றமன்றோ?

'நமச்சிவாய என்று உன்னடி பணியாப் பேயன் ஆகிலும்' என்பதும் 'போற்றி ஓம் நமச்சிவாய - புகலிடம் பிறிதொன்றில்லை' என்பதும் பிறர் பொருட்டேதான் பாடியவையா என்றும் சிந்தித்துத் தெளிக. மற்றும், திருவாசகம் படிக்கும் அபக்குவிகள் 'சிவாய நம எனப் பெற்றேன்' என்பதைக் காண மாட்டார்களா?

நால்வருமே இறைவனால் ஆட்கொள்ளப் பட்ட பிறகே திருமுறைகளைப் பாடியுள்ளமையாலேயே தேவார திருவாசகங்கள் தமிழ்மறையாகப் போற்றப்படும்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அப்பர்பெரு மானின் அறிவு முழுவதும் இறைவனை அறியும் அறிவாகவே இருந்தது. அப்பெருமான் "நமச்சிவாயவே நான் அறி விச்சையும்" என்று கூறுவதை முற்றுண்மையாக ஏற்காமல், இதன் மேலும் அவர் ஒரு பேருண்மையை அறிந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்திருந்தும் உலகர் பொருட்டு இடக்கரடக்கலாக இங்ஙனம் உரைத்தனர் என்றும் கொள்ளலாமா?

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" என்ற இடத்தும், 'இறைவனின் சொருபமாகிய ஞானமும் அதனை அடைவிக்கும் அப்பியாசமான கல்வியும் இரண்டும் நமச்சிவாயவே' என்பதல்லவா துணிவு ?

இங்குக் கல்வி என்பது நூற்கல்வி அன்று. அது சரியை, கிரியை, யோகமாகிய தவமாம். இதனுல் நமச்சிவாயவே நான்கு சாதனங்களுமாம் என்பது பெறப்பட்டது.

பாடல் தோறும் 'சொல்லும் நா நமச்சிவாயவே' என்று நம்பி ஆரூரர் உறுதிசெய்யும் பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில் 'இனிப் பிறவாத தன்மை வந் தெய்தினேன்' என்பது தன்னைப் பற்றிய உண்மை யன்றோ? இதனால் பழைய திருப்பெருந்துறைப் புராணமும் (1824)

"அஞ்ஞானத் தீதகற்றி உயிர்க்கு முத்தி கொடுப்பதென்றும் சிறந்த பஞ்சாக்கரமெனவே சிந்தை செய்து நாதர்திருப்பெயர்தனையே ' நமச்சிவாய வாழ்க' என முதன் மொழியா நவின்று காட்டி" நம் அடிகள் திருவாசகம் பாடினார் என்று கூறும்.

'நம் முதலா ஓதில் அருள் நாடாது' என்ற பத்ததியை அறிந்திருந்தும் சுந்தரலிங்க முனிவர் இங்ஙனம் 'முத்திகொடுப்ப தென்றும் நமச்சிவாய' என்று பாடினார் எனில் இது வேறு பத்ததியைச் சார்ந்தது என்பதால் தானே ?

'செம்பொனார் திலகம் *உலகுக்கெலாம்*
நம்பன் நாமம் நமச்சிவாயவே' என்ற திருஞான சம்பந்தர் திருவாக்கில் 'உலகுக்கெலாம்' என்பதில் விடுபடும் உயிர்களும் உண்டோ?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'உலகுக்கெலாம்' என்றதை உள்ளத்திற் கொண்டு, "ஞானமெய்ந்நெறிதான் ***யார்க்கும்*** நமச்சிவாயச் சொல்" (பெரிய புராணம் 3151) என்றருளிய சேக்கிழார் 'யார்க்கும்' என்ற சொல்லால் (பக்குவிகள், அபக்குவிகள் உட்பட) எல்லா உயிர்களையுந் தானே குறித்தார்? '***நல்லவர் தீயவர் எனாது*** நச்சினர் செல்லல் கெடச் ***சிவமுத்தி காட்டுவ***' (3.22.4) என்று பிள்ளையார் உணர்த்துவதும் அஃதே அன்றோ?

'நங்களுக்கு அருங்கலம்' என்றும் 'நாவினுக்கு அருங்கலம்' என்றும் 'பண்ணிய உலகினில் பயின்றபாவத்தை நண்ணி நின்றறுப்பது' என்றும் (நண்ணுதல் = அருளுடைமையால் உயிர்களை நெருங்குதல்) 'ஓடினேன் ஓடிச் சென்று உருவங்காண்டலும் நாடினேன் நாடிற்று' என்றும் 'நன்நெறி யாவது' என்றும் 'இல்லக விளக்கது' என்றும் 'இருள் (ஆணவமலம்) கெடுப்பது' என்றும் ***அப்பர் பெருமான் கண்ட அமுதமே நமச்சிவாய.*** அருள் நாடாமல் இருள் எங்ஙனம் கெடும் ? எனவே 'நம்முதலா ஓதில் அருள் நாடாது' என்பது இப்பத்ததியில் இல்லை. அது வேறு பத்ததியாம்.

பன்னிரு திருமுறைகளில் சிம் முதல் ஓதுதலைச் சிறப்பிப்பது திருமந்திரம் (9ம் தந்திரம்) ஒன்றேயாம். இதுவும் இக்கருத்தைப் படிப்படியாய் வளர்ப்பதாம். எங்ஙனமெனில்,

'சிவாயநம என்னும் குளிகை இட்டு' (2709)

'சிவன் முதலாகச் சிறந்து நிரோதம்

பவம் அதகன்று' (2711) என்று 'சிவாய நம' என்றும்;

'ஓதும் சிவாய மலமற்ற உண்மையே' (2712)

'திரிமலம் நீங்கிச் சிவாய என்றோதும்' (2714) என்று 'சிவாய' என்றும்;

'சிவாய - சிவ சிவ' - என்றென்றே (2718)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'சிவ சிவ என்றே தெளிகிலர் ஊமர்

சிவசிவ ஆகும் திருவரு ளாமே' (2715)

'சிவ சிவ என்னச் சிவகதி தானே' என்று 'சிவ' என்றும்;

' சங்கை கெட்டு அவ்வெழுத்து ஒன்றையும் சாதித்தால்

அங்கரை சேர்ந்த அருங்கல மாமே' (2720) என்று இறுதியில் 'சி' என்ற ஓரெழுத்தாகவும் சுருக்கிக் கொண்டு செல்வதாம். எனவே ஐந்தெழுத்திலும் ஐம்பொருள்களைப் பாவிக்கும் இப் பத்ததியில் சிம்முதல் ஆரம்பித்துச் சிவாய நம என்றோதிக் கிரமமாகக் குருநாதனின் மேற்பார்வையின் கீழ் நம என்ற நாமத்தை நாவில் ஒடுக்கிச் சிவ என்பதைச் சிந்தையுள் ஏற்றிச் 'சி' கரத்திருக்க வேண்டுதல் அருள் நாடும் வழி என்க. (சி என்ற எழுத்தே சிவசத்திவடிவம் என்பது இந்நூலில் வேறிடத்துக் கூறப்படுகிறது)

இங்ஙனமன்றி, எழுத்துக்கள் தோறும் பொருள் பாவியாமல் 'நந்தி நாமம் நமச்சிவாய' என்று பாவிப்பார்க்கு அம்மந்திரம் எவ்விதச் சிதைவும் மாறுபாடு மின்றி முத்தி விளைப்பதாம். "உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றதும் "நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே" என்றதும் *முத்தி நிலையிலும் இம்மந்திரம் இவ் வடிவிலேயே உடன் இருக்கும்* என்பதை உறுதிசெய்வனவாகும். இப்பத்ததியையும் " நகார முதலாகும் நந்திதன் நாமமே" என்று திருமந்திரம் உடன்பட்டுக் காட்டுவதால் அது 'நம்முதலா ஓதிலருள் நாடாது' என்று கூறிற்றிலது.

அத்துடன், நமச்சிவாய, சிவாய நம என்ற இரண்டுமே வேதமந்திரங்களே. முன்னது ஆகுதி மந்திரமாகத் திருஉருத்திரத்துள் யசுர்வேத சங்கிதையின் இதயத்தே விளங்கும்; பின்னது அருச்சனை மந்திரமாக யசுர்வேத

ஆரணியகத்தின் இறுதியில் உள்ளது. சொற்பொருள் நிலையில் இரண்டும் ஒரே பொருளைத் தரும். வேதத்தின் இதயத்தும் சிரத்தும் விளங்கும் இப்பெருமையையும்

"பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே"

(2721)

என்று திருமந்திரம் பகர்வது யாவரும் உணர்ந்து போற்றத்தக்கதாம். எனவே நம் முதலா ஓதி வரின் அப்பயிற்சி கிரமமாகச் சிம்முதலாக ஓதுதற்குரிய தகுதியைப் பயக்கும் என்றொரு சமரசப் பாலம் கற்பிப்பதும், தலைப்பாகைக்கேற்பத் தலையைக் குறைப்பதாய்த் திருமுறைகள் காட்டும் நமச்சிவாய உண்மையின் வலியினைக் குறைத்துணர்வதாய் முடியும். தமிழ்வேதமாகிய திருமுறைகள் சுதந்தரப் பிரமாணங்கள் என்ற நிலையும் நீர்த்துப் போகும்.

எனவே 'நால்வரின் பத்ததி நமச்சிவாயவே' என்பதை அறிந்து இரு வேறு பத்ததிகளையும் ஒன்றாக்கி முரண்பட்டுக் குழம்பாமல் தனித்தனியே குருபதேசப்படி ஓதி உய்தற்பாற்று. பிரணவ உபாசனை என்ற மற்றொரு வழியையும் காட்டும் திருமந்திரம் :- "ஓம் என்ற ஒலியான தூலப் பிரணவம், சிவ சொரூப ஆனந்தம் என்று அறியத்தக்க சக்தியின் உறையாகும்; இத் தூலத்தைப் பேணிவரின் சூக்குமப்பிரணவமாகிய சக்தி வெளிப்படும்; இதுவே சொரூபானந்தம் - சிவனோடு உயிர்கலப்பதால் உணரும் இன்பம்; (சொற்களால் பிழையின்றி இவ் வுண்மையைப் பகர ஒண்ணாது) உண்மையில் சிவம், போக்கும் வரவும் புணர்வுமில்லாப் பொருள் ஆகையால், உயிருக்குச் சிவசத்தியுடனேதான் ஒற்றுமை கூடும்" இவ்வுயிர் மூர்த்தி ஆகவும் இறைவன் மூர்த்திமானாகவும் விளங்கு கின்றனர். விடையின் மீது வரும் திருவாதவூரடிகள் அமூர்த்தனாகிய ஆன்மநாதகுருவின் மூர்த்தம் ஆவர். திருப்பெருந்துறைக் கோயில் அமைப்பு, வழிபாட்டு முறைகள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உற்சவங்கள் அனைத்திலும் மேலான சைவ வேதாந்த உண்மைகள் பொதிந்துள்ளன.

தூலப் பிரணவம் சொரூபானந்தப் பேருறை;
பாலித்த சூக்குமம் மேலைச் சொரூபப் பெண்;
ஆலித்த முத்திரை ஆங்கதிற் காரணம்;
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே

(திருமந்திரம் 2675)

ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே

(திருமந்திரம் 2676)

சூக்குமப் பிரணவத்தைத் திருவாதவூரடிகள் உருவதாரணை செய்துவந்தனர். அச்சோப் பதிகத்தில் 'ஓங்காரத் துட்பொருள்' என்றருளுவது சூக்குமப் பிரணவமே. ஆரம்பநிலைச் சாதகர் குருமுகமாய்ப் பிரணவ உபதேசம் பெற்றுத் தூலப் பிரணவமாகிய ஓங்கார ஒலியைச் சப்த தாரணை செய்வர். இவ்வடியவர்க்கும் இறைவன் தன் பரம்பெருங் க்ருணையால் தன் உருவைக் காட்டி அருளுவன் என்பார் அடிகள்:-

'ஊசல் ஆட்டுமிவ் வுடலுயிர்
ஆயின இருவினை அறுத்தென்னை,
ஓசையால் உணர்வார்க்கு,
உணர்வரியவன் உணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்த தன் பரம்
பெருங் கருணையால்
ஆசை தீர்த்து அடியாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே'

(41.8)

'உடல் - உயிர் என்று என்னை ஊசலாட்டி வந்த இருவினைகளையும் அறுத்த இறைவன், தூலப் பிரணவத்தால் (ஓசையால்) தன்னை உணர முனைவார்பால் இரக்கங்கொண்டு, உணர்ந்தார்க்கும் உணர்வரிய தான், தன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மெய்யுணர்வை அன்னுர்க்குத் தானுகத் தந்து தலையளி செய்து ஒளிவடிவாக்கி அன்னுரைப் பாசமான ஐந்தும் பற்றாத வண்ணம் காத்துக் கொண்ட மேலான பெரிய கருணையால், என்னையும் என் ஆசை நிரம்பும் வண்ணம் தன் அடியார் திருவடியில் கூட்டிக் கொண்டனன்' என்பது இதன் பொருள்.

ஓசை என்றும் நாதம் என்றும் தூலப்பிரணவம் குறிக்கப்படும். இதுவே திருப்பெருந்துறையான் முன்பால் முழங்கும் வாத்தியம் என்பது

"இன்பான் மொழிக்கிள்ளாய்! எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் ! - அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பருமிக்க நாதப் பறை" (19.8)

என்ற மணிவாசகத்தால் அறியலாம். இத்தூலப் பிரணவத்தால் பிறவிப் பகை கலங்கும் என்பதும், இது கிரமமாகப் பேரின்பத்து ஓங்கும் என்பதும் உடன் கூறப்பட்டன. பறையை முழக்கும் போது அவ்வொலி தூலப் பிரணவமாக அமைதல் கண்கூடு.

மேலே காட்டிய (41.8) பாடலில் 'ஓசையால் உணர்வார்க்கு என்றும் உணர்வரியவன்' என்று பொருள் காணக் கூடாது. அன்னுர்க்கும் அருளும் இறைவனின் கேழில் பரங்கருணை அப்பாடலிலேயே கூறப்படுதலால். மேலும் 'இருவினை அறுத்து' என்று உபலக்கணமாக 'என்னைப் பாசம் முழுவதும் அறுத்து' என்று அடிகள் முதலடியில் கூறிவிட்டதால் மீண்டும் 'பாசமானவை பற்றறுத்து' என்று தன் பொருட்டாகவே கூறியது கூறக் காரணமில்லை. இறைவன் மும்மலங்களையும் ஒருங்கே அறுப்பன் என்பதும்,

"ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற" (14.2)

என்ற அடிகள் வாக்காலும் அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'முப்புரமாவது மும்மல காரியம்' என்பர் பட்டினத்தடிகள். முப்புர அசுரர்கள் 'தாங்கள் ஓரம்பால் ஒருங்கு அழிய வேண்டும்' என வரம் பெற்றதாகப் புராணம் கூறுவதும் நோக்கத் தக்கது. இறைவன் எய்த ஒப்பற்ற அம்பு பிரணவமாம்.

அடிகளுக்கு இறைவன் ஓங்காரத்தையும் அதன் பொருளையும் ஒக்க உபதேசித்தான் என்ற உண்மையைத் திருவாசகச் சான்றுகள் மூலமே ஏற்றுத் தெளியின், நம்முதலா ஓதி வந்த அடிகளை இறைவன் மாற்றிச் சிம்முதலா ஓதச் செய்தனன் என்று கொள்வதால் இறையுபதேசத்தைத் திருவாசகத்திலேயே ஆறுமுறை மீறியதாக அடிகள் மாட்டு விளையும் அபராதமும், இல்லாத அபராதத்தை அவர்மாட்டுக் கற்பிக்கும் நம்மனோர் பெருங்குற்றமும் ஒருங்கு களையப்படும்.

திருப்பெயர்கள் 48; 49

இப்பெயர்கள் இறைவனை முறையே 'மௌனி' (வாய் பேசாதவன்) என்றும், 'தேன் ஒழுக்கைப் போன்று இனிமையாகப் பேசுபவன்' என்றும் சிறப்பிக்கின்றன.

கல்லாலின் புடையமர்ந்து, நால்வர்க்கும் சொல்லாமல் சொன்னவரே, மணிவாசகரை, மானைக்காட்டி மான் பிடிப்போன் போல, சீடர் குழாத்துடன் குருநாதனுக எழுந்தருளிப் 'பாணே (இனிய மொழிகளையே) பேசிப் படுத்தார் (ஆட்கொண்டார்)' (திருவாசகம் 5.9.4) இங்ஙனம் படுத்தவர், 'பேச்சிறந்த மாசில் மணி' யும் ஆவார். (திருவாசகம் 48.7)

குதிரைவாங்கச் சென்ற திருவாத ஊரரை வழி மறிப்பான் வந்த ஆன்மகுரு நாதர், அவரை அன்புடன் 'வருக' என்றும் 'அஞ்சற்க' என்றும் 'ஆட்கொள்வம்' என்றும் இனிய மொழிகளை உள்ளங் குளிரப் பேசினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'வண்ணப் பணித்தென்னை வா என்ற வான் கருணை' (10.4)

'வா, வா! என்றென்னையும் பூதலத்தே
வலித்து ஆண்டு கொண்டான்' (திருவாசகம் 11.7)

'மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டு ஆள்வாய் நீ "வா" என்னக்
கண்ணார உய்ந்தவாறன்றே உன் கழல் கண்டே?' (38.2)

'வம்பனுய்த் திரிவேனை "வா" என்றென்
வல்வினைப் பகை மாய்த்திடும் உம்பரான்' (42.9)

'உடையானே! அடியேனை அஞ்சேல் என்று
ஆண்டவாறன்றே அம்பலத்தமுதே! ?' (திருவாசகம் 38.6)

'அடியேனை வருக என்று, அஞ்சேல் என்று அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே?' (திருவாசகம் 51.5) என்றெல்லாம் இவை அடிகளால் நினைவுகூரப் படுகின்றன.

அடியார் குழாத்துடன் குருநாதன் தன் உருவத்தை மறைத்த பிறகு, அடிகள் 'வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய், வருக என்றருள்புரியாயே' என்றும் 'என்னை நீ கூவிக்கொண்டருளே' என்றும், 'அடியேன் ஆதரித் தழைத்தால் அதெந்துவே என்று அருளாயே' என்றும் "ஆ! ஆ! என்னாவிடில் என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான்" (50.6) என்றும் பதிகங்களாக ஓலமிடுவதைக் காணின், முன்னர் இறைவன் எத்துணை இனிய மொழிகளைப் பேசிப் படுத்தனன் என்பதை ஒருவாறு உணரலாம்.

மேலும் பழவடியார் குழாம் வாதவூரரை ஆட்கொள்ளக் குருநாதனிடம் விண்ணப்பித்த போது, குருநாதனும் வாதவூரரின் புண்ணியத்தைப் பாராட்டி 'அருள்புரியக் காலம், கனு, நிமித்தம் முதலியன கருத வேண்டியதில்லை; இன்றிரவே உபதேசம்!' என்று பேரருள்புரிந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

இங்ஙனம் சீடனின் தகுதியைப் பாராட்டியதையே "ஊன்பழித்து உள்ளம் புகுந்து என் உணர்வது ஆய ஒருத்தன்" (திருவாசகம் 18.4) என்று அடிகளும் நன்றிபாராட்டுகிறார். உயிருக்கு உடல்போல இறைவனுக்கு உயிரே உடல் என்பதால் ஊன் என்ற சொல்லால் தம் உயிரையே அடிகள் குறித்தனர். ("ஞானவிளக்கொளியாம் ஊன் உயிரை " (7.84.9) என்ற திருக்கானப்பேர்த் தேவாரத்திலும் சக்திபதிந்த உயிர் ஞானவிளக்காம் ' ஊன் ' என்றும் அவ்விளக்கின் ஒளியாகிய இறை ' உயிர் ' என்றும் உரைக்கப்படுதல் ஓர்க. ஆன்மா என்ற சொல் பரமான்மாவைக் குறித்தலும் இவ்வண்ணமே என்க) பழித்தல் என்பது இங்குப் புகழ்தல் என்ற பொருளது. உயிரின் பரிபாகத்தைப் பாராட்டி அதன் உள்ளத்தையே தன் கோயிலாகக் கொண்டு புகுந்து, தன் திருவடி இன்பத்தையே அது யாண்டும் உணரும்படி இறைவன் செய்த பேரருளே 'ஊன்பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வது ஆய ஒருத்தன்' என்ற தொடரால் உரைக்கப் படுகிறது.

'சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்' (திருவாசகம் 22.10) என்றதால் உள்ளம் புகுதலும், 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணை' (திருவாசகம் 15.6) என்றதால் உணர்வது ஆதலும் இவைபோல் வேறு பல இடத்தும் சொல்லப்படும்.

எவ்வுயிர்க்கும், ஆன்மகுருநாதனை விட, மேலான இனிய மொழி பேசுவோர் வேறு யாவர் உளர்?

திருப்பெயர் 54

வேண்டும் அடியாரின் வேட்கையினும் மேலான வரத்தை இறைவன் அருள்கிறான். தகுதியுள்ள உயிரின் தயக்கத்தையும் மீறி ஆன்மகுருநாதன் ஆட்கொள்கிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ'
(திருவாசகம் 33.6)

என்றதால், அடியவன் பகுதிப் பகுதியாக வேண்டினும் அதனை முழுமையாக ஈசன் அருள்கிறான் என்று புலப்படும். சேர்வார் தாமே தானுகச் செயும் பேரருளாளன் அல்லனே அவன்? பக்குவியான உயிரை அதன் தயக்கத்தைக் கருதாது ஆன்மகுருநாதன் ஆட்கொள்வது திருவாசகத்துள் பலவாறும் பேசப்படுகிறது:-

'தேடி நீ ஆண்டாய், சிவபுரத் தரசே !' (28.3)

'நானேயோ தவஞ்செய்தேன்
சிவாய நம எனப்பெற்றேன்' 38.10)

'நான் தனக்கு அன்பின்மை நானும் தானும் அறிவோம்'
(10.13)

'ஆனந்தவெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான் பொருள்' (12.10)

(செத்திலாப் பத்து முழுவதும் இவ்வுணர்ச்சி வெளிப்பாட்டைக் காண்க)

'வழங்குகின்றாய்க்குன் அருளாரமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன் என் விதி
இன்மையால்' (24.10)

இவை சில எடுத்துக் காட்டுகளே. தன்னை இழக்கச் சக்திபதிந்த உயிரும் தயங்கும் போலும்.

"விருப்பில் ஆன்மாவை (அடிகளை)த் தாமெனக் கருதும்
விளங்கு நற்பாவகம் இயற்றி "
ஆட்கொண்டதாப் பழைய திருப்பெருந்துறைப் புராணம்
(1547) கூறும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன் நான்" (7.77.1) என்ற நம்பி ஆரூரர் வாக்கின் நயமும் இது தானோ?

"இன்பே அருளி எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே!" (44.3)

என்பது திருவாசகத் தேன் - உமிழ்ந்தது தன்னை இழந்த வண்டு! தயக்கம் மீறி ஆட்கொண்டமையே அன்றி, தகுதி மீறி ஆட்கொண்டமையும் திருவாசகம் நெடுகிலும் போற்றப் படுகிறது.

திருப்பெயர் 58

மதுரையில் இந்திரன் அமைத்த விமானத்துள் ஆன்மநாத குருவே எழுந்தருளி யுள்ளார் என்பது இதன் பொருள்.

வாத வூரடிகளை உபதேசித்து ஆட் கொண்டமையும், நரிகளைப் பரிகளாக்கியும், பரிகளை நரிகளாக்கியும், விளையாடியமையும், பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டமையும் மதுரை நாதனின் திருவிளையாடல்களாக மதுரைப் புராணங்கள் கூற, அவையே ஆன்மாநாதரின் அருள்விளையாட்டாகத் திருவாசகத்துள் பேசப்படும்.

வாதவூரடிகளுக்கு உபதேசித்தது - 58ஆம் திருவிளையாடல்

"எனை நான் என்பதறியேன்; பகல் இரவாவது மறியேன்
மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்தனுக்கிச்
சினமால்விடை யுடையான் மன்னு திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்த படிறு அறியேன், பரஞ்சுடரே!"
(34.3)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நரிபரியாக்கியது - 59 ஆம் திருவிளையாடல்

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன் கழலிணைகள்;
ஒருங்குதிரை உலவுசடை உடையானே! நரிகளெல்லாம்
பெருங் குதிரை ஆக்கியவா றன்றே உன் பேரருளே!"
(திருப்பெருந்துறையில் அருளியது 38.1)

"சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கும் மதுரை சேர்ந்த
வகையறிவார் எம்பிரான் ஆவாரே" (43.10)

"நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்!" (50.7)

பிட்டுக்கு மண் சுமந்ததும் பிரம்படிபட்டதும் - 61ஆம் திருவிளையாடல்

"பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும்பித்தனே!"
(30.2)

"திண்போர் விடையான் *சிவபுரத்தார் போரேறு*
மண்பால் மதுரையினில் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல்" (13.16)

"பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் *பெருந்துறையான்* கலிமதுரை மண்சுமந்து கூலி கொண்டு
அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன்மேனி" (8.8)

மேலும் திருப்பாண்டிப் பதிகம் முற்றிலும் திருப்பெருந்துறை அசுவநாதரைப் (பாண்டியன் என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெயரால்) போற்றுகிறார். பாண்டிய மன்னனை மீனவன் என்று குறிப்பிடுகிறார். இச்சான்றுகளை உள்ளத்திற் கொண்ட சுந்தரலிங்க முனிவர்

"உரிய ஆவணி மூலத்து இவ் ஆடல் செய்து உலகத்து
அரிய ஆலவாய் அண்ணலாம் ஆன்ம நாயகர்"
(பழைய புராணம் 1737) என்றே பாடினார்.

திருப்பெயர் 60

மாயாபுரம் என்பது திருப்பெருந்துறையின் பெயர்களுள் ஒன்று; ஏழு முத்திபுரிகளில் ஒன்றான மாயாபுரி திருப்பெருந்துறையே என்று வடமொழிப் புராணம் கூறுகிறது; ஆனால் உலக வழக்கில் ஹரித்வார் என்ற கங்கைக்கரை நகரமே இவ்வண்ணம் வழங்குகிறது. மாயை என்ற சொல்லுக்கு நேர்பொருள் சக்தி என்பதாகும்; திருப்பெருந்துறையில் சக்திபிம்பமே நிறுவப்பட்டுள்ளதால் அது மாயாபுரம் எனப்படும். இவ்வுடலும் மாயாபுரம் எனப்படும். பின்வரும் பிரமாணங்கள் காண்க:-

இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய் இனி
உன்னை என் இரக்கேனே? (திருவாசகம் 22.5)

காயத்துள் அமுதூற ஊற நீ கண்டுகொள் என்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னிமன்னித் திகழுமே
(திருவா. 42.5)

எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்,
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே. (திருவாசகம் 22.10)

புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன்நெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக எளியையாய் ஆண்ட ஈசனே!
(திருவாசகம் 37.10)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளம் பெருங்கோயில்; ஊன் உடம்பு ஆலயம்;
வள்ளல் பிரானுர்க்கு வாய் கோபுர வாசல்;
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்;
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.

(திருமந்திரம் 1823)

திருப்பெயர்கள் 61 - 70

உருவங்கடந்த ஆன்மநாத குருவுக்குச் சிவானந்தமே உருவம்; அதுவே சிவயோக நாயகியாம் என்ற உண்மை பலவகையிலும் இப் பெயர்களால் விளக்கப்படுகிறது.

भयात् त्रातुं दातुं फलमपि च वाञ्छासमधिकम् ।
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥

" ஏனைய தெய்வங்களைப் போலன்றித் தாயே! உன் திருவடிகளே அபய வரதங்களைச் செய்கின்றன" என்று யோகாம்பாளின் புகழ் சௌந்தர்ய லகரியிலும் பேசப்படுகிறது. இறைவனின் திருவருட்சக்தியே திருவடி என்று பேசப்படுகிறது.

திருப்பெயர் 66

திருப்பெருந்துறைக்குச் (சிவ) யோகவனம் என்ற பெயர் உண்மையைக் காட்டுகிறது.

திருப்பெயர் 77

காரணப் பரமான ஆன்மநாதனே எல்லாத் திருத்தலங்களிலும் திருவருட்காரியத் திருமேனிகள் கொண்டு எழுந்தருளி வணக்கத்தை ஏற்கிறான் என்று விளக்குகிறது. திருப்பெருந்துறைக்குச் சிவக்கேத்திரம் என்ற பெயரும் உண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர் 79

இறைவன் மெய்யடியார்களின் இதயக் கோயிலில் என்றும் எழுந்தருளியிருப்பன். இறையுணர்வில் திளைக்கும் திருக் கூட்டத்தில் தொண்டுகள் புரிந்து தன்னைச் சம்பந்தப் படுத்திக் கொள்வதால் உயிருக்கு முத்திவேட்கை திடப்பட்டு இறையருளும் கைகூடும். வாதனாமலத் தாக்குதலினின்றும் தப்பிக்க நல்லடியார் இணக்கமாகிய கவசம் துணையுரியும். நந்திருவாதவூரடிகள்,

"ஆசை எலாம் அடியார் அடியோம் எனும்
அத்தனை ஆகாதே"? (49.8)

"தன்னடியாரடி என்தலை மீது தழைப்பன ஆகாதே?" (49.6)

"உன் அடியார் அடியார் அடியோம் என
உய்ந்தன ஆகாதே?" (49.2)

"மன்னிய அன்பரில் என்பணி முந்துற
வைகுவது ஆகாதே?" (49.4)

"சீர் அடியார்கள் சிவானுபவங்கள்
தெரிந்திடும் ஆகாதே?" (49.8)

"படிதான் இல்லாப் பரம்பரனே உன் பழஅடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய்
அம்மானே!" (25.9) என்று வெளியிடும் ஆசையும்;

"பல் நாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடாது
என்நாயகமே பிற்பட்டிங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே" (50.2)

என்று வெளிக்காட்டும் கழிவிரக்கமும்;

"சிரிப்பார்; களிப்பார்; தேனிப்பார்;
திரண்டு திரண்டுன் திருவார்த்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரிப்பார்; கேட்பார்; மெச்சுவார்;
வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார்; 'பொன்னம் பலத்தாடும்
தலைவா!' என்பார்; அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?" (21.9)

என்று புலப்படுத்தும் அச்சமும்;

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்;
உடையாள் நடுவுள் நீ இருத்தி;
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்;
அருளைப் புரியாய்" (21.1)

என்று விடுக்கும் வேண்டுகோளும்;

"ஆர்அடியான் எனின் உத்தரகோச மங்கைக்கரசின்
சீர் அடியார் அடியான் என்று, நின்னைச்
சிரிப்பிப்பனே!" (6.48)

என்று விடுக்கும் எச்சரிக்கையும்;
"அப்பன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே!" என்று அதிசயப்பத்து முழுவதும் கொண்டாடும் தம் பெரும் பேறும் **எல்லாம் அடியார் அளவினவே** ஆகி, **இறைவனும் அடியார் அளவினன்** என்பதை உணர்த்தும். அமூர்த்தனாகிய இறைவனுக்கு மூர்த்தம் அடியார்களே. அடியார் இணக்கத்தால் விளையும் பயனை,

"பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால்
பொல்லாதோ?" (7.3)

"மெய்ம்முழுதும் கம்பித்து அழும் அடியாரிடை ஆர்த்துவைத்து ஆட்கொண்டருளி என்னைக் கழுமணியே இன்னும் காட்டு கண்டாய் நின் புலன் கழலே" (6.27)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற திருவாசகங்கள் (முறையே ஆறாகவும் பேறாகவும் விளக்கிக்) காட்டும்.

"உடையாள் உன்தன் நடுவிருக்கும்" என்ற பாடல் மந்திர வடிவிலும் அடியாரிணக்கத்தின் மேலாம் பயனைக் குறிப்பால் உணர்த்தும்:- உடையாள் இறைவன் நடுவிருத்தல் என்பது சி என்ற இறைஎழுத்தில் இ என்ற சக்தி பீஜம் இருப்பதாம்; உடையாள் நடுவுள் ஈசன் இருப்பது வ என்ற அம்மை எழுத்தில் அ என்ற சிவபீஜம் இருப்பதாம். அகர பீஜம் அருவமாக (முயற்சியாக மட்டில்) பதி எழுத்திலும், உருவமாக (தானத்துடன் கூட) ஏனை நான்கிலும் உள்ளது. இகர பீஜம் பூரணமாக இறை எழுத்தில் மட்டுமே உள்ளது. இது " தன்னை விட்டகலாத சிற்சக்தியுடன் கூடியது பதி ஒன்றே - சமானரகித வத்து" என்று காட்டுவதாம். இகர உயிரின் குறையுருவம் (corruption) யகரமெய்யாகும். இஃது ஆன்ம எழுத்தில் அமைவது ஆன்மா்வின் இச்சைக்கிரியை ஞானங்கள் மலத்தால் தடையுண்டமையைக் காட்டும். இங்ஙனம் இருப்பினும் 'அமுதத்தின் பதில்வன்' என்று மறைகளால் அறியப்படும் உயிர் சிவமாம் தன்மை எய்துதற்கு உரியது. 'ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை' என்று தம்முதல் குருவினால் தவத்தினில் உணர்த்தப்படும் போழ்து அன்னிய மின்மையான் அரன் கழல் செல்லும் ஆன்மா.

'அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்' என்ற தொடர் 'எனக்கு உரிமையாகிய சிவபதத்தை யான் அடையும் வண்ணம் அம்மையப்பராகிய நீர் திருவுள்ளம் பற்றுவீராகில்' என்று பொருள்படும். இந்நிலைக்குச் சாதனமாக, 'மாலற நேயம் மலிந்து சிவமாகவே பொலியும் அடியார் நடுவுள் என்னை இருத்துவாய்' என்று காரணகாரியங்காட்டி அடிகள் கூத்தனைக் கெஞ்சுகிறார். தம்மை இழந்து 'சிவ' என்றிருக்கும் அடியவர்கூட்டத்துள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கும் உயிர் அவரிணக்கத்தால் தானும் தன்முனைப்பற்றுச் 'சிவ' என்றிருக்கும். ***இப்பாடல் சிவ மந்திரத்தைப் போதிப்பதாம்.***

இதற்கு வேறு வழியில், 'இரண்டு சிகரங்கட்கு நடுவில் வ என்பதும் இரண்டு வகரங்கட்கு நடுவில் சி என்பதும்' என்றபடிப் பொருள் கொண்டால் இதே காரணம் பற்றி 'அடியேன் நடுவுள் இரு வீரும்' என்பது 'யசிவசிவய' என்றே ஆகும். இங்ஙனம் யாதொரு மந்திரமும் அறியப் பட்டிலது; சிவயசிவ என்று கொண்டால் 'அடியான் இருவர் நடுவுள்ளும்' இருக்கும் நிலையையே காட்டும்; அதுமட்டுமின்றி முன்னர்க் கண்டு கொண்ட உடையாள் நடுவுள் உடையானையும், உடையான் நடுவுள் உடையாளையும் பெற்றமையும் சிதையும். நாம் கொண்டபடி கொண்டால் 'ய' என்ற ஆன்மா தன்னுணர்வற்றுத் தன்னில் 'சிவ' என்பதையே கண்டிருக்கும். இதுவே 'அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது' என்று அடிகளால் உரைக்கப்பட்டது. இதற்குச் சாதனமும் இங்ஙனமே என்றும் இருப்பவர் இடையே நாம் இருப்பதாம்.

"நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"
(5.2.1) என்ற திருவாசகம் காட்டும் வேட்கையும் இதுவே.

சிவபுராணத்தில் 'நமச்சிவாய வாழ்க' என வாழ்த்தியது நாதன் திருநாமத்தையே என்பதால் அந் நாமம் சி என்று குறிக்கத் தகும்; அடுத்து வாழ்த்திய நாதன் தாள் சத்தியே என்பதால் வ என்று குறிக்கத் தகும். இதனால் சிவ மந்திரம் பெறப்பட்டது.

அச்சோப்பதிகம் அத்தன் எனத் தொடங்கி அம்மை என முடிவதால் அதுவும் சிவ மந்திரத்தை உணர்த்திற்று.

உடையாள் என்ற பாடல் திருவாசக நடுவில் உள்ளது.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

இங்ஙனம் திருவாசக முதல், இடை, கடைகளில் சிவனருளாய சிவன்திரு நாமம் பொருந்திப் பொலிவதை உணர்ந்து மகிழ்வோம்!

இங்ஙனமே ஓங்காரமும் சிவபுராணம் முதல் அச்சோபதிகம் வரை முந்திய முதல் நடு இறுதியுமாகி இருப்பதைக் கண்டு உள்ளம் குளிரலாம்!

திருப்பெயர் 80

திருப்பெருந்துறைக்குச் 'சிவபுரம்' என்ற திருப்பெயர் உண்மையைக் கூறுகிறது.

'சிவபுரத் தரசே ! திருப்பெருந் துறையுறை சிவனே' என்று வாழாப்பத்துப் பாடல்கள் பத்திலும்,

'தென்பெருந்துறையாய், சிவபெருமானே!
சீருடைச் சிவபுரத் தரசே!'

என்று கோயில் திருப்பதிகத்திலும் (பாடல் 2) கூறப்பட்டன.

யாத்திரைப் பத்து 6ம், 8ம் பாடல்களில் சிவனுலகம் என்றபொருளில் சிவபுரம் என்ற சொல்லாட்சியும், திருத்தசாங்கத்தில் 'பார்மேற் சிவபுரமாகிய திருப்பெருந்துறையை ஒத்தது உத்தரகோசமங்கை' என்ற கருத்தும் காணப் படுகிறது. உத்தரகோச மங்கையில் முன்னர் கணநாதர்களுடன் ஆகமங் கேட்ட அடிகளே மண்ணில் வந்து திருப்பெருந்துறையில் மீண்டும் அச் செம்பொருளைக் கேட்டார் என்று புராணம் கூறுவதும் காண்க.

'நீக்கி முன்னெனைத் தன்னொடும் நிலாவகைக்
குரம்பையில் புகப்பெய்து' (26.8)

என்ற அகச்சான்றும் திருவாசகத் துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர்கள் 87 - 88

சிறந்த குருந்தடியில் வதிபவரே கல்லாலின் கீழமர்ந்தவர் என்பதை இப் பெயர்கள் காட்டுகின்றன. முன்னர் 48;49ம் திருப்பெயர்களில் காட்டப்பட்ட முறை இங்கு மாற்றிக் காட்டப்படுகிறது. திருப்பெருந்துறை ஆதி கயிலாயம் என்ற கருத்தை இது வலியுறுத்தும்.

அருட்பத்தின் பாடல்கள் பத்திலும் செழுமலர்க் குருந்தம் மேவிய சீர் சிறப்பிக்கப் படுகிறது.

திருப்பெயர் 89

இறைவன் அந்தணவடிவங் கொண்டமையைக் காட்டுகிறது.

'அந்தணன் ஆவதும் காட்டிவந்தாண்டாய்' (20.8)

' அந்தணன் ஆகிவந்திங்கே அழகிய சேவடிகாட்டி' (18.10)

'திருப்பெருந்துறை உறையும் பனவன்
எனைச் செய்த படிறு அறியேன்' (34.3)

என்றும் திருவாசகத்துட் காணலாம். திருப்பெயர் 127 இன் விளக்கமும் காண்க.

திருப்பெயர் 91

ஆன்மநாத குருவைத் ' தாயன்பின் கடல்' என்று பேசுகிறது:-

'தாயிற்சிறந்த தயாவான தத்துவனே' (1.61)

"சாயா அன்பினை நாள் தொறும் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி !"(4.86-87)

'தாயில் ஆகிய இன்னருள் புரிந்த என் தலைவன் (5.4.9)

' அன்னை ஒப்பாய் எனக்கு' (6.16)

'நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு' (8.4)

'தாயான தத்துவனை' (8.7)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'தாயுற்று வந்தென்னை ஆண்டு கொண்ட
தன் கருணை' 10.10)

'தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ (10.12)

'தாயிற் பெரிதும் தயாவுடைய தம் பெருமான்' (13.3)

'தாதாய் மூவே ழுலகுக்கும் தாயே!
நாயேன் தனை ஆண்ட பேதாய்' (27.9)

'அம்மையே, அப்பா !' (37.3)

'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' (37.9)

'தாயாய் முலையைத் தருவானே !' (50.5)

'தாயே என்றுன் தாளடைந்தேன்' (50.5)

'அம்மை எனக் கருளியவாறு ஆர்பெறுவார்?' (51.9)

என்றெல்லாம் திருவாசகமும் காட்டுகிறது.

திருப்பெயர் 93

'மேலார்கண் மேலார்கண் மேலாய் நீயே' என்று அப்பரடிகளும்:
'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்' (47.8)
மற்றும் 'அப்பாலைக்கப்பால்' (8.11) என்று
திருவாதவூரடிகளும் உரைத்தனர்.

திருப்பெயர் 99 - 100

குருநாதனே தன்னை வாழ்த்த வாக்களிப்பவன். எந்த குருநாதனின் திருவருள் வெள்ளம் திருவாசகத் தேனாக உருவெடுத்து ஓடுமோ அவனே ஆசிரியர் திலகம் ஆவான்.

'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை' (10.12)

'வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து' (13.7)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ!" (33.5)

என்ற மணிவாசகங்களைக் காண்க!

திருப்பெயர்கள் 105 - 106

புலன் ஒடுங்குந் தவநெறிக்குப் புலப்படும் பொலிவே ஆன்மகுருநாதன். திருவாசகத்துள் 'அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளிக்கும்' (3.138) அவனே 'மற்றறியேன் பிறதெய்வம்' (38.5) என்ற அன்பர்க்குப் 'புகழ்ச்சியைக் கடந்த போகமாம் யோகத்தின் பொலிவாய்த்' (37.4) தன்னையே தருகிறான் (22.10). 'தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே' (7.13) என்று திருத்துறையூரில் வேண்டும் நம்பி ஆரூரருக்கு இறைவன் 'புலனொன்றும்படி தவத்தில் புரிந்த நெறி' கொடுத்தான் என்பது பெரிய புராணம் (226).

திருப்பெயர் 109

எல்லாம் அவன் இச்சை!

'இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' (7.12)

'ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம்' (7.11)

'இச்சைக்கானார் எல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்' (5.9.1)

'ஆயக்கடவேன் நானேதான்?
என்னதோ இங்கு அதிகாரம்?
காயத்திடுவாய், உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே!' (33.8)

என்பன திருவாசகங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர் 110

உண்மைத் தொண்டரிடம் அன்பு பூண்டவன்.

'யானும் பொய்யும் புறமே போந்தோமே' (5.9.5)

'புறமே போந்தோம் பொய்யும் யானும்' (5.9.6)

'மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர்' (5.10.2)

'பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யை' (9.12)

'அன்பர் ஆனவர்க் கருளி மெய் அடியார்கட்கு
இன்பம் தழைத்திடும்' (42.9)

என்பன வாதவூர் அடிகளின் மணிவாக்குகள்.

திருப்பெயர் 111

பிராரத்தவினை, சீவன் முத்தராலும் அனுபவித்துக் கழிக்கத் தக்கது என்பன சாத்திரங்கள்; ஆயினும் ஆன்மகுருநாதரின் அருள் வெள்ளம், துன்பக் குழிகளை மூடி அடியார்களை எளிதில் காக்க வல்லது. பின் வரும் திருவாசகங்கள் காண்க:-

"கேதக் குட்டம் கையற ஓங்கி" (3.78)

"மறுமையோடு இம்மையும் கெடுத்த பொருளனே!" (29.9)

"கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளி" (31.10)

ஆன்மநாதன் இதனைச் சாதிக்கும் முறையும் பின் வருமாறாம்:-

" தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன் கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதம் கெடுத்தென்னை ஆண்டருளும்
கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே!"(43.9)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாதவூரடிகளின் சரித்திரமும் இறைவனின் புண்சுமந்த பொன்மேனியும் ஈண்டு உரைத்தமைக்குப் போதிய சான்று ஆகாவோ? இவ்வண்ணமே தம்மைக் கொல்ல ஏவப்பட்ட களிற்றினைக் கருத்துறக் காணாமல் 'அரங்கிடை நூலறிவாளர் அறியப் படாததோர் கூத்தினை' (4.2.6) இயற்றும் "சேவில் திகழ்பவர் பொற்கழல் தெளிவுற்றனர்" (பெரியபுராணம் 1384) அப்பரும்.

திருப்பெயர் 121

ஆன்மா என்ற சொல் உடல், உள்ளம், உயிர், இறை ஆகிய நான்கையும் உணர்த்தும். ஈண்டு உயிரைக் குறிக்கும். உடல்மிசை உயிர் கலப்பினால் ஒன்றாகி உடலாகவே இயங்குதல் போல இறைவனும் கலப்பினுல் ஒன்றாகி உயிராகவும் ஏனைய படைப்பாகவும் திகழ்வான்.

"நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்
புலனுய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகேழெனத் திசை பத்தெனத் தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணொக்கம் ஆடாமோ?"(15.5) என்றும்

"வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"(5.2.5)
என்றும் திருவாசகத்துள் பேசப்படுகிறது.

"ஊனுய் உயிரானுய் உடலானுய் உலகானுய்" (7.1.7)

என்று சுந்தரரும்

"மண்ணும் புனல் உயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானுன்"(1.11.4)

என்று சம்பந்தரும் அருளினர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர் 122

இறைவன் உயிர் அருகிலேயே ஆன்மகுருநாதனுகவும், தோழனுகவும், காட்டுபவனுகவும், கூட்டுபவனுகவும் உடன் இருத்தலை இப்பெயர் குறிக்கிறது.

'உள்குவார் உள்கிற் றெல்லாம் உடன் இருந்து அறிதி' (4.75.3) என்று அப்பரடிகளும் 'எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்று அங்கம் குலைவ தறிவு' என்று குமரகுருபரரும், இறைவன் சாட்சியாக உடன் இருத்தலையும்

'ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே?
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணுதாரே?'(6.95.3)என்று அப்பரடிகள், வினைப்பயனை ஊட்டியும் தேற்றியும் இறைவன் உடன் இருத்தலையும் உரைத்தனர்.

" காட்டாதன எல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி"
(திருவாசகம் 8.6) என்ற அடிகளால் பேரின்ப வாழ்வையும் ஆன்மகுருநாதன் உயிருக்கு உடன் இருந்து காட்டுதலை மணிவாசகர் பகர்கிறார். உடல் என்ற மரத்தில் உயிர், இறை என்ற இரு பறவைகளும் உடன் இருப்பதாக உபநிடதங்களும் உருவகிக்கின்றன.

திருப்பெயர் 123

பசு, பாசங்களுக்கு வேறாய் மேலான பரம்பொருளாக. ஆன்மநாதன் இருத்தலை இத்திருப்பெயர் உணர்த்துகிறது.

'கடுகூர் பசிகாமம் கவலை பிணி இல்லா' ரே (1.87.1) பதி ஆவார்.

திருப்பெயர்கள் 121,122,123 ஆகியன இறைவன், படைப்புடன் ஒன்றாய், உடனுய், வேறாய் இருத்தலை அம்முறையே கூறின. இவற்றை இணைத்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஒன்றும் நீ அல்லை; (நீ) அன்றி ஒன்றில்லை;
யார் உன்னை அறிய கிற்பாரே?" (22.7)

என்று திருவாசகம் பேசுகிறது.

திருப்பெயர் 124

திருப்பெருந்துறையே ஆதிகயிலை என்று சுட்டுகிறது. காலாக்கினி உருத்திரருக்கு அருளும் முகத்தால் குருந்தமூலத்தின் வடகிழக்கில் மகிழவனத்தில் ஆதி கயிலாய நாத இலிங்கமாக எழுந்தருளியதால் ஆன்மநாதரே ஆதி கயிலாய நாதர் என இலீலையால்பெயர் பெறுவார். இவ்விடமும் இக் கோயிலும் பழைய பெருந்துறை என்றும் வாதவூரடிகள் வந்தபோது கண்டதும் இக்கோயிலே என்றும் கருத்துகள் நிலவுகின்றன. இவை சரியல்ல. தலபுராணப்படி, காலாக்னி உருத்திரர் திருப்பெருந்துறையில் தவமியற்றும் முன்பே பிரமனுக்குக் குருந்தடியில் பிரணவபீடத்தையும், பதுமராகச் சோதி விரியும் அம்மையின் பாதுகைகளையும் இறைவன் அளித்துப் பூசிக்கச் செய்தமை அறியத்தகும்.

"ஆலின்முனம குருந்தமரும் ஐயா நீ இவ்வுழி நின்
கோலமலி அருளுருவம் கொளல் வேண்டும்"
(பழைய புராணம் 349)

என்று ஆன்மநாதரை உருத்திரர் வேண்டுவதால், கயிலையில் கல்லாலின் கீழ் அமர்ந்து நால்வர்க்கும் அருளும் முன்னரே கூட இறைவன் குருந்தடியில் யோகபீடமாகப் பிரமனின் பூசைப்பொருட்டு அமர்ந்தான் எனப் பெறலாம். குருந்தமர் செல்வனுக்குப் புரூரவா ஆறு சபைகளுடன் கோயில் ஒன்று எடுத்தான் என வடமொழிப் புராணம் உரைக்கிறது. ஆதிகயிலை என்பது ஆலின்முனம் குருந்தடியில் அமர்ந்ததால் உண்டான பெயர்; ஆதிகயிலைநாதராகிய ஆன்மநாதர் பின்னர் உருத்திரருக்காக இலிங்க உருவில் அமர்ந்ததால் அவ்இலிங்கம் ஆதி கயிலாய நாத லிங்கம் எனப் பட்டதாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாதவூரடிகள் திருப்பெருந்துறைக்கு வந்தபோது முந்நூறு அந்தணர்கள் ஆன்மநாதயோக பீடத்தையும், யோகாம்பிகையின் பாதுகைகளையும் பூசித்திருந்ததாகவும், அவருள் சிவஸ்வாமி என்பார் திருப்பெருந்துறைத் தல மான்மியத்தை அடிகளுக்கு அகமுருக எடுத்துரைத்ததாகவும், அன்றிரவு முழுவதும் துயிலாது ஆன்மநாதரின் மகிமைகளை எண்ணி இருந்த அடிகள், மறுநாள் காலை அக்கினி தீர்த்தத்தில் மூழ்கி வலம்வரும் போது குருந்தடியில் அடியார் நாப்பண் குருநாதரைக் கண்டு ஆட்கொள்ளப்பட்ட தாகவும் பழைய திருப்பெருந்துறைப் புராணம் கூறுகிறது.

ஆன்மநாதர் முந்நூற்றுவர் நாப்பண் மறைபயிற்றும் அந்தணனாக நெடுநாள் இருந்தமையைத் திருவாசகம் உணர்த்தும்:-

'செப்ப நான் மறைசேர் திருப்பெருந்துறை' (29.6)

'தெருளு நான்மறைசேர் திருப்பெருந்துறை' (29.9)

என்ற அடிகள் ஆன்மநாதன் மறைபயிற்றுவோனாகச் செப்ப என்றும் முந்நூற்றுவர் சிறார்கள் தெருளும் என்றும் பொருள்பட்டு இத்தலபுராணச் செய்தியைக் குறிப்பால் வெளிப்படுத்தும். பிரமனுக்குத் தோன்றி நான்மறைகளைத் தெருட்டி உடன் மறைந்தது போலன்றி முந்நூற்றுவர் நாப்பண் அதிககாலம் இறைவன் அமர்ந்தான் என்ற குறிப்பை

'நந்தம் பாடியில் நான் மறை யோனுய்
அந்தமில் ஆரியனுய் அமர்ந்தருளியும்' (2:21-22)

என்ற அடிகள் உள்ளடக்கி உள்ளன.

இங்ஙனம் இருந்த காலத்தில் மறையவராய் வந்த ஆன்மநாதர் முந்நூறு வீடுகளிலும் நாளொன்றுக்கு ஒரு வீடாக உணவருந்தி வந்தனர் என்று வடமொழி மான்மியம் உரைக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே' (20.8)

என்று அடிகள் திருப்பெருந்துறையானை விளிப்பது இதனைக் குறிப்பான் உணர்த்தும். இவ்வடிகள் பொதுவில் அடியார்களை உணர்த்தினும் இரட்டுற மொழிதலாகத் தலபுராணத்தை அறிவிப்பதில் தவறில்லை.

தில்லையில் அருளப்பட்ட 'சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்.......' என்று விவரிக்கப்படும் அடியார் செய்கைகளால் பொதுவில் அடியார் அனைவரும் உணர்த்தப்படும் போதே குறிப்பால் தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர் அறிவிக்கப்படுவதில் குற்றமின்று.

அடிகள் ஆதி கயிலாய இலிங்கத்தையும் கண்டு வழிபட்டிருப்பார் என்றாலும், அவர்

'செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேன்' (40.10)

என்று (கோயில் எடுப்பேன் என்னுது திருப்பணிகள் செய்வேன் என்று) கூறுவதால் குருந்தமூலத்தில் கோயில் சிறிய அளவிலாவது இருந்தது என்றே போதரும். இதன்வழித்

'திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி'(20.8)

என்றமை 'என்னால் திருப்பணி செய்யப்பட உரியதாக இக்குருந்தமூலக் கோயிலைக் காட்டி' என்று பொருள்படுவதில் குற்றமின்று. பூசையில் தாம் அலங்கரித்த ஈசன் உருவை அடியார் அழகு பார்ப்பது போன்று, தம் திருப்பணிகளுக்குப் பின்னர் அடிகளும், "தீட்டார் மதில்புடை சூழ் தென்னன் பெருந்துறையான்" (8.6) என்றும் "தேரார்ந்த வீதிப் பெருந்துறையான்" (13.8) என்றும் சுந்தரம் கண்டனர்.

மதுரையில் இடைக்காடன் பின் சென்று ஆலவாய்க்கு வடக்கில் வைகைக் கரையில் கோயில் கொண்ட பிரானை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதி சொக்கநாதர் என்பது போலவும், இவ்வண்ணமே காசியில் ஆதி விசுவநாதர் என்றொரு பெருமான் கொண்டாடப்படுவது போலவும் இங்கும் குருந்தமூலக் கோயிலுக்கு முன்னதாக 'பழைய பெருந்துறைக் கோயில்' தோன்றிவிட்டதாகக் கருதப் படுவது முரணே ஆகும். நம் கருத்து:- வாதவூரடிகள் வந்த காலத்தில் இரண்டு கோயில்களும் இருந்தன என்பதே. அடிகளின் திருப்பணிகளைத் தொடர்ந்து ஆன்மநாதரைப் புனப்பிரதிட்டை செய்யும் முறையை முந்நூற்றுவர் அடிகளுக்கு எடுத்துக் கூறியதாக பழைய புராணம் கூறும்.

பிரணபீடத்தில் குவளைசாத்தி வழிபடும் பழக்கத்தையும் சிவயோக நாயகி சந்நிதியில் சன்னல் அமைத்து அதன்வழி அம்மையைத் தரிசிக்கும் முறையையும் அடிகள் ஏற்படுத்தியதாக வடமொழி மான்மியம் கூறுகிறது.

திருப்பெயர் 125

தென்னன் பெருந்துறையானின் திவ்வியத் திருப்பெயராம் ஆன்மநாதன் என்பது அவன் உயிர்க்குலத்தின் தலைவன் - பசுபதி என்பதைப் பகர்கிறது.

"ஏரார் இளங்கிளியே! எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துறையாய் - ஆரூரன்
செம்பெருமான், வெண்மலரான், பாற்கடலான் செப்புவபோல்
'எம்பெருமான்! தேவர்பிரான்!' என்று" (19.1)

என்ற திருவாசகப் பாடலில் செம்பெருமான் (உருத்திரன்), வெண்மலரான் (பிரமன்), பாற்கடலான் (திருமால்) ஆகிய மூவரும் "எம் = எம்போன்ற எல்லாப் பசுக்களுக்கும் பெருமான் = தலைவராகிய ஆன்மநாதன்" என்று போற்றுவது காட்டப்படுகிறது. இப்பாடலும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"மூவராலும் அறியொணாமுதலாய ஆனந்த மூர்த்தியான்" (42.1) என்ற பாடலும் இன்ன பிறவும் திரிமூர்த்திபுரம் என்ற தலபுராணச் சிறப்பைக் குறிப்பனவாம்.

திருப்பெயர் 126

தீர்த்தங்களுக்குத் தலைவன் - நவதீர்த்தங்களும் 66 கோடி தீர்த்தங்களும் அமைந்த பெருந்துறைக்கு இறைவன். முந்நூறு அந்தணர்களின் நிலங்களைக் கவர்ந்து கொண்ட லுண்டாக்கன் (கௌமாரன்) என்பானை அரசன் முன் வழக்கில் வெல்ல 'அந்தணர் நிலங்கள் தோறும் எங்கு வெட்டினும் ஒருவெட்டில் நீர் ஊறும்' என அடையாளம் கூறித் திருப்பெருந்துறை முழுவதும் 66 கோடி தீர்த்தங்களை மண் அடியின் மேற்பரப்பில் (அந்தணராய் வந்த) ஆன்மகுருநாதன் சங்கல்பித்தான். இக்காரணம் பற்றிச் சிவபுரம் பெருந்துறை என்று தமிழிலும் பிருஹத்தீர்த்தக்ஷேத்ரம் என்று ஆரியத்திலும் கூறப்படும்.

தீர்த்தன் ஆகிய நாதன் என்பதும் பொருளாம்.

"தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்" (திருவாசகம் 7.12) என்பதால் உயிரைப் பற்றிய மும்மைமலமும் நீங்க நீராடும் வெள்ளமே ஆன்மகுருநாதனும். இவ்வுண்மை திருவெம்பாவை 13ம் பாடலாலும் உணர்த்தப்படும்.

திருப்பெயர் 127

சப்தம் (சொல்) என்பது வேதம்.

'சொல் (வேதத்தைத்) தமிழ் பாடுக' என்ற பெரிய புராணத்தால் இதனை அறியலாம்.

முந்நூற்றுவர் சிறார்களுக்கு மறை பயிற்றும் அந்தணனுக ஆன்மநாதனே திருப்பெருந்துறையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருவத்திருமேனியுடன் உலவிவந்தும் அவ்வந்தணர்களின் நிலங்களை லுண்டாக்கனிடமிருந்து அடையாளங்காட்டி மீட்டும் திருவிளையாடல்கள் புரிந்தான். இதனால் இறைவனுக்குச் சப்தநாதன் என்ற திருப்பெயரும், திருப்பெருந்துறையில் இறைவனே நான்கு வேதங்களையும் முன்னர் பிரமனுக்குக் கற்பித்தமையால் ஊருக்குச் சதுர்வேதபுரம் என்ற பெயரும் வழங்கலாயின.

திருவாசகம் அருட்பத்தில்

'திமிலநான் மறைசேர் திருப்பெருந்துறை!';
'செப்ப, மாமறைசேர் திருப்பெருந்துறை';
'தெருளும் நான்மறைசேர் திருப்பெருந்துறை';

என்றும் வருகின்றன. ஆன்மநாதனே செப்ப, மாமறைகள் திருப்பெருந்துறையைச் சேர்ந்தன என்றும் இதனுல் முந்நூற்றுவர் தெருளும் மறைகள் அவை என்றும் பொருள் கொள்ளலாம்.

"நந்தம் பாடியில் நான் மறை யோனுய்
அந்தமில் ஆரியனுய் அமர்ந்தருளியும்" (2.21-22)

என்ற அடிகள் வாக்கிலும் இக்கதைக் குறிப்பு உள்ளது. நந்தம்பாடி என்பது திருப்பெருந்துறை; பாடி = ஊர் அல்லது பாடி (படை) வீடு; அடிகளின் மலப்பகையை மாய்க்கும் வீரனுக அடியார் சேனையுடன் ஆன்மகுரு எழுந்தருளிய பெருமையால் / உரிமையால் நம் தம் பாடி என்றனர்.

மறைபயிற்றும் அந்தணருக்கு ஆன்மநாதன் வந்த அன்று முதல் இன்றும் திருப்பெருந்துறையில் ஈசனுக்குப் புழுங்கல் அரிசிச் சோறும், பாகற்காய்க் குழம்பும் நிவேதிக்கப்பட்டு வருகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பெயர் 128

சிவன் என்ற சொல் சத்தியுடன் கூடியவன் என்ற பொருளையும் தரும். சதாசிவன் என்பதால் எப்பொழுதும் அம்மையுடன் இருப்பவன் என்றாகிறது.

"எப்போதும் சக்தியுடன் கூடியவனுகிய சம்புவை இதய வெளியில் தியானிக்கக் கடவது; சிவன் ஒருவனே தியானிக்கத் தக்கவன்" என்று அதர்வசிகை உரைக்கிறது அம்மையப்பராய் இருத்தலே பரம்பொருளின் உண்மையாம்; ஏனைத் தேவரிடமிருந்து பிரித்து மகாதேவரை உணர்வதும் இதனுலேயாம்.

"நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம் தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்" (10.15)
"ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது ஆய ஒருத்தன் மான்பழித் தாண்ட மென்னேக்கி மணுளன்" (18.4) என்றும் தன்னை ஆட்கொண்ட குருநாதர் சிவயோக நாயகியை என்றும் அகலாதவர் என்று வாதவூரடிகளால் விளக்கப்படுகிறது. இறைவனுக்கு என்றும் உள்ள இவ்வடிவம் இறைவனின் 'தொன்மைக் கோலம்' என்று திருவாசகத்தால் சிறப்பிக்கப் படுகிறது:-

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!" (10.18)

ஆன்மநாதகுருவின் அடியார்களுக்கு முன்வந்து அருள் சுரப்பவள் சிவயோக நாயகி அம்மையே!

"நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவில்லா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும்
இன் அருளே" (திருவாசகம் 7-16)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவனே அவளுக்கு எல்லாம்:-

"எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்,
தமையன் எம் ஐயன்" (திருவாசகம் 9.13)

அவளே அவனுக்கு எல்லாம் :-

"கனகமார் கவின்செய் மன்றில்
அனக நாடகற்கு எம் அன்னை
மனைவி, தாய், தங்கை, மகள்" (சிதம்பரச் செய்யுட் கோவை)

அவளை அவன் திருவடி என்பர்.

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல் கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள் தெளிவார்க்கே
(திருமந்தரம் 138)

திருவடியாகவே அவள் காட்சி தந்து உணர்த்துவது திருப்பெருந்துறையிலேயாம். திருவாசகம் முழுமையும் திருப்பெருந்துறையானின் திருவடிப் புகழ்ச்சியாம்.

போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்;
போற்றி யருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்;
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணைஅடிகள்;
போற்றி மால், நான் முகனும் காணுத புண்டரிகம்;
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்;
போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்!

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாசகப் பெருமை

மும்மறை, தேவர் மூவர், முத்தொழில் கிளைத்துச் சாயை
மும்மல அவத்தை மூன்றின் முதிர்வெயில் தணிப்ப, மூலச்
செம்மை ஓர் எழுத்தால் ஞானச் செழும் பொருள் மலர, வாசம்
அம்மையாய், அத்தன் தேனுய் அதன் சுவை அறிந்(து)
ஆராமே

வாதவூர் வண்டு மொய்த்து வாசக அடையில் சேர்த்த
கோதறு குருந்த மூல மருந்தினைக் கூத்த வேடன்
மாதெழில் மார்பில் தீட்டும் மலர்க்கரக் கோலால் மீட்டு
வேதஞ்செய் வண்டைக் காட்ட வேதனைக் காட்டும் வண்டே.

(உருவக விளக்கம்)

திருப்பெருந்துறையில் இறைவனே குருந்தமரவடிவில் திகழ்கிறான். இம்மரத்திற்கு மூன்று பிரதான கிளைகள் உள்ளன. இக்கிளைகளின் அடிப்பாகங்களாக மூன்று வேதங்களும், நடுப் பாகங்களாக மூன்று தெய்வங்களும், நுனிப் பாகங்களாக அவரியற்றும் முத்தொழில்களும் விளங்கும். (அலகில் கலைகளையும் அவையுணர்த்தும் அறங்களையும் இலைகளாகவும் அவை பரப்பும் நிழலாகவும் கொள்க. இந்) நிழல், மும்மலகாரியமாகிய மூன்று அவத்தைகளால் விளையும் முதிர்ந்த வெயிலைச் சற்றே தணிக்கின்றது.

இத் தெய்வதருவின் வேராகப் பிரணவம் உள்ளது. (வேரில் நீரூற்றிப் பேணுவதால் மரத்தில் மலர் உண்டாவதை யொத்து) குருவடிவாம் பிரணவ உபாசனையால் அப்பிரணவத்தின் செழும் பொருளாகிய ஞானம் மலர்கிறது. (இறைவனே பிரணவப் பொருள் என்பதால்) இம் மலரின் மணமாக யோகாம்பிகையும், தேனுக ஆன்மநாதரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருப்பதை அறிந்த வாதவூரடிகள் என்னும் வண்டு, அச்சுவையை அறிந்து ஆராமையால், மலரைச் சுற்றிச் சுற்றி மொய்த்து, அவ்வின்ப அனுபவத் தேனைத் திருவாசகம் என்னும் தேனடையில் சேர்த்திருந்தது. மலரில் உள்ள தேனை வண்டு மட்டுமே அறியும். மக்களுக்கு வண்டு உமிழ்ந்த தேனே பயன்படும். வாதவூர் வண்டு சேர்த்ததோ கோதுகள் நீங்கிய (தெளிந்த) குருந்த மூல (மூலம் = வேர் = பிரணவம்) மருந்து! இதனைத் தில்லைத் கூத்தன் என்ற வேடன், சிவகாமி அம்மையாரின் மார்பில் தொய்யில் வரையும் தூரிகையாகப் பயன்படும் மலர் போன்ற தன் கை என்னும் கோலால் (கோல் = அம்பு, எழுதுகோல், தூரிகை) (வேடன் அம்புதொடுத்துத் தேனடையினின்றும் தேனை ஒழுக்கிச் சேகரிப்பது போல், நம்மனோர் பொருட்டு) எழுதி மீட்டுக் கொடுத்தான். எழுதப்படும் வேதத்தைத் தமிழிற் செய்த வாத வூ ரடிகள் என்னும் வண்டை இவ்வண்ணம் இறைவன் தன் கைச் சாத்து மூலம் உலகிற்கு நன்கு அறிவித்தான். அடிகளோ 'வேத (திருவாசக)ப் பொருள் இவனே' என்று தானும் அவனைச் சுட்டாமற் சுட்டிக் காட்டி விட்டனர்!

பின்வரும் திருவாசகம் பேசும் ஆறெழுத்தாலேயே மந்திரராஜம் அமைந்துள்ளது.

போற்றி ஓம் நமச்சிவாய!
புயங்கனே மயங்குகின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய!
புகலிடம் பிறிதொன்றில்லை;
போற்றி ஓம் நமச்சிவாய!
புறமெனைப் போக்கல் கண்டாய்;
போற்றி ஓம் நமச்சிவாய!
சய சய போற்றி போற்றி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசிரியர்......

அமரர் பிரமஸ்ரீ நீடாமங்கலம் வை. வேங்கட சுப்பிரமணிய சாத்திரியாரின் மூன்றாம் குமாரராகத் திருவையாற்றில் 1960இல் பிறந்து தந்தையாரிடமும், ஆசிரியப் பெருந்தகை அமரர் பிரமஸ்ரீ புதுச்சேரி இரா. சுப்பிரமணிய சாத்திரியாரிடமும் சமய உண்மைகளைப் பயின்றார். தந்தையார் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் தொண்டாற்றி வடமொழியில் சாகித்தியம், வியாகரணம், வைத்தியம், வேதாந்தம், சமயம் ஆகிய துறைகளில் மூல ஏடுகளைப் பரிசோதித்துப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். இவர் வட, தென் மொழிகளில் விரைந்து கவிபாடவும் வல்லவராயிருந்தார். ஆசிரியப் பெருந்தகையார், புதுவைப் பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகத்தில் வடமொழிப் புலவராய்ப் பணிபுரிந்து சைவ ஆகமங்கள் உட்படப் பல நூல்களைத் திருத்தமுறைப் பதிப்பித்துள்ளார்.

இவ்விரு குரவர்களின் மாணவராகிய திரு. வே. இரமணன் இளமை முதல் தென் மொழியில் கவி புனைவதில் தேர்ச்சியுற்றிருந்தார். இயற்றமிழ்ச் செய்யுள்களும், இசை வரிகளும் (கீர்த்தனங்கள்) இறைவன் திருவடிக்கே ஆக்கும் இயல்பினர். இவரால் அண்மையில் பாடப்பெற்ற சிற்றிலக்கியங்கள் சில:-

திரு நீற்று வெண்பா; சிவமகிமைத் துதி; திருவொற்றியூர் வடிவுடை அம்மை பதிகம்; திருவொற்றியூர் வடிவுடை அம்மை மாலை; திருவனந்தை ஸ்ரீகண்டர் விருத்தம்; பெரியபுராணப் பெண்டிர் போற்றிக் கலி வெண்பா முதலியன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவற்றுள் சிவமகிமைத்துதி, வடமொழியில் புட்பதந்த மகாகவியால் செய்யப்பட்டுத் தமிழில் முதன்முறையாகச் செய்யுளாக ஆசிரியரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வடமொழியில் உள்ள சிவத்துதிகளில் இத்துதி தலைமை சான்றது; தேவாரத்தைவிடக் காலத்தால் முந்தியது. கல்வெட்டுகளிலும் உரைநூல் மேற்கோள்களிலும் காணப்படுவது. இதன்பெருமை கருதிச் சிவரகசிய இதிகாசத்துள் இடம்பெறுவது; திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதி முனிவர்) திருமணப் படலத்தில் புட்பதந்தர் குறிக்கப்படுகிறார். இந்நூலுக்குத் திருமுறை அமுதம் என்ற பேருரை ஒன்றையும் ஆசிரியர் வரைந்து வருகிறார்.

பெரியபுராணப் பெண்டிர் போற்றிக் கலிவெண்பா, பெரிய புராணத்தில் இடம்பெறும் 51 மகளிரைப் புராணத்தில் காணும் வரிசை வழியே போற்றுவதாம். இது, அண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட Dr. T.N.R. அவர்களின் 'பெரிய புராணம் - திருமறைகளின் கவசம்' என்ற நூலில் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

திரு. வே. இரமணன் வெளியிட்டுள்ள நூல்கள்

1. **ஸ்ரீ மகாதேவ ஸ்மரணம்** - மகாதேவன் என்ற திருப்பெயரின் மகிமைகளைத் தொகுப்பது

2. **இறையருளா? எளிதில் ஈட்டலாமே!** - சிந்திய ஆகமத்தின் சாரமாகிய 'சிவபுண்ணியத் தெளிவு' என்னும் செய்யுள் நூலைத் தழுவி எளிய உரைநடையில் திருமுறை மேற்கோள்களுடன் வரையப்பட்ட நூல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. வைதிக நித்யானுஷ்டானம் - வேதப் பயனாம் சைவம் என்பதையும் சிவபூசை நித்ய கருமம் என்பதையும் முக்கியமாக நிறுவுவது. திருவையாற்றுத் தலபுராண ச் சுருக்கத்துடன் கூடியது.

4. ஸ்ரீ குமாரகிரிநாத நவரத்தின மாலிகை - முருகப்பெருமான் மீது வடமொழியில் எளிய நடையில் தோத்திரமில்லாக் குறையைப் போக்குவது; பாடல்களின் ஆதி எழுத்துக்களைச் சேர்க்க முத்தான முருக மந்திரத்தைத் தருவது. தமிழ் விளக்கத்துடன் கூடியது.

5. திருப்பெருந்துறைத் துதிநவ மணிகள் - இதுவரை வெளிவராத ஆதி கைலாஸ மான்மியத்தின் சாரமாக மூலவடமொழித் துதிகளைத் திருவாசக அடிப்படையில் தமிழில் விளக்குவது. தல மரபுகளையும் நுணுக்கங்களையும் விளக்குவது. நம் முதலாகவும் சிம்முதலாகவும் ஓதப்படும் ஐந்தெழுத்தின் இரு வழி முறைகளும் முத்திக்கு ஏதுவே என்று திருமுறைகளைக் கொண்டு தெளிவு செய்வது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்புகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்புகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெருளு நான் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்மை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிவொண் கதிர்வாள் உறைகழித்து
ஆனந்த மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இருநிலத்தே !